# ஏணி

99

இதழ்: 6



உயர்தர மாணவர் மன்றம்

யா/விக்னேஸ்வரக் கல்லூரி கரவெட்டி

## ஏணி இதழ் சிறப்புற வாழ்த்துகிறோம்

❋ பாடசாலை மாணவருக்குரிய சகல விதமான உபகரணவகைகளும், நூல்களும்

❋ விவசாய உற்பத்திக்கு தேவையான உரவகைகள் கிருமிநாசினிகள்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை**
**நெல்லியடி.**

**ஞானலக்சுமி ஸ்ரோஸ்**
**கரவெட்டி.**

## ஏணி இதழ் சிறப்புற வாழ்த்துகிறோம்

தரமான வெதுப்பக உற்பத்திகளுக்கு *சுபாஸ்*

சுத்தமான சிற்றுண்டி, குளிர்பான வகைகளுக்கு *லவ்லி கூல்பார்*

மிக நவீன முறையில் பாடல்களை ஒலிப்பதிவு செய்துகொள்ள *லவ்லி ரெக்கோடிங் சென்றர்*

**சுபாஸ்**
**பிரதான வீதி.**

**லவ்லி**
**நெல்லியடி.**

# ஏணி

## இதழ் – 06

1999

க.பொ.த உயர்தர

மாணவர் மன்றம்

விக்னேஸ்வரக் கல்லூரி

கரவெட்டி

## நூலின் விபரம்

| | |
|---|---|
| நூற் பெயர் | – "ஏணி" இதழ்–6 (சஞ்சிகை) |
| மொழி | – தமிழ் |
| வெளியீடு | – உயர்தர மாணவர் மன்றம்<br>யா.விக்னேஸ்வராக் கல்லூரி<br>கரவெட்டி |
| அளவு | – 8 x 10 |
| பக்கங்கள் | – 85 |
| அட்டைப்படம் | – திரு . சி . இரகுவரன் |
| கணனிப் பதிப்பு | – திரு.க .கப லநாதன்<br>(B.Sc , sp . maths, Dip in Ed)<br>கணனிப் பிரிவு.<br>யா. விக்னேஸ்வரக் கல்லூரி |
| வெளியீட்டுத் திகதி | – 1999 கார்த்திகை |

# உயர்தர மாணவர் மன்றம் ~ 1999/2000
# நிர்வாக சபை உறுப்பினர்கள்

காப்பாளர் . திரு . க. அம்பலவாணர் .
( B .A. , Dip in Ed , S.L. P S 1.)

உபகாப்பாளர்கள் . திரு . சோ . கருணேஸ்வரன்.
( B .Sc , Dip in Ed .)
செல்வி ந. கல்யாணி .
( B.A , Dip in Ed , M .Phil (.Tamil ) )

பெரும் பொருளாளர் திரு . கு. உதயமூர்த்தி.
( B.Sc , Dip in E... )

| | | |
|---|---|---|
| தலைவர் | செல்வன் . | ச. சுதர்சன் |
| உப தலைவர் | செல்வி . | இ . பத்மலோஜினி |
| செயலாளர் | செல்வன் . | த .திவாகர் |
| உப செயலாளர் | செல்வி . | நி.காயத்திரி |
| பொருளாளர் | செல்வி . | அ .அனுராதா |
| பத்திராதிபர் | செல்வன் . | க. பிரதீப் |
| இணைப்பத்திராதிபர் | செல்வி . | அ.அனுராதா |

**நிர்வாக உறுப்பினர்கள்**

செல்வி . பா . மனோஜா
செல்வன் . சி . ஸ்ரீரகுபதி
செல்வன் . பா . வாசவன்
செல்வன் . மு . றமேஸ்
செல்வன் . சி . பிரகலாதன்
செல்வி . இ. புவனமதி

**மலர்க்குழு உறுப்பினர்கள்**

செல்வன் ச. சதீஸ்வரன்
செல்வி த . ராஜதாரணி
செல்வன் சி . சிவசேயோன்
செல்வி யோ. ஆர்த்தி
செல்வன் செ .தில்லைவாசன்
செல்வி நி .காயத்திரி
செல்வன் த . ராஜேஸ்
செல்வி சோ. பரமேஸ்வரி
செல்வன் ம. கஜேந்திரன்
செல்வி பி . ஜெயச்சந்திரா
செல்வன் ந . பிரதீபன்
செல்வி ஆ கௌரி

## ஒளி கீ(ற்)றின் வெற்று → உள்ளே


* பாடசாலைக் கீதம்
* கல்விப் பணிப்பாளர் ஆசியுரை
* கோட்டக் கல்வி அலுவலர் ஆசியுரை
* அதிபரின் ஆசியுரை
* உபஅதிபரின் ஆசியுரை
* உப காப்பாளரின் ஆசியுரை
* பழைய மாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துரை
* மன்றத் தலைவர் உரை
* பத்திராதிபர் உரை
* குரவர் பெருமை 01
* நாலடியார் 02
* கூட்டுறவும் நாட்டுயர்வும் 04
* கம்பியூட்டரும் அதில் ஏற்பட்ட பிரச்சனைகளும் 06
* விழியாலே மொழிபேசு 08
* சிந்தனைத் துளிகள் 09
* கணனி வைரஸ் தாக்கம் 10
* பொது அறிவு வினாக்கள் 11
* சமுதாயமும் கலைகளும் 12
* இலத்திரனியல் தபால் 14
* சிறகொடிந்த பறவை 16
* பொதுப்பொருளாதாரத்தில் அரசின் பங்களிப்பு 18
* Y 2 K உலகைத் திசை திருப்புமா 21
* பள்ளிச் சோதனை 23
* வரதட்சணையின் கொடுமை 24
* மரம் நட்டு சுகம் காண்போம் 26
* Why I study English 27
* பணம் 28
* சிந்தனைக்கு சில துளிகள் 28
* சூழல் மாசடைதலைத் தவிர்த்தல் 29
* விஞ்ஞானக் கல்வியும் இலக்கியக் கல்வியும் 31
* பெண்ணே விழித்தெழு 33
* தொடர்பாடற்றுறையில் இன்றநெற் 34
* இன்றைய வாணிப நடைமுறை விடயங்கள் 36
* ஏழைமனம் 41
* தவிப்பு 44

* பொது அறிவுப் புதிர்கள் 46
* ஓசோன் படையின் சிதைவும் அதைப் பேணலும் 47
* தாயுள்ளம் 49
* பாரதி கண்ட சமுதாயம் 51
* கலைந்த கனவுகள் 53
* பெண்ணே செயற்படு விழித்தெழு 57
* மீன் 58
* கருங்குஷ்டம் 61
* சைவசித்தாந்தம் 63
* பெண்கள் உத்தியோகம் பார்க்கலாமா ? கூடாதா ? 66
* சிலப்பதிகாரம் வழக்குரை காதை 69
* புறநானூற்றினூடாக சங்ககால வாழ்க்கை 72
* விழிப்பு 75
* அன்பின் சங்கமம் 78
* உலகை நோக்கி 80
* யூரோ 81
* நடைமுறை இலங்கையில் கொடுகடன் அட்டையின் பயன்பாடு 83
* நன்றியுரை
* மன்ற உறுப்பினர்கள்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

# கல்லூரி கீதம்

வாழ்கவே வளர்க வாழ்கவே —வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே , வாழ்கவே

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்
இலைமறைகாயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக் கண்டிடுவோம்
(வாழ்கவே)

ஆங்கிலம் தமிழ்மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்
தேங்கிய புகழ்தன் ஊற்றிடமாகத்
திறன் பணி கண்டிடுவோம்
(வாழ்கவே)

வர்த்தக இயலும் தொழில் முறைக் கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்
நர்த்தனம் இசைகள் நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்
(வாழ்கவே)

எண்ணொடு எழுத்து என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்
விண்ணக இன்பம் மண்ணினில் கல்வி
என்றுறை கூறிடுவோம்.
(வாழ்கவே)

# கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

விக்னேஸ்வரக் கல்லூரி உயர்தர மாணவ மன்றத்தின் ஆக்க வெளியீடான "ஏணி" வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அதுவும் ஆறாவது இதழாக மலர்வதைக் கேட்டு செவிகுளிருகிறேன். பாடசாலைகளில் மன்றங்கள் அமைத்து மாணவர்களின் ஆற்றலைத் தூண்டி தமிழ் வளர்க்கும் பணி காலோசிதமான செயற்பாடாகும். மாணவர்களின் மொழித்திறன் விருத்தியை வளர்த்தெடுக்கும் நோக்குடன் இவ்வகை மன்றங்கள் எமது பாடசாலைகளில் இயங்கி வருவதை நாம் அறிவோம். மாணவர்களிடம் மறைந்திருக்கும் மொழித்திறன்களை, படைப்பாற்றலை வளர்த்தெடுக்க "ஏணி" போன்ற இலக்கிய வெளியீடு உதவுகின்றது. இவ்வகை வெளியீடு தொடர்ந்து வெளிவருவது விரும்பத்தக்கது.

இன்றைய மாணவர்கள் தாய்மொழி மூலம் கல்வி கற்பவர்கள் எனவே தாய்மொழியில் புலமை பெறுவதால் அவர்களின் கல்வி அடைவுகள் உயர்வதற்கு வாய்ப்புண்டு. ஆகவே மாணவர்களின் தமிழ் மொழித்திறன்களை மேலும் விருத்தி செய்ய வேண்டிய அவசிய தேவை இன்றுண்டு.

இவ்வாறாக மாணவர்களின் மொழித்திறன், மொழியாற்றலை வளர்க்க "ஏணி" போன்ற இதழ்கள் அவசியம் தேவை. இந் நோக்கும் போக்கும் தெரிந்து அதன் தேவையை உணர்ந்து விக்னேஸ்வரக் கல்லூரி உயர்தர மாணவ மன்றம் "ஏணி" இதழினை வெளியிட்டுள்ளது.

இவ் "ஏணி" இதழ் காலச் சூழ்நிலையோடு சார்ந்து வினைத்திறனும் வினைப்பயனும் கொண்ட மாணவர்களின் படையலாக, இலக்கியப் புதையலாக, காலக்கண்ணாடியாக மலர்ந்துள்ளது உண்மையில் வரவேற்க வேண்டிய ஒன்று. ஏணியை மலரச் செய்யத் துணிந்த உயர்தர மன்ற மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இவர்களுக்கு உந்து சக்தியாக இருந்து வரும் அதிபர் ஆசிரியர்களின் பக்கபலப் பங்களிப்பு விரும்பத்தக்கது.

மேலும் இவ் ஏணி இதழ் தொடர்ந்து ஆண்டு தோறும் வெளிவந்து மாணவர்களிடையே வாக்கிய வழுவை நீக்கி மொழிச் செம்மையைப் பேணும் அதே வேளை அமிழ்தினும் இனிய எம் தாய்மொழியில் பற்றினையும் வளர்க்க வழிவகுக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

க. சிவராசா
கல்விப் பணிப்பாளர்

வலயக் கல்வித் திணைக்களம்
வடமராட்சி
புலோலி.

# கரவெட்டி கோட்டக் கல்வி அலுவலரின் ஆசிச்செய்தி

யா/ விக்னேஸ்வராக்கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வெளியீடான ஏணி சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இக் கல்லூரியினால் வருடாந்தம் வெளியீடு செய்யப்படும் ஏணி சஞ்சிகை , மாறி வரும் உலகில் ஏற்படும் மாற்றங்களை சுமந்து வருவதன் மூலம் தனது உயர்தர மாணவனையும் ஏனைய மாணவரையும் மட்டுமன்றி எமது பிரதேச மாணவரையும் எதிர்காலத்திற்கு பொருத்தமுடையவர்களாக்க பெரிதும் உதவும் என எதிர்பார்க்கின்றேன்.

மேலும் ஏணியை நெறிப்படுத்திய அதிபர் ,ஆசிரியர் , மாணவர்களின் இடையறா முயற்சியையும் பாராட்டுகின்றேன். ஏணி தொடர்ந்தும் மாணவரின் அறிவு பெருகிட படியாக நின்றிட இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

சி . புஸ்பலிங்கம்<br>
கோட்டக்கல்வி அலுவலர்<br>
கரவெட்டி

# அதிபரின் ஆசிச் செய்தி.............................

கலைமகளின் கடைக்கண் வீச்சில் கல்வி அலை பொங்கிப் பிரவாகிக்கும் விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மாணவர்களின் படைப்பு இலக்கிய இதழான “ஏணி” இதழ் ஆறாம் அகவை இதழாக அடியெடுத்து வைத்து மலர்ந்து மணம் பரப்பும் இவ்வேளையில் ஏணிக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அகமகிழ் வெய்துகிறேன்.

உயர்தர மாணவ மன்றத்தின் பெருமுயற்சி கண்டு பெருமையடைகின்றேன் மரபுவழி மாறாது புத்துணர்ச்சியுடனும், புதுப்பொலிவுடனும் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கி முத்தமிழாய்ப் பூத்திருக்கும் ஏணி இதழ் அரங்கேறி, ஆய்வுக்குட்பட்டு மாணவர் கைகளில் தவழப்போகிறது. இம் மன்ற மாணவ மாணவியர் எதிர்கால மாணவ மாணவியருக்கு எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும் என்று விரும்புவதோடு ஏணி மூலமாக இவர்களை இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

மலரப்போகும் இருபத்தியோராம் நூற்றாண்டின் சிற்பிகளான இன்றைய மாணவர்களின் புதிய, நவீனமான சிந்தனை ஓட்டங்களையும், எண்ணக்கருத்துக்களையும், இலைமறைகாயாக அவர்களிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களையும் தடையின்றி வெளியிட ஏணி பயிற்சிப்பட்டறையாக வழி சமைத்துள்ளது.

இவ் ஏணி இதழ் இயற்கை நியதிபோல் காலந்தப்பாது எதிர்காலத்திலும் புதுமை பல சுமந்து புதுப்பொலிவுடன் பவனி வந்து சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டுமென அவாவி நிற்கிறேன்.

உயர்தர மாணவமன்றத்தின் ஏணி இதழ் வெளிவர முன்னின்று செயற்பட்ட பொறுப்பாசிரியர்களையும், அன்னை தமிழை அலங்கரிக்கும் அதேவேளை பாடசாலைத் தாய்க்குப் பெருமை சேர்க்கும் துடிப்புமிகு மாணவர்களையும் பாராட்டுகிறேன்.

ஏணி போல் உயர்க!<br>
ஏற்றம் பல பெறுக!

க. அம்பலவாணர்<br>
அதிபர்

யா. விக்னேஸ்வரக் கல்லூரி<br>
கரவெட்டி.

## கல்லூரி உப அதிபரின் ஆசிச் செய்தி ........

எமது கல்லூரி உயர்தர மாணவர்களின் படைப்பாக வெளிவரும் ஏணி இதழ் 6 சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஏணி , உயர்தரமாணவர் தம் ஆற்றலை வெளிப்படுத்தி உயரவைக்கும் தோணியென்றே கூறவேண்டும் . விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பது போல இளைய சமுதாயத்தின் இலக்கிய , கணித , விஞ்ஞானத் திறன்கள் இச் சஞ்சிகையிலே வெளிப்படுகின்றன .

இம்மலரிலுள்ள ஒவ்வொரு ஆக்கங்களும் உயர்தர மாணவரின் ஆக்கத்திறனையும் அயராத முயற்சியையும் உணர்த்துகின்றன நாளைய சமுதாயத்தில் நல்ல எழுத்தாளர்கள் உருவாவதையும் இச் சஞ்சிகையிலே காணமுடிகிறது . இது போல வருடங்கள் தோறும் ஏணிகள் வெளிவர வேண்டும் எனவும், எமது கல்லூரி மாணவரின் மொழியாற்றலை வளர்க்க வேண்டும் எனவும் நல்லாசி வழங்குகிறேன் ..

க. செல்வராசா
உப அதிபர்

யா .விக்னேஸ்வரக் கல்லூரி
கரவெட்டி .

# உப காப்பாளரின் ஆசி உரை

எமது கல்லூரி மாணவர்களின் பல்வேறுபட்ட ஆக்கங்களை உள்ளடக்கி தற்காலத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஆக்க சஞ்சிகையாக உயர்தர மாணவர் மன்றத்தின் " ஏணி " சஞ்சிகை வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நம்நாட்டின் புதிய கல்விச் சீர்திருத்த கொள்கைக்கு அமைவாக சுயதேடலுடன் கூடிய கற்றல், செயற்றிறன் மூலம் கற்றல், எதிர்காலத்தில் சிக்கலான அறிவியலுடன் போட்டி போடும் வகையில் கற்றல், வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொண்டு சமாளிப்பதற்காகக் கற்றல் முதலான பல்வேறு கோட்பாடுகளை வளர்த்தெடுக்கும் ஒரு கல்வி மேம்பாட்டுத் திட்டமாக இச் சஞ்சிகை வெளியீடு அமைந்துள்ளது

இவ் ஏணி சஞ்சிகை விஞ்ஞானம், வர்த்தகம், கலைப்பிரிவு மாணவர்களின் சிறுகதை, கவிதை, நாடகம், நவீன அறிவியல் போன்ற அம்சங்களை தன்னகத்தே அடக்கியுள்ளது. இச்சஞ்சிகை வெளியீடு மாணவர்களிடம் பல புதிய அனுபவங்களையும் வளர்த்து அவர்களின் எதிர்கால வாழ்க்கை சீரிய பாதையில் அமைய நிச்சயம் வழிவகுக்கும் என்பது நம்பிக்கையாகும்.

இச் சஞ்சிகை அழகுடன் புதுப்பொலிவுடனும் வெளிவருவதற்கு சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும், ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக மலர் சிறப்புற அமைய உதவிய ஆசிரியை செல்வி ந. கல்யாணி அவர்களுக்கும், பல்வேறுபட்ட கருமங்களிலும் எனது வலது கரமாக தொழிற்பட்ட ஆசிரியர் திரு கு. உதயமூர்த்தி அவர்களுக்கும், இச்சஞ்சிகையானது அழகுற கணனிப் பதிப்பில் வெளிவருவதற்கு முழுமனதுடன் உதவி வழங்கிய ஆசிரியர் திரு க. கமலநாதன் அவர்களிற்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

முன்னைய ஆண்டுகளை விட கூடிய மெருகுடன் வெளிவந்திருக்கும் ஏணி அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும் மாணவர்களை உயர்த்தவேண்டும் என்பது எனது அவாவாகும்.

சோ. கருணேஸ்வரன்.
பகுதித் தலைவர்

யா/விக்னேஸ்வராக் கல்லூரி
கரவெட்டி.

# பழைய மாணவ சங்கத் தலைவரின் வாழ்த்துரை

மாண்புமிகு மாணவ மணிகளே

கணனியும் ஆங்கிலமும் ஆதிக்கம் செலுத்தும் அவனியில் தமிழின் செழுமை குன்றாது அழகு நடையில் பல ஆக்கங்களைத்தாங்கி வாசமிகு புதிய இதழை விரிக்கின்ற இந் நேரத்தில் என் நெஞ்சமெங்கும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கிப் பிரகாசிக்கின்றது.

குடத்துள் விளக்குப் போல விளங்கிய மாணவர்களின் எழுத்தாற்றலையும், மொழிவன்மையையும் இச்சஞ்சிகை வெள்ளிடை மலையாக்கி உள்ளது. இது கற்பனை அல்ல கடந்தகாலப் பதிவுகளின் ஒப்பீடு. நீங்கள் இன்னும் உயரவேண்டும். நீங்கள் உயர ஏணியும் உங்களுடன் உயரும்.

நாம் கடந்து வந்த பாதைகள் கடினமானவைகள். போகப் போகும் பாதைகளும் முட்கள் நிறைந்தவைதான் எத்தகைய இடர்கள் வந்தாலும் சோர்ந்துபோகாது நாளும் பொலிவுடன் இச்சஞ்சிகை வெளிவரவேண்டும், வளரும்

" கலைஞர்கள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறார்கள் "இது ஆய்ந்தறியப்பட்ட உண்மை. எமது பாடசாலையும் இந்தச் சஞ்சிகையும் சமூகத்தில் நல்ல எழுத்தாளர்களை, நல்ல சிந்தனையாளர்களை, அறிஞர்களை உருவாக்குவதற்கு ஏணி தொடர்ந்து உரிய காலத்தில் வெளிவரவேண்டும். இராமர் பாலம் கட்டுவதற்கு உதவிய அணில் போலவேனும் சகலரதும் ஒத்துழைப்பும் இச்சஞ்சிகைக்கு கிடைக்க வேண்டும்.

அதே போல இக்கல்லூரியினூடு, இச்சஞ்சிகையினூடு தம்மை வளப்படுத்தியவர்கள், ஏறிவந்த ஏணியை எட்டி உதைக்காது, தம்மை இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் இணைத்துக் கொள்வதன் மூலம் எதிர்கால சந்ததியும் மேலும் பல நன்மைகள் பெற்று, உயர்ந்த நிலையை அடைய உழைக்க வேண்டும்.

ஏணி சிறு உளிகள் செதுக்கிய சிற்பம் இது மேலும் சிறப்புறவும் இவ்வுலகிற்கு சிறந்த இலக்கிய கர்த்தாக்களை உருவாக்கவும் என்றும் என் மனம் நிறைந்த நல்லாசிகள்

க. தணிகாசலம்
பழைய மாணவர் மன்றத் தலைவரும்
லயன் கழகங்களின் பிராந்தியத் தலைவரும்.

# மன்றத் தலைவர் உரை.

உயர்தர மாணவர்களாகிய எங்கள் எண்ணத்தின் வண்ணமாக ஆற்றலின் வெளிப்பாடாக ஏணி என்னும் மலர் மலர்ந்துள்ளது . கல்விச்சாலையாம் பாடசாலையில் இலைமறை காயாய் மறைந்துள்ள மாணவர்களின் ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிப்படுத்தும் களமாக ஏணி வெளிவருகிறது . இவ் ஏணி ஆனது எம் ஆற்றலை வெளிப்படுத்தும் தோணி என்றே கூறவேண்டும் .

உயர்தர மாணவர்கள் அனைவரின் ஒருமித்த உழைப்பினாலேயே இச் சஞ்சிகை இவ்வாண்டும் வெளிவருகிறது கணித , விஞ்ஞான நுட்பங்களையும் , கலை வர்த்தக வெளிப்பாடுகளையும் கட்டுரை , கவிதை , ஆய்வுகள் என பல அமைப்புகளுடன் பல துறைச் சஞ்சிகையாக உங்கள் முன் வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் . இது தனிமலர் அல்ல பல மலர்களினைக் கொண்ட கதம்ப மாலை ஆகும் .

இந்த இதழானது வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர் , ஆசிரியர்கள் , மாணவர்கள் யாவரையும் எனது மனக்கண் முன் நிறுத்தி மகிழ்வடைகிறேன் .அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்

மேலும் இச்சஞ்சிகை வெளியீடு தொடர்பாக என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்த உயர்தர வகுப்பு மாணவ மாணவிகளுக்கு மீண்டும் என் அகங்கனிந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன் .

இவ்வாண்டு மலர்ந்துள்ள ஏணி இனிவரும் காலங்களிலும் புதுமை பொலிந்த மலராய் மலர்ந்து மணம் பரப்ப வேண்டும் என்கின்ற பேரவாவையும் இவ்வேளை முன்வைத்து தலைவர் உரைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்

ச . சுதர்சன்<br>தலைவர்

உயர்தர மாணவர் மன்றம்<br>யா. விக்னேஸ்வராக் கல்லூரி<br>கரவெட்டி

# பத்திராதிபர் உரை.

நாளைய உலகம் எமது கையில் இருக்கப் போகிறது அது மிகப் பாரமான ஒரு கடமை ஆகும். பொறுப்புக்களை ஏற்காது ஏங்க நேர்ந்தபோதும் பெரியோர் பங்களிப்பை , வழிநடத்தலை எதிர்பார்த்து நடக்கின்றோம்

சுமை முழுமையையும் தாங்க நேர்டும் போது தவிப்படையாது இருக்கவேண்டிய பயிற்சிகள் எவை என அறிந்து நாம் வழி நடத்தப்படும் இவ்வேளையில் ஒரு ஏணி வெளியீட்டை இங்கு படைக்கின்றோம் மாணவ நண்பர்கள் தத்தமது ஆற்றலை வெளிக்காட்டி இருக்கின்றனர்

பல துறை சார்ந்தவர்களின் படைப்புக்களால் எதிர்கால சந்ததி மிகுந்த பயனடையும் என்ற உணர்வோடும் அவரவர் ஆய்வுகளின் அடிப்படையில் , கற்பனையின் வினைத்திறனில் , கண்டு கேட்டு அறிந்த அடிப்படையில் இதனை வெளியிடுகின்றோம் .

ஏணி மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர , அதனை உயர்த்த எழுந்த ஓர் ஏடு . சித்திர வன்மைகள் தெரியலாம் , கவிதைகள் கற்பனைகள் தெரியலாம் , ஆய்வுகள் காணப்படலாம் , புத்திக்கூர்மை புலப்படலாம் .

சிறுபிள்ளைகள் ஆக்கம் இது பெரியோர் எம்மை விமர்சிக்கப்போவதில்லை வியந்து பாராட்டத்தான் செய்வர் , என்ற நம்பிக்கையுடன் இந்த ஏணியை உங்கள் முன் தருகின்றோம் .

மேலும் க.பொ. த . உ.த மாணவர்களின் கற்பனைக் களமான ஏணி – 6 அச்சு மூலம் வெளிவர சகல விதத்திலும் உதவிய அதிபர் ,ஆசிரியர்கள் , மாணவர்களுக்கும் நன்றி கூறி , மற்றும் எமக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி கூறி , இவ் ஏணி நிச்சயமாக எம்மை ஏற்றிவிட உதவும் என்றும் நம்புகின்றேன் .

செல்வன் . க . பிரதீப்
பத்திராதிபர்

உயர்தர மாணவர் மன்றம்
யா.விக்னேஸ்வராக் கல்லூரி
காரவெட்டி .

# குரவர் பெருமை

நானிலம் போற்றிடும் நன்மக்களெனத்திகழ
தேனினு மினியநற் குரவரின் துணை வேண்டும்
ஊனினை யுருக்கிமெய் உயர்வினை ஆக்கியே
வானினை யெத்தபுகழ் நற்குரவர் பெருமையன்றோ.

கருவில் உருத்தந்து கருத்தில் விழிகாத்து
உருவில் உயர்வாக்கி உலகில் புகழாக்கி
தருநற் கலைதந்து தளரா நிலைதந்து
ஒருநல் மகனெனவே உருவாக்கும் நல்லன்னை.

தான் பெற்ற செல்வம் தரணியில் தலை நிமிர்ந்து
நான் என்ற பெருமையுடன் நாளும் சீருறவே
நாள் பாரா துழைத்திட்டே நல்வழி காட்டிடுவோன்
தாள் தொட்டு பூசிக்க நல்குரவுத் தந்தையவன்

மண்ணில் உதிக்குமெக் குழந்தைகளும் நல்லவரே
மானிட வாழ்வதனில் நல்லவர் தீயவர்
எனவுரு வாக்குவோன் எண்ணில் அறிவுதரு
நற்குரு வேயென இயம்புதல் பெருமையன்றோ.

தன்னுடல் வாடினும் தான் பெற்ற செல்வத்தின்
இன்னுயிர் நிலைத்திட இனிதே பசிபோக்கி
இராப்பகல் பாரா துழைக்குமத் தியாகம்
மாதாதனுக் கன்றி மண்ணில் யார்க்குண்டு

நெற்றி வேர்வைசிந்த நெடுநேரம் வெயில் நின்று
குற்றமிலா நெஞ்சுடைக் குழந்தைதன் வளர்ச்சிக்காய்
சற்றும் தளராது சாலவே பாடுபடும்
சற்குணம் பிதாதனுக் கன்றி யார்க்குவரும்.

கோடி செல்வமென குறையிலா அறிவென்
சூடிடும் அன்பிருந்தென் நற்சுற்ற மிருந்தென்
ஆடியடங்கிடுமிவ் அற்ப உயிர் சிறக்கவே
ஈடிணை யில்லாத் தெய்வத்தினருள் வேண்டும்.

சி. சிவதீபன்
(2000 விஞ்ஞானம்)

# நாலடியார்

சங்கமருவிய கால இலக்கிய நூலான நாலடியார் அக்கால இலக்கியங்கள் அனைத்திலும் முதன்மையும் பிரபல்யமும் கொண்டதாகும். இந்தக் கணிப்பு கற்றவர்கள் அனைவராலும் காலத்திற்கு காலம் கூறப்பட்டு வருவதாகும். சமயச் சார்பற்ற இலக்கியங்களை தவிர ஏனைய இலக்கியங்களில் உயர்வு நிலை (மரியாதை ) கருதும் ஆர் விகுதி பெற்ற இலக்கியங்களில் ஒன்று நாலடியார் . மற்றது திருக்கோவையார் . திருக்கோவை கூட பேரின்பத்துறையையும் கூறுவது எனக் கருதப்படுவதால் அதுவும் சமயம் சார்ந்த இலக்கிய நூல்களில் ஆர் விகுதி கொடுத்து கூறும் பெருமையை தனதாக்கி கொண்டது , நாலடியார் திருக்குறளைப் பின்பற்றி அறத்துப்பால் , பொருட்பால் , காமத்துப்பால் என மூன்று பிரிவுகளை கொண்டது. ஆனாலும் சொல்லவேண்டிய கருத்துக்களைச் செறிவாகவும் , சுருக்கமாகவும் , கூறியது கூறல் என்ற தன்மை இல்லாமலும் மக்களை கவர்ச்சிக்கக் கூடிய அக்கால நடைமுறை உவமை அழகுகளுடன் மக்கள் முன் வைத்துள்ளது . எந்த ஒரு காலத்துக்கும் அதற்கு பிந்திய காலம் வேகமும் பரபரப்பும் கொண்டதாகவே அமையும். இன்னாளைய சமுதாய வேகத்துடனும் பரபரப்புடனும் ஒப்பு நோக்கும் போது இல்லை என்ற அளவுக்கு குறைவாக இருந்திருக்கலாம். ஆனால் அதற்கு முந்திய காலத்தை விட வேகமும் பரபரப்பும் சீவிய சுமைகளும் கூடியது. இதனை நன்குணர்ந்த சமணத்துறவிகள் திருக்குறளுக்கு ஒரு சுருக்கம் போல நாலடியாரை மக்கள் முன்வைத்துள்ளனர். அவ்வாறு வைக்கின்றவர்கள் கருத்துக்களை உடனுக்குடனேயே உள்வாங்க கூடியதாக அழகான உவமைகளை கையாண்டுள்ளனர். அந்த உவமைகள் உலகியல் வாழ்வில் அடிபட்டு வரும் தன்மையை கொண்டவை . துறவை வற்புறுத்த வேண்டிய துறவிகள் வானத்திலிருந்து குதித்தவர்கள் அல்லர் . உலகியல் வாழ்வில் காணப்படும் துன்பகரமான அனுபவங்களும் , அதற்கான காரணங்கள் என அவர்கள் கருதுகின்றனவும் சிலருக்கு சில நேரங்களில் துறவு மனப்பான்மையை உண்டாக்கலாம். அந்த மனப்பான்மையும் மனித நேயத்தை விலக்கி விட்டோரின் நிலைப்பாடு அன்று . அதனால் துறவை வற்புறுத்துகின்றவர்களும் நடைமுறை வாழ்வை புறக்கணித்து விட்டு துறவை வற்புறுத்த முடியாது. வெறுமனே துறவு சொல்லும் நூல் எதுவும் இல்லை , நாலடியார் அதற்கு விதிவிலக்காக முடியாது. ஆகவே உலக நடைமுறைகளையும் அது தழுவித்தான் செல்ல வேண்டும். அவ்விதமே செல்லவும் செய்கிறது. அதனாலேதான் பொறைமையுடைமை , பிறர்மனை நயவாமை , ஈகை , தீவினையாக்கம் , முதலான அதிகாரங்களை வெளிப்படையாக கூறுகிறது. ஈகை பற்றி வற்புறுத்துகிறது . எதுவானாலும் கருத்துக்களை பழவினை ஊழில் முடித்துக்காட்ட அது தவறவும் இல்லை . இதன் கருத்து மனித வாழ்வு மனிதவாழ்வின் நோக்கும் போக்கும் நல்லபடியாக அமையவேண்டும். என்பதே பல பசுக்கள் கூட்டம் கூட்டமாக நின்றாலும் ஒரு பசுக்கன்று தன் தாயைத் தேடிப்பிடித்துவிடும் என நாலடியார் கூறுவது எடுத்து விடும் பிறவிகள் சுமூகமாக அமையவேண்டும் எனில் இப்பொழுதே நன்னெறியில் வாழ்க்கை இயங்கவேண்டும் என்பதை நாலடியார் அழுத்தப்படுத்தவேண்டும் எனில் நடைமுறையுடன் இணைவு படுத்தித்தான் சொல்லவேண்டும். இந்த உண்மையை நாலடி முனிவர்கள் நன்கு உணர்ந்து கொண்டனர். அதனால் நடைமுறை கருத்துக்களை ஆங்காங்கே ஓடவிட்டுள்ளனர்.

இசையா ஒரு பொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை — நசையழுங்க
நின்றோடி பொய்த்தல் நிரை தொட்டு செய்நன்றி
கொன்றாரின் குற்றமுடைத்து

“வையத்து இயற்கை “ என்றால் இது என்றுமுள்ள நடைமுறை என்று தானே அர்த்தம். அதனால் உதவுவார் போலத் தோன்றி நடுவழியில் காலைவாரி விடுபவர்களை நாலடியார் சாடுகிறது. இவ்விதமான செயற்பாட்டை தவிர்க்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறது.

கல்வியின் அவசியத்தை வற்புறுத்தும் நாலடியார் தன் காலத்தும் கற்றவர்களை அவையில் இருத்துவதும், கல்வி அற்றவர்களை புறக்கணிப்பதும் இன்றும் கூட சகஜமாக நிகழ்வது. இது என்றுமுள்ள நடைமுறை. அன்றைக்கும் நடைமுறைதான். சில சந்தர்ப்பங்களில் மிக மிக அற்பர்கள் நல்லவர்களுடன் சேர்ந்து அந்தப் போதையில் சின்னத்தனமான காரியங்களைச் செய்து விட்டு அவர்கள் தப்பித்து கொள்கிறார்கள். அவர்களுக்கான இந்த வாய்ப்பு நல்ல ஒரு உறவால் ஏற்பட்டது. இன்றும் இதுதான் நடைமுறை. அன்றும் இதுதான் நடைமுறை. இதனையும் நாலடியார் கூறத் தவறவில்லை.

“ நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடையை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றல் – நுண்ணூல்
உணர்வில் ராஜிய ஊதிய மில்லார்ப்
புணர்தல் நிரயத்து ளொன்று ”

நுண்ணிய உணர்வு இல்லாதாருடன் சேர்ந்து வாழுதல் நரக வாழ்வுக்கு இணையானது என்கிறார்கள் சமணத் துறவிகள். நுட்பமான விவேகிகளுடன் சேர்ந்து வாழ்வது விண்ணுலக வாழ்வை ஒக்கும் எனவும் கூறுகிறார்கள். இவ்விதமான போக்கும் என்றைக்கும் உள்ள நடைமுறை தான் இதனை நாலடி கூறுவது வியப்புக்கு இடமாகாது.

எந்த வகையில் பார்த்தாலும் சமுதாய அமைப்பும் பொருளாதார தளமும் பண்பாட்டுக் களமும் மாறாதவரை அநேகமாக நடைமுறைகள் ஒரே மாதிரியாகவே அமைந்திருக்கும் இதனை நாலடியார் துறவிகள் முழுமையாக உணர்ந்திருக்கிறார்கள்

செல்வி அ. அனுராதா
( 2000 உயிரியல் )

*****************************************************************************

கல்வியின் சாரம் மன ஒருமைப்பாட்டிலேயே உள்ளது
வெறுமனே பல விஷயங்களைப் படிப்பதில் அல்ல

பிறருக்காகச் செய்கின்ற சிறிய செயல் கூட
நம்முள் ஆற்றலை வளர்க்கின்றது, நம்மைச்
சிங்கத்தை ஒத்த வீரர்களாக்குகின்றது
– – – சுவாமி விவேகானந்தர்

மனத்தில் எழும் சினவெழுச்சியை அடக்குக
மனத்தை அடக்கப் பழகுக
மனத்தால் தீய ஒழுக்கம் பழகாது நல்லொழுக்கம் பழகுக
– – – புத்த பகவான்

# கூட்டுறவும் நாட்டுயர்வும்

அறிவு வளர்ச்சி மனித வாழ்வில் பல பல மாற்றங்கள் ஏற்படுத்தி உள்ளது. மனிதன் அறிவுத்திறன் கொண்டு இல்லாத எதையும் உலகில் புதிதாகப் படைத்து விடவில்லை. ஆழ்ந்து சிந்தித்தால் உலகில் உள்ளவற்றையே மனித குலத்திற்கேற்ப மாற்றி அமைத்து புத்துருக் கொடுத்து வாழ்வைச் சிறப்படையச் செய்ய அறிவு வளர்ச்சி பயன்பட்டு வந்தது. மனித குல வரலாறு உணர்த்தும் உண்மை இது. கூட்டுறவு இந்த உண்மைக் கருத்துக்கு மாறுபட்டதன்று.

மனித குலம் அறிவு முதிர்ச்சி அடையாது, விலங்கோடு விலங்காக வாழ்ந்த காலத்திலும் கூட அதனிடம் கூட்டுறவுச் செயல்களும் காணப்பட்டன. கூட்டுறவின் தேவையை உணர்ந்தோ உணராமலோ ஆதி மனிதன் தனது வாழ்க்கை முறையில் கூட்டுறவைக் கடைப்பிடித்து வந்துள்ளான். co opration (கூட்டுறவு) என்ற ஆங்கிலப் பதம் லத்தீன் வினையடிச் சொல்லில் இருந்து பெறப்பட்டது ஆகும். இதன் நோக்கருத்து கூடி உழைத்தல் என்பதாகும். கூட்டு முயற்சி மூலம் கூடிய பலம் என்னும் பொருளும் கொள்ளப்படலாம். இன்று பொதுப் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒன்று கூடி உழைக்கும் பொருட்டுக் கூட்டுறவுச் சட்டத்தின் கீழோ அல்லது வேறு சட்டங்களின் கீழோ பதிவு பெற்ற நிறுவனங்களை குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகின்றது. மனித குலம் ஆதி காலத்தில் வாழ்ந்த குழு வாழ்க்கை முறையே கருத்துணர்வு மிக்க கூட்டுறவுக்கு மிகப் பொருத்தமான எடுத்துக் காட்டாகும். சமுதாய அமைப்பில் உள்ள பல குறைபாடுகளினால் பல அறிஞர்களை சிந்திக்கத்தூண்டின. 19ம் நூற்றாண்டின் தலை சிறந்த புரட்சி சிந்தனையாளரான கார்ல்மாக்ஸ் முதலாளித்துவ அமைப்பையே குழி தோண்டிப்புதைக்க வேண்டும் என்றார். சமதர்ம அமைப்பு ஒன்றை ஏற்படுத்த பொது உடைமை இலட்சியத்தை நோக்கி செல்லும் கருத்துக்களையும் செயற்பாட்டு முறைகளையும் வெளியிட்டார். மனிதனின் கருத்துச் சுதந்திரம், தொழிற்சுதந்திரம் போன்ற தனி மனித இயல்புகளின் வளர்ச்சிக்கு மாக்ஸ் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. முதலாளித்துவ அமைப்பில் உள்ள சமூக பொருளாதார கேடுகள் ஒரு புறம். அக்கேடுகளை அகற்றுவதற்காகத் தோன்றிய புரட்சிகரமான பொதுவுடைமைத் தத்துவத்திலுள்ள தனிமனித சுதந்திரத் தன்மைக் குறைபாடுகள் மறுபுறம். இவ்விரு புறத்திலும் உள்ள நல்ல அம்சங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட உயர் இலட்சிய நோக்கே கூட்டுறவு ஆகும். முதலாளித்துவ நோக்கிலிருந்தும் பொதுவுடைமை நோக்கிலிருந்தும் மாறுபட்ட இலட்சிய நோக்குடையது கூட்டுறவு.

கூட்டுறவை பல அறிஞர்கள் அறிமுகம் செய்தனர். அவர்கள் அறிமுகப்படுத்தும் போது ஒவ்வொருவரும் தமது நோக்கு. தேவை. அறிமுகப்படுத்தும் காலம். நேரம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பல்வேறு வழிகளில் செய்தனர். கூட்டுறவை முழுமையாக அவர்கள் கூற்றுக்குள் அறிமுகம் செய்யாது விடினும் சில அம்சங்களையாவது தெளிவுபடுத்த உதவும் வகையில் அமைந்துள்ளன. எல்லோருடைய அறிமுகங்களையும் தரமுடியாவிடினும் சில அறிஞர்களின் பெயரையாவது தருவது நன்று. றொபேர்ட் ஓவன், கல்வெர்ட், சேர். ஹோரேஸ் பிளங்கட், இ. எஸ். போகாடஸ், ரீ. டபிள்யூ. மோர்சேஸ், டாக்டர். இராதாகிருஸ்ணன், ஜான் ஸ்டுவர்ட்மில், தோமஸ் கார்லைமல். வோக்வே. நிக்கவ்சன். கவிஞர் தாகூர். மகாத்மா காந்தி. பல அறிஞர்கள் பல்வேறு வகையில் கூட்டுறவை அறிமுகம் செய்தாலும் கல்வெர்ட் அவர்களின் அறிமுகமே ஓரளவு பெயர்கள் பொதிந்த அறிமுகமாகக் கருதப்படுகின்றது.

நுகர்ச்சிச் சேவைகளை அளிப்பதற்காகப் பண்டகசாலைச் சங்கங்களாக ஆரம்பித்த கூட்டுறவு இன்று மக்களின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்யும் நிலைக்கு விரிவடைந்துள்ளது. காப்புறுதி, வைத்தியத்தொழில், சினிமாத்தொழில், ஏற்றுமதி இறக்குமதித் தொழில், ஆலைத்தொழில் போன்ற பல்வேறு தொழில் முயற்சிகளில் கூட்டுறவுத்துறை புகுந்துவிட்டதை இன்று நாம் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு பல்வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச்சங்கங்களை அறிவதற்கு சுலபமான வழி சில அடிப்படைகளை ஆதாரமாகவைத்துக் கொண்டு பிரித்தல் ஆகும்,

## பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் பற்றி ஓர் விளக்கம்

மாணவப் பருவத்தில் உருவாகும் இலட்சியம், கொள்கை, பண்புகள், வாழ்வு முழுவதும் நிலைத்து நிற்கக்கூடியன. எனவே பாடசாலைக் கூட்டுறவுச்சங்கங்களில், பொருளாதார நலன்களிலும் பார்க்க அறஞ்சார்ந்த கூட்டுறவுக் கொள்கைகள் பற்றிய தெளிவான சிந்தனையும் செயன்முறைப் பயிற்சியும் பெறக்கூடியதாக அமைந்திருத்தல் விரும்பத்தக்கது ஒத்துழைப்பு, சுயஉதவி, பரஸ்பர உதவி, சிக்கனம், ஜனநாயகம் என்பவற்றின் பொருளை அறிந்து அவற்றைக் கடைப்பிடிக்கும் மனப்பாங்கை ஏற்படுத்த வேண்டும். எதிர்கால கூட்டுறவாளர்களை உருவாக்கக் கூடிய பயிற்சிக் களங்களாக பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் அமைதல் குறிப்பிடத்தக்கது.

## அங்கத்துவம்

ஆறாம் ஆண்டிற்கு மேற்பட்ட மாணவர்களும், கல்லூரியில் தொழில் புரியும் ஆசிரியர்களும் ஏனைய ஊழியர்களும் ஒரு ரூபா பங்கு முதலைக் கொள்முதல் செய்வதன் மூலம் உறுப்பினர் ஆகலாம். இவர்களைக் கொண்டதே பொதுச்சபை ஆக இருக்கும்.

## நிர்வாக சபை

15 பேரைக் கொண்ட நிர்வாக சபை ஒன்று இருக்கும் இதில் 10 மாணவர்களைப் பொதுச்சபை தெரிவு செய்யும், இவர்களுக்கு வயதுத்தகைமை இல்லை. பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் இருந்து மூவரும் ஆசிரியர்களில் இருந்து இருவரும் ஆணையாளரால் நியமிக்கப்படுவர். இச்சங்கங்களுக்கு கணக்காய்வு நிதி, கூட்டுறவு நிதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. இவை பதிவு செய்யப்பட்டவை என்றும் அங்கீகரிக்கப்பட்டவை என்றும் இரு வகையில் உள்ளன.

“ நடுவு நின்ற நன்னெஞ்சி னோர்
வடு அஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வ தூஉம் மிகைகொ ளாது
கொடுப்ப தூஉம் குறைகொ டாது
பல் பண்டம் பகிர்ந்து வீசும்
தொல் கொண்டித் துவன் றிருக்கை ”

இவ்வித பண்புகள் ஒரு பாடசாலைச் சங்கத்திற்கு இருக்கும் சிறப்பியல்புகள் ஆகும்.

க. இராகவன்
(2001 வர்த்தகம்)

# கம்பியூட்டரும் அதில் ஏற்பட்ட பிரச்சனைகளும்


விஞ்ஞான வளர்ச்சியின் பயனாகத் தோன்றியதே கம்பியூட்டர் விஞ்ஞானம் வளரவளர கம்பியூட்டரில் வளர்ச்சிகளும் பிரச்சனைகளும் தோன்றிய வண்ணம் உள்ளன. இவ்வாறு வளர்ச்சி கண்டு வரும் கம்பியூட்டர் மீது மனிதனுக்கு ஏற்பட்ட நாட்டம் காரணமாக இன்று பல சாதனைகளும் . பிரச்சனைகளும் தோன்றியுள்ளன. இன்று அமெரிக்கா போன்ற நாடுகளின் முதுகெலும்பாக விளங்குவது கம்பியூட்டரே. இன்றைய கம்பியூட்டர்யுகத்தில் பலவிதமான கணணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அண்மைக்காலங்களில் தமிழ் மொழிமூலம் கணணியை இயக்குவது பற்றி தமிழ் – இணையம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டதும் யாவரும் அறிந்ததே. மேலும் நவீன வசதிகள் (Internet , E -mail ) மற்றும் பலவற்றுடன் அண்மைக்காலங்களில் கைக்கடக்கமான கம்பியூட்டர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பத்திரிகைகளில் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு பலவிடயங்களில் துரிதகதியில் கம்பியூட்டர் முன்னேற்றம் கண்டுள்ளது. கம்பியூட்டர் பற்றி கற்பதற்கு அடிப்படை பாடசாலைக்கல்வியும் ஆங்கில அறிவும் இன்றியமையாததாகும்.

கம்பியூட்டர்யுகத்தில் ஒரு சாதனை அல்லது கண்டுபிடிப்பு குறுகிய காலத்துள் நிகழும் என எதிர்வு கூறப்பட்டால் அவ்வாறு கூறப்பட்ட காலத்துக்கு முன்னதாகவே அவை நிகழ்ந்துவிடுகின்றன. இவ்வாறான அதிவேக விருத்தியின் காரணமாக இன்றைய மனித வாழ்வின் சகலதுறைகளையும் இடம்பிடித்துக்கொண்டிருப்பது கம்பியூட்டரே ஆகும். வளர்முகநாடுகளில் இந்நிலை ஏற்கனவே நடமுறையிலுள்ளன. இன்று உற்பத்தி. பொதுச்சேவைகள , நிதி , நிர்வாகம் , வர்த்தகம் ,தொடர்புஊடகங்கள , அறிவுதேடல் , கல்வி , சுகாதாரம் , சட்டம் , பாதுகாப்பு ஆகிய துறைகளில் கம்பியூட்டரின் பங்கு அளப்பரியது. இத்துறையானது இன்று யாவராலும் பயன்படுத்தப்படுகின்றது. இந் நிலையில் இன்றைய சமூகவியல் அறிஞர்களிடையேயும் . கம்பியூட்டர் துறை நிபுணர்களிடையேயும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ் அச்சமானது நியாயமானதே என்று வியக்குமளவிற்கு அண்மைக்கால நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. 2000 ஆம் ஆண்டில் கம்பியூட்டரின் செயற்பாடுகளில் ஏற்படும் குளறுபடிகள் எந்தளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதுபற்றி மனிதனுக்கே சவாலாக உள்ளது. Y2K என்று அழைக்கப்படும் இப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு பெருமளவு பணம் செலவழிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு பணம் செலவு செய்தும் தீர்வு கிடைக்கும் என்பது கேள்விக்குறியே. இனறைய கம்பியூட்டர் Y 2K பிரச்சனைக்கு மூலகாரணமாக அமைவது ஆரம்ப காலத்தில் கம்பியூட்டர்களைத் தயாரித்தவர்கள் திகதியைக் குறிக்கும்போது ஆண்டினை இரு இலக்கங்களில் குறித்ததேயாகும். இவ் ஏற்பாட்டின் விளைவாக 2000 ஆம் ஆண்டு பிறந்தவுடன் கம்பியூட்டர்கள் பிறப்பிக்கும் தரவுகளில் பாரிய பிழைகள் ஏற்படப்போகின்றன. இவை இவ்வாறு இருக்கின்றபோதும் நவீன PC வகை கம்பியூட்டர்களில் இப்பிரச்சனை ஏற்படப் போவதில்லை எனினும் பெரும்பாலான நாடுகளில் பயன்பாட்டிலுள்ள main frame மற்றும் மினி வகைக் கம்பியூட்டர்கள் பிரச்சனைக்கு உள்ளாகின்றன. பொதுவாக அரச நிறுவனங்களிலும் பாரியளவிலான செயற்றிட்டங்களிலும் மேலே குறிப்பிட்ட வகைக் கம்பியூட்டர்களே பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்கா போன்ற நாடுகளில் வங்கிச்சேவை , மின் , நீர் , மற்றும் எரிபொருள் விநியோகம் , வீதிப்போக்குவரத்து . விமானசேவைகள் போன்றன 2000 ஆவது ஆண்டு ஜனவரி 1ம் திகதியுடன் முற்றாக ஸ்தம்பிதம் அடையலாம் என கம்பியூட்டர் நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

Y2K பிரச்சனை காரணமாக கம்ப்யூட்டர் நிகழ்ச்சித்திட்டங்களும் அவற்றில் உள்ள தரவுகளும் மாத்திரம் பாதிப்படையும் என முன்னர் நம்பப்பட்டது. ஆனால் கம்ப்யூட்டரின் உள்ளுறுப்புகளும் இதனால் செயலிழக்கக்கூடும்என தற்போது கருத்துத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மகிழ்ச்சியோடு எதிர் கொள்ளவேண்டிய 21ஆம் நூற்றாண்டை பயத்தோடும் கிலேசத்தோடும் வரவேற்கின்ற துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. சில நாடுகளில் இவற்றினால் ஏற்படும் அசம்பாவிதங்களை மக்களுக்கு அறிவிப்பதற்காகவும், அவர்களை வழிநடத்துவதற்கும் அமைப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. உலகளாவிய வைரஸ் பயமுறுத்தல் கம்ப்யூட்டர் நாகரிகத்திற்கு சிவப்பு சமிக்ஞை காட்டத் தொடங்கியுள்ளது. தனி ஒரு மனிதனால் உலகளாவிய ரீதியில் உள்ள கம்ப்யூட்டர்களை செயலிழக்கச் செய்ய முடியுமென்பதை C1H மற்றும் Chemobyl வைரஸ் தாக்குதல்கள் எடுத்துக்காட்டியுள்ளன. E - mail மூலமாக பரவும் வைரஸ்களும் அன்றாடம் பயன்படுத்தப்படும் soft wire களுடன் இணைத்து பரவும் வைரஸ்களும் இந்த வகையிலே பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளன. இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய தாக்கங்கள் இலகுவாக இடம்பெறமுடியும். இந் நிகழ்வுகளினால் கம்ப்யூட்டரில் தங்கியுள்ள சேவைகளும், நிறுவனங்களும் ஒரு நொடியில் செயலற்றுப் போகும். வருடக்கணக்காக சிரமப்பட்டு சேகரித்து வைத்த முக்கியமான தகவல்களும் அழிந்து போகலாம். இவ்வாறு ஒரு நிகழ்வு இடம்பெறின் பாரிய பின்னடைவு ஏற்படலாம்.

அது மட்டுமல்லாமல் இன்றைய நம் மாணவ சமுதாயத்தின் அதிக பயன்பாட்டில் உள்ள கம்ப்யூட்டர் தொழில் நுட்பம் ஏற்படுத்தியுள்ள மற்றுமொரு பிரச்சனை பற்றியும் அறிஞர்கள் உணரத்தலைப்பட்டுள்ளனர். பாடசாலைகளில் கம்ப்யூட்டர் பிரயோகம் அதிகரித்துவருவதனால் மாணவர்களின் கணித பிரச்சனைகளை தீர்க்கும் ஆற்றல், எழுத்தாக்கங்களைச் செய்யும் ஆற்றல், கணிதரீதியான சிந்தனைத்திறன், அடிப்படை மொழியறிவு போன்ற பல்வேறு அடிப்படை ஆற்றல்கள் மாணவர்களிடையே வீழ்ச்சியடைந்துள்ளன. இந்நிலை தொடருமானால் கம்ப்யூட்டர் இன்றி செயற்படமுடியாத நிலை உருவாகும். சில விஷமிகளின் செயற்பாட்டினால் கம்ப்யூட்டர் பாதிப்புக்குள்ளாகுமாயின் யாவரும் பரிதாபநிலைக்கு உள்ளாக்கப்படுவர். இவற்றினால் மனித நாகரிக நிலையும் சீர்குலையலாம்.

வி. சசிகரன்
( 2000 விஞ்ஞானம் )



# விழியாலே... மொழிபேசு.....

பார்த்தேன் பார்க்கின்றேன் கண்களாலே ,
பார்மகளை , விண்ணவளை விந்தையாக ,
யார் படைத்த வர்ணஜாலம் ! ? இவைகளென்று
கேட்கிறேன் இயற்கையை மௌனமாக ,
விடிவேளை ஒளிக்கீற்றும் நீதானா ?
சேவலின் நாதவொலி நீதானா ?
உயிருறக்கம் கலைப்பதுவும் நீதானா ?
உன்செயலை வியக்கிறேன் பேசு நீயே !

அந்திவேளைச் செந்நிறமும் நீதானா ?
அங்கு அஸ்தமிக்கும் ஆதவனும் நீதானா ?
அந்த ஒளி மறைப்பதுவும் நீதானா ?– மெல்ல
இருள்பூசிக் குலைப்பதுவும் நீதானா ?
நீலவான் படைத்ததும் நீதானா ?
ஒளிவிடும் நட்சத்திரம் நீதானா ?
வந்துபோகும் மதியழகும் நீதானா ?

நீலநிற நீர்ப்பரப்பும் நீதானா ?
அங்கு நீச்சலிடும் உயிரினமும் நீதானா ?
அருகிலுள்ள வெண்பரப்பும் நீதானா ?
அதை முத்தமிடும் அலையழகும் நீதானா ?
வானை முட்டும் மலையழகும் நீதானா ?– அதில்
ஓடிவரும் நீரழகும் நீதானா ?
பேரிரைச்சல் எழுப்புவதும் நீதானா ?– அங்கு
பொங்கி வரும் நுரையழகும் நீதானா ?

பூஞ்சோலை வாசமலர் நீதானா ?
பூக்களின் வடிவழகும் நீதானா ?
புத்துணர்வு ஊட்டும் தென்றல் நீதானா ?
பூக்கள் சிந்தும் தேன் துளியும் நீதானா ?
அன்றுமுதல் கேட்கிறேன் –அன்னையை
எவ்வாறு இயக்குகிறாய் ? இவற்றையெல்லாம்
மௌனித்து உன்னுள்ளே சிரிக்காதே !
என்னை நீ வியப்பில் ஆழ்த்திடாதே !

மௌனந்தான் உன் மொழியோ ? கூறிவிடு !
என்றுமுன் ரசிகன் நான் என்னைப் பார்த்து ,
மெதுவாக விழியாலே பேசி விடு !
நான் மட்டும் அம்மொழியைக் கேட்டிடுவேன்
களிப்போடு மனமகிழ்வு அடைந்திடுவேன்
கூறிடுவேன் பாவலன் நான் கேட்டிடுவீர் !
இயற்கையன்னை அள்ளித்தரும் அமுதபானம்
பருகிடுவோம் , பருகிடுவோம் , பாரோர் வாரீர் !

இ . புவனமதி
( 2001 கலை )

# ! சிந்தனைத் துளிகள் !

1) மனிதனுடைய ஆயுளில் கழிந்தகாலம் போக உண்மையில் எஞ்சியிருப்பது ஒரு கண நேரமே
2) உன்னிடம் இல்லாத ஒரு பொருளின் மீது ஆசைப்படாதே . உன்னிடம் இருக்கும் சிறந்த பொருட்களை நினைத்துப்பார்த்து மகிழ்ச்சி அடைவாய் ,
3) எத்தனை காலம் வாழ்ந்தாய் என்பது முக்கியமல்ல எப்படி வாழ்ந்தாய் என்பதுதான் முக்கியம்
4) தன்னம்பிக்கையும் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் மிகவும் அவசியம் .
5) தவறுகள் செய்தவர்கள் வாழ்வில் ஒன்றுமே செய்யாதவர்கள் மட்டும்தான்
6) உணர்ச்சிகளை நாம் ஆளவேண்டும் உணர்ச்சிகள் நம்மை ஆளக்கூடாது .
7) படித்தவன் எல்லாம் பண்பாளன் அல்ல , பண்பாளன் எல்லாம் படித்தவன் அல்ல
8) வெறும் பேச்சு , வெட்டிப் பேச்சு , கேலிப் பேச்சு பேசும் தனிநபர்கள் கொண்ட சமுதாயம் எதையும் சாதிக்காது
9) யார் எது செய்தாலும் எது சொன்னாலும் நன்றி செய்யக்கடவோம் ,
10) கருத்து நேர்மை உள்ளதாயின் யாராலும் அழிக்கமுடியாது , நேர்மையற்றதாயின் யாராலும் உள்ளடக்கமுடியாது

சி . ராஜசுதன்
( 2000 கலை )

# கணனி வைரஸ் தாக்கம்

இன்றைய உலகில் மிகவும் முக்கியமான ஓர் இடத்தை வகிப்பதாகவும் மக்களுடன் நட்புக் கொண்டு மக்களுக்குத் தேவையான தகவல்களை தனது ஞாபகப் பகுதியில் சேகரித்து வைத்து மக்களுக்கு தேவையானபோது அவற்றை வழங்கும் வல்லமை கொண்டும் மக்களுடைய நண்பனாக இருக்கும் சாதனம் கணனி என கூறலாம். இன்றைய உலகில் மிக முக்கியமாக உள்ளவும் வினைத்திறனான செயற்பாட்டை கொண்டனவுமான தொடர்பாடல் சாதனங்களாக உள்ள இன்ரநெற், ஈமெயில் போன்றனவும் கணனியினூடாக இணைப்பினை ஏற்படுத்துவதன் மூலமே தொழிற்படுகின்றன. இன்றைய உலகத்தையே ஒரு சிறிய பந்து போன்று ஆக்கிவிட்டன கணனிகள். இக்கணனிகளானவை விஞ்ஞானத்துறை, வர்த்தகத்துறை, இலக்கியத்துறை போன்றவற்றில் கூடுதலான பங்களிப்பை கொண்டுள்ளன. இவ்வாறு மனிதனுக்கு சகல துறைகளிலும் கைகொடுத்து உதவுவதான கணனியானது 1939" ஆண்டு ஹவாட் எய்க்கின் என்பவரின் முயற்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

கணனித் தொகுதி என்பது குறிப்பிட்ட விடயத்தை செய்வதற்கு அல்லது செய்வதற்குத் தேவையான சாதனங்களையும் உதிரிப்பாகங்களையும் ஒருங்கிணைத்து இயக்குவதையே கணனித்தொகுதி என வரையறுக்கலாம். இத்தகைய கணனித் தொகுதியை, மனிதனை வைரசுக்கள் தொற்றி நோய்களை உருவாக்கி சீர்குலைப்பது போன்று கணனிகளின் செயற்பாடுகளையும் இழக்கச் செய்கின்றன.

சமூகத்திற்கு நாசம் செய்யும் நாசகாரக் கும்பல்களினால் நவீன உலகத்தில் கையாளப்படும் ஒரு உத்திதான் இந்தக் கணனி வைரசுக்கள். கணனிகளில் எமக்குத்தேவையானதாகவும் அறிவின் விருத்திக்கு உதவக்கூடியதாகவும் நாட்டில் நடைபெறுகின்ற முக்கியமான நிகழ்ச்சிகள் பலவும் காணப்படுகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகளை பலர் பெற்று சேகரித்து வைத்து நன்மையினை அனுபவிக்கின்றனர், ஆனால் அத்தகைய நன்மைகளை பெறுவதனை விரும்பாத நாசகாரர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவ்வாறான நாசகாரர்கள் கணனி வைரஸ்களை ( by programme ) உருவாக்கி வைப்பார்கள். அவர்கள் இவற்றை உருவாக்கும்போது வைரசுக்கள் பரவுவதற்கான வழிமுறைகளையும் சேர்த்துக்கொள்கின்றனர். இது எவ்வாறு தொற்றுகின்றது எனின் வைரஸ் தொற்றியுள்ள ஒரு கணனியிலிருந்து நாம் தகவல்களை பிரதி செய்யும் போது இவ் வைரசுக்கள் அவற்றுடன் உட்புகுந்து விடுகின்றன. ஆனால் பெரும்பாலான வைரசுக்கள் உட்புகுவதுபற்றி பிரதி செய்பவருக்கு தெரிய வாய்ப்பில்லை ஏனெனில் இவை தாம் புகுந்தது பற்றி கணனித் திரையில் தெரிவிப்பதில்லை. ஆனால் தாம் பிரதி செய்துள்ள தகவலில் வைரசுக்கள் உட்புகுந்துள்ளன என்பதை அறியாத பாவனையாளர் அந்தக் கணனி வைரசுத் தொற்று உள்ள disk ஐ வேறொரு கணனியில் பயன்படுத்தும்போது இந்த வைரஸ் பரவுகின்றது.

பொதுவாக இக்கணனி வைரசுக்களை பரவ விடுபவர்கள் பெரும்பாலும் computer games மூலம் விரைவாகத் தொற்ற வைக்கின்றனர். இப்படி இருக்கும் போது தற்காலத்தில் இன்டர்நெற் பாவனை அதிகரித்து வருவதனாலும் இவற்றின் மூலம் தினந்தோறும் ஏராளமான தகவல்கள் பரிமாறப்பட்டு வருவதனாலும் இத்தகவல்களுடன் தரவுகளாகச் சேர்த்து தமது வைரசுக்களையும் இணைத்து அனுப்பி விடுகின்றார்கள் இதனாலேயே இப்போது வைரசுக்கள் பரவும் வேகம் மிகவும் கூடுதலாக உள்ளது.

இதுவரையில் 26 க்கு மேற்பட்ட வைரசுக்கள் இனம் காணப்பட்டு உள்ளன, இதில் மிகவும் தீவிரமானவை Arbanet வைரஸ், Score வைரஸ் என்பன ஆகும், தற்பொழுது வைரஸ் தொல்லையைத் தடுப்பதற்கு சில கணணி நிறுவனங்கள் வைரசுக்கு எதிரான நிகழ்ச்சி நிரல்களையும் தயாரித்து அனுப்புகின்றன. இவை ஓரளவுக்கு கணணித் தொற்றினைத் தடுப்பதாக நம்பப்படுகிறது. எனினும் முழுமையாக கணணித் தொற்றை தடுப்பதற்கு எந்த வழியும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

இலங்கையிலும் அண்மையில் வைரஸ் தாக்கம் இடம்பெற்றதை நாம் அறிவோம். பொதுவாக இந்த வைரசுக்கள் இன்ரநெற் ஈமெயில் ஊடாகவே கணணிகளுக்குள் உட்பிரவேசித்தன. இது Windows 95, Windows 98 ஆகிய கணணிகளையே தாக்கின. சிலர் எடுத்த முன்னேற்பாடான நடவடிக்கைகளினாலேயே இலங்கையில் இத்தாக்கம் குறைவாக இருந்தது. இலங்கைக் கணணிகளைத் தாக்கிய வைரஸ் C.I.H.1,2 அல்லது செர்னோபில் ஸ்பேஸ்கில்லர் என இனம் காணப்பட்டது.

1986ம் ஆண்டு ஏப்ரல் 26ம் திகதி ரஷ்யாவில் செர்னோபில் அணு உற்பத்திச்சாலை விபத்து நேர்ந்தது. அதன் 13ம் ஆண்டு பூர்த்தி கடந்த 26ம் திகதி ஆகும. அதனை நினைவு கூரும் வகையிலேயே இந்த வைரஸ் தொற்றை நிகழ்த்தி இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இந்த வைரசுக்கள் உடன் கண்டு பிடித்து அழிக்கப்படாது இருந்தால் உலக அரங்கில் வணிகத்துறையில் நடந்துவரும் வலைப்பின்னல் அமைப்பு முறையில் பாரிய சிதைவுகள் ஏற்பட்டிருக்கும் எனவும் நம்பப்படுகின்றது. இவ் வைரசுக்கள் ஒவ்வொரு 26ம் திகதியும் கணணியைச் செயலிழக்கச் செய்யும் எனவும் நம்பப்படுகின்றது. இது தொடர்பாக எச்சரிக்கையாக இருந்தாலேயே வைரஸ் தொற்றுக்களை முறியடிக்க முடியும் எனவும் நம்பப்படுகின்றது.

S. சிவகௌரி
(2000 வர்த்தகம்)

# பொது அறிவு வினாக்கள்

1) நீரில் இருந்து வெளியேறியவுடன் ஆவியாகும் மீன் எது ?
2) 2000 ஆம் ஆண்டில் கணனி எதிர்நோக்கும் பிரச்சனை யாது ?
3) அண்மையில் சனிக்கிரகத்திற்கு அனுப்பப்பட்ட விண்கலம் யாது ?
4) இஸ்ரேலிற்கும் பலஸ்தீனத்திற்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கை யாது ?
5) 2000 ஆம் ஆண்டின் பெயர் யாது ?
6) அதிக முட்டையிடும் பூச்சி யாது ?
7) குறைந்த எழுத்தைக் கொண்ட மொழி எது ?
8) இஸ்ரேல் நாட்டின் நாணயத்தின் பெயர் யாது ?
9) நாட்டின் வடிவத்தையே கொடியாகக் கொண்ட நாடு எது ?
10) ஓசானிய நாடுகள் யாவை ?

விடைகள் 40 ஆம் பக்கம் பார்க்க.

சி. இராஜசுதன்
(2000 கலை)

# சமுதாயமும் கலைகளும்

மனிதனுடைய வாழ்க்கையில் கலைகள் சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்தவை ஆகும். சமுதாயத்தில் கலைகள் அதி உயர்ந்த முக்கியத்துவத்தை பெறுகின்றன. காலம் வளர்ந்து வளர்ந்து செல்லக்கலைகளும் பல்வேறு வகையில் வளர்ந்து செல்கின்றது. கலையினுடைய உச்ச வளர்ச்சியை சோழர்கால சமூகத்தில் ஒளி விட்டுப்பிரகாசித்து இருப்பதனைக் காண முடிகின்றது. சமூகம் வளர்ந்து வளர்ந்து செல்லக் கலைகளும் வளர்ந்து செல்வது தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

கலையினுடைய முதல் வளர்ச்சியினை சங்ககால சமூகத்திலேயே காண முடிகின்றது. சங்ககால வழிபாடுகளின் போது ஆடிப் பாடி மகிழ்வதற்கு பல கூத்துகள் ஆடப்பட்டது. சங்க காலத்தில் ஆடப்பட்ட கூத்து மரபே கால கதியில் வளர்ந்து நாடகக் கலைக்கு வித்திட்டது. ஆனால் தமிழ் நாட்டின் முதல் சமூகம் என கருதப்பட்டுள்ள ஆரம்பகால சமூகத்தில் கட்டடக்கலை, நடனக்கலை, நாடகக்கலை வளர்ச்சி அடையவில்லை. ஆனால் இக்காலகட்டத்தில் இசைக்கலையினுடைய வளர்ச்சியினை காணமுடிகின்றது. பாணன் முதலான பாடகர்கள் யாழ் வைத்து பாடல்கள் பாடியதற்கு சங்க காலத்தில் நூல்கள் சான்று பகருகின்றன. உதாரணமாக "தேன் தீந்தொடை சீறி யாழ் பாணன்" என்ற பாடல் அடியில் இருந்து இதனை உணர முடிகிறது.

சங்க கால சமூகத்திற்கு அடுத்து தமிழ் நாட்டில் அறநெறியை விரும்புகின்ற மிகுந்த கட்டுப்பாடுடைய சமூகம் ஒன்று காணப்படுகிறது. அச்சமூகத்தில் நாட்டியக்கலை மிக உச்ச நிலையில் வளர்ச்சி அடைந்திருந்ததைக் காண முடிகிறது. அது மட்டுமல்ல அக்கால சமூகத்தில் வாழ்ந்தவர்கள் கலைப்பிரியாக வாழ்ந்தனர். கோவலன் மாதவியின் நடனத்தைக்கண்டு "விடுதல் அறியா விருப்பினனாயினன்" என கூறுவதிலிருந்து இக்கூற்றினை அறிய முடிகிறது.

சிலப்பதிகாரத்தில் முக்கியமான இரு கலைகள் வளர்ந்து வந்திருப்பதை சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட செய்தியில் இருந்து உணர முடிகிறது. மாதவி ஐந்து ஆண்டுகள் வரன்முறையாக நடனக்கலையைப் பயின்று இறுதியில் யாவரும் பார்த்து மகிழும் வண்ணம் அரங்கேற்றம் நடைபெறுகின்றது. இது அக்காலத்தில் ஆடல்கலை பெற்ற முக்கியத்துவத்தை விளக்கியது. சிலப்பதிகாரத்தில் கானல் வரிப்பகுதியில் மாதவி கோவலனுடைய இசை மேன்மையினை காண முடிகிறது. இதிலிருந்து இக்காலத்தில் இசைக்கலை அதிமுக்கியத்துவம் பெற்றிருந்தது என அறியலாம். அக்கால சமூகத்தில் மங்கையர் சந்தோஷமாக பொழுதைக்களிப்பதற்காக வேட்டுவவரி, குன்றக்குரவை, ஆச்சியர் குரவை முதலான பகுதிகளில் பல வகையான கூத்துக்கள் ஆடப்பட்டன. இவ்வாறு சங்கமருவியகால சமூகத்தில் சங்ககால சமூகத்தைவிடக் கலைகள் வளர்ந்து வந்திருப்பதை அக்கால இலக்கியங்களில் இருந்து அறிய முடிகிறது.

பக்தியை முதன்மையாகக் கொண்ட பல்லவர் கால சமூகத்தில் கலைகள் புதியதோர் எழுச்சியுடன் மலரத்தொடங்குகின்றது. கலைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் கோயில்களை அடிப்படையாகக் கொண்டே வளரத் தொடங்கின. பல்லவர் காலத்திலே முதன்முதலில் கட்டடக்கலையினுடைய வளர்ச்சியினைக் காண முடிகின்றது. முதன்முதலில் கல்லால் கோயில் கட்டிய காலம் பல்லவர் காலம் ஆகும். கோயிலை அடிப்படையாகக் கொண்டு இசைக்கலை, நாட்டியக்கலை, சிற்பக்கலை என்பன வளர்ச்சியடைந்தன. குறிப்பாக பல்லவர் கால சமூகம் கலையோடு பின்னிப்பிணைந்துள்ளது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமூகத்தில் கலையின் மிக உச்ச வளர்ச்சியினை சோழர்கால சமூகத்தில் மட்டுமே காண முடிகிறது. சோழர்கால சமூகத்தில் கோயில்கள் தனிச்சிறப்புடன் முக்கியம் பெற்று விளங்கின. அக்கால சமூகத்தில் கோயில்கள் களஞ்சிய அறையாகவும், நடனஅரங்காகவும், வழிபாட்டுத் தலமாயும், நீதி மன்றங்களாயும் விளங்கின. அது மட்டுமல்ல சோழர்கால சமூகத்தில் தமிழ்நாடெங்கும் கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்களை அடிப்படையாக வைத்து கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நாடகக்கலை போன்ற பல கலைகளும் வளர்ந்து வந்துள்ளன என்பதைக் காண முடிகிறது. இக்கொயில்களில் விழாக்காலங்களில் மன்னனுடைய ஆதரவுடன், நாடகமும் கூத்தும் இடம்பெற்று வந்துள்ளன. தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தின் கோபுரத்தின் உயரம் 195 அடி ஆகும். இதன்மூலம் அக்கால கட்டடக்கலையின் வளர்ச்சியை அறிய முடிகின்றது. இவ்வாறு கலைகள் பூத்துக் குலுங்கிய காலம் சோழர் காலமாகும்.

சோழர் காலத்தை அடுத்து வருகின்ற நான்கு நூற்றாண்டுகட்கு கலைகளின் வளர்ச்சியைக் காண முடியவில்லை. இக்காலம் கலைகள் தலையெடுக்காது மங்கிப்போன காலமாகும். இக்காலகட்டத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஓயாத போரினால் கடும் பஞ்சமும் அமைதியின்மையும் ஏற்படத்தொடங்கியது. 15 ஆம், 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் ஐரோப்பியரின் வருகையால் சமயத்தின் வளர்ச்சியின்றி சமூகம் செய்வதறியாது மயங்கிக் கிடந்தது. படிப்படியாக 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியில் கலைகள் மீண்டும் தலையெடுக்க ஆரம்பித்தன.

இருபதாம் நூற்றாண்டைப் பொறுத்தமட்டில் கலைகளினுடைய ஆதிக்கம் சமூகத்தில் முக்கியம் பெற்ற ஒன்றாக விளங்கியது. இக்காலகட்டத்தில் நாடகக்கலை முக்கியம் பெற்று விளங்கியது. இன்றைய காலகட்டத்தில் சமூகத்தில் நாடகம் பொழுதுபோக்கிற்குரிய கலையாக மாறியுள்ளது. விழாக்காலங்களில் கோயில்களில் இசைக்கலை, நாடகக்கலை என்பன முக்கியம் பெற்று விளங்குகின்றன.

இன்றைய காலகட்டத்தில் நவீன தொழில்நுட்ப முறையுடன் கலைகள் வளர்ந்து வருவதை காணமுடிகின்றது. சோழர் காலத்தில் பேணப்பட்ட நாடகக்கலை இன்று சினிமாத்துறையாக வளர்ந்துள்ளது. இன்றைய சமூகத்தில் திரைப்படம் முக்கியம் பெற்ற ஒன்றாக விளங்குகிறது. பெரியோர் சிறியோர் என்ற பேதமின்றி இரசித்து மகிழும் கலையாக திரைப்படக்கலை இன்று விளங்குகிறது. இவ்வாறு அன்றிலிருந்து இன்றுவரை கலைகள் சமுதாயத்தோடு பின்னிப்பிணைந்து வளர்ந்து வந்துள்ளன.

யோ. செல்வலக்மி
( 2000 கலை )

ΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨΨ

இருள் இருள் என்று சொல்லிக் கொண்டு சும்மா இருப்பதை விட
ஒரு சிறிய மெழுகுவர்த்தியை தேட முயற்சி செய்

--- கன்பூசியஸ்

காலத்தின் மதிப்பு உனக்குத் தெரியுமா அப்படியானால்
வாழ்வின் மதிப்பும் உனக்குத் தெரியும்

--- நெல்சன்

# இலத்திரனியல் தபால் – E - MAIL

சர்வதேச ரீதியாக ஏற்படுத்தப்பட்ட வலைப்பின்னல் மூலம் கணணிகளைப் பயன்படுத்தி எழுத்து மூலமான தகவல்களை பரிமாற்றிக் கொள்ளும் தொடர்பாடல்முறை E - MAIL எனப்படும். தற்காலத்தில் பிரபல்யம் அடைந்துவரும் இத்தொடர்பாடல் முறையில் மிகக்குறைவான கட்டணத்திலேயே சர்வதேச ரீதியாக தகவல்களைப் பரிமாற்றம் செய்துகொள்ள முடிகின்றது.

சர்வதேச வியாபாரத்தில் ஈடுபடும் ஏற்றுமதி இறக்குமதியாளர்கட்கு Telen Tom I.D.D முறைகளைவிட இவ் இ–மெயில் மிகவும் மலிவாகவும் விரைவாகவும் செய்திகளைப் பரிமாற்ற உதவுகின்றது. இன்ரநெற் வசதி உடையவர்கள் இ–மெயில் தொடர்பாடலிலும் ஈடுபடலாம்.

இம்முறையில் தொடர்பு கொள்ள விரும்பும் ஒருவரும் அதனைப் பெறுபவரும் கணனி வசதி உடையவர்களாக இருத்தல் வேண்டும். இவர்களுக்கென ஒரு இலக்கம் வழங்கப்படும்.

உதாரணமாக The Ceylon Chamber of Commerce அமைப்பின் இ–மெயில் இலக்கம் (Chamber 2. Srilanka net in Fodix Srilanka net) என்பதாகும். இது தொலைபேசி இலக்கத்தைப் போன்று அமையாது கணனி மொழியாக அமைந்திருக்கும்.

எனவே இலத்திரனியல் அஞ்சல் வசதிகளுக்கு என இலக்கங்களை பயன்படுத்தல் வேண்டும். செய்தியை அனுப்புபவர் பெறுபவரின் இலக்கத்தையும் தகவல் பெறுபவர் அனுப்புபவரின் இலக்கத்தையும் தெரிந்திருக்க வேண்டும். தொலைபேசியுடன் அமைக்கப்பட்ட கணனிகளின் திரைகள் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு தயார் செய்திருத்தல் வேண்டும் தகவல் பெற வேண்டியவரின் இலக்கத்தை தகவல் அனுப்புபவர் தனது கணனியில் அழுத்தி பின்னர் தகவலை கீபோட்டில் அழுத்த வேண்டும். இத்தகவல் தகவல் பெறுபவரின் கணனியில் பொறிக்கப்படும். அத்தகவலைப் பெறுபவர் கணனித் திரையில் வாசித்த பின்னர் கணனியை மூடலாம். தேவையாயின் print out பிரதியை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் இங்கு Fax இல் செய்தி அத்த வடிவில் செல்வதைப் போன்று செல்வதில்லை. பதிலாக கணனி எழுத்து வடிவலேயே அனுப்பப்படுகின்றது. எனினும் வெவ்வேறு மொழிகளிலும் இவற்றை அனுப்பலாம் ஏனெனில் கணனியில் விரும்பிய எழுத்தை (FONT) தெரிவு செய்யலாம்.

தற்கால உலகில் இது பிரபல்யம் பெற பின்வருவன காரணமாகும்.

1) ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த செலவுடையது. (Telex , Fax போன்றவற்றுடன் ஒப்பிடுகையில்)
2) Telex , Fax உடன் ஒப்பிடுகையில் விரைவானது.
3) ஒரே தகவலை ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கணனிகளுக்கு அனுப்பலாம்.
4) உலகின் எந்தப் பகுதிக்கும் தகவலை அனுப்ப முடியும்.
5) தகவலின் இரகசியத்தன்மையை ஓரளவு பேணலாம்.
6) தற்கால கணனிப் பாவனையால் இ–மெயில் அதிக பிரபல்யம் பெற்று வருகின்றது.
7) தொலைபேசி போன்றல்லாமல் முக்கிய விடயங்களை ஆவணப்படுத்தவும் முடிகின்றது

8) இங்கு இன்னொருவர் செய்தியை அனுப்பிக் கொண்டிருப்பினும் செய்தியை நாமும் அனுப்ப முடியும். தொலைபேசியில் இணைப்புக்கிடையாது விடுவது போன்று இங்கு இணைப்பு கிடைக்காது விடமாட்டாது. அனுப்பும் செய்தி ஒன்றன்பின் ஒன்றாக சென்று கொண்டிருக்கும்.

9) பத்திரிகை நிறுவனங்கள் இவ் இ–மெயில் மூலம் சர்வதேச ரீதியான பல தகவல்களை திரட்டி உடனுக்குடன் தமது பத்திரிகையில் பிரசுரித்து தமது பத்திரிகையின் சந்தைப்பங்கை அதிகரிக்கின்றன.

அவ்வாறிருப்பினும் இதில் சில பிரதிகூலங்களும் காணப்படுகின்றன. அவையாவன.

1) இதற்கு செய்தி பெறுபவரிடமும் அனுப்புபவரிடமும் கணனிப்பொறி இருத்தல் வேண்டும் (எனினும் தற்பொழுது இச்சேவையை வழங்கும் தனியார் நிறுவனங்கள் அதிகளவில் தோற்றம் பெற்றுள்ளன)

2) இம் முறையில் கடிதங்களை அனுப்புகையில் திகதியை குறிப்பிடுவதற்காக (number) கலண்டரினை கணனியில் தெரிவு செய்ய வேண்டும் இவ்வாறு தெரிவு செய்கையில் கணனி வைரஸ் வெளிவருவதற்கு வாய்ப்புண்டு. இது கணனியின் ஞாபகப் பகுதியின் பிரதான பகுதியை அழித்துவிடும்.

3) மேலும் தற்பொழுது christmas வைரஸ் பரவ உள்ளது எனவே நத்தார் பண்டிகை அன்று கணனிகள் யாவும் முன்னேற்பாடு காரணமாக ஓய்வில் இருப்பதால் அன்று இ–மெயில் வாழ்த்துக்கள் அனுப்புவது சாத்தியமாகாது.

4) அத்தோடு இவ் இ–மெயில் செய்தி அனுப்புகையிலேயே அதனூடாக கணனிக்குள் வைரஸ் புகுந்து விடுகின்றது என்ற கருத்து கணனியாளர்களிடையே பெரிதும் முக்கியம் பெறும் கருத்தாகும்.

5) Fax இல் செய்தி அனுப்புகையில் இ–மெயிலை விட நம்பகத்தன்மை அதிகமாகும் ஏனெனில் அனுப்பும் செய்தி அதே வடிவில் செல்கிறது.

6) Fax இல் படங்கள் அனுப்பலாம் ஆனால் இ–மெயிலில் இது சாத்தியமற்றது. ஏனெனில் அச்சுப்பிரதிப்படம் செல்லமாட்டாது ஆனாலும் வரைபுகளை அனுப்பலாம் எனினும் எல்லா வரைபுகளையும் அனுப்பமுடியாது. கணனியில் காணப்படும் மாதிரி வரைபுகளின் அடிப்படையில் அமைந்த வரைபுகளையே அனுப்பலாம்.

எஸ். ஜெயநாதன்.
(2000 ஆம் ஆண்டு) வர்த்தகம்

---

மற்றவர்களைக் கெட்டவர்கள் என்று சொல்வதன் மூலம் நாம் நல்லவர்களாகி விட மாட்டோம்

பகுத்தறிவிற்கு எட்டாத ஒன்றில் நம்பிக்கை வைப்பது, குருட்டுத்தனமான நம்பிக்கையாகும்.

தூய்மையான இதயம் இல்லாத யாரும் இறைவனின் சந்நிதியை நெருங்கவே முடியாது.

——— காந்தியடிகள்

# சிறகொடிந்த பறவை

பிள்ளையார் கோயில் மணி கணீர் கணீர் என்று ஒலித்தது. அப்பனே பிள்ளையாரே என்னால் எழும்பவும் முடியவில்லை நான் என்ன செய்யப்போறேன் என்று முழங்கியபடி சுந்தரம் படுக்கையில் புரண்டு கொண்டு இருந்தார். அப்பொழுதுதான் ஒருவருடத்திற்கு முன்னம்தான் படுத்திருந்தாலும் ஒரு மணி ஆக முன்னம் தனது வேலைகளை முடித்துக் குளித்துவிட்டு தேத்தண்ணியுடன் வந்து இங்க பாருங்கோ ஏழு மணியாச்சு எழும்புங்கோவன் தேத்தண்ணி போட்டு வைச்சிருக்கு முகம் அலம்பிப்போட்டுக் குடியுங்கோவன் ஒரு கண்டத்திற்குப் படுக்கிறியள். என்று பள்ளியெழுச்சி பாடி எழுப்புவாள். அவளும் என்னை விட்டுப் போய் ஒரு வருடம் ஆச்சு நாலு ஆம்பிளைப்பிள்ளைகளைப் பெத்தன் அவனவனே வெளிநாடு என்று சொல்லி ஓடிவிட்டாங்கள் படிக்கிற என்ரை பெண்பிளைப் பிள்ளையை மறிச்சு வைச்சு எனக்கு சமைச்சு போடவோ் அது எங்கையாலும் படிச்சு ஒரு உத்தியோகம் பார்த்துதேயானால் என்ரை கடைசிக்காலம் வரை என்னோட இருந்து பார்க்கும் என்று யாழ்ப்பாணத்தில் ஒரு கொஸ்ரலில் கொண்டுபோய் விட்டுவிட்ட எனக்கு இப்ப நான் தான் துணை என்று நினைத்துக்கொண்டு நீண்ட பெரு மூச்சுடன் எழும்பினார். தேத்தண்ணி அடுப்பை மூட்டிவிட்டு செய்ய வேண்டியதைச் செய்துவிட்டு ஓ இன்றைக்குச் சனிக்கிழமை சங்கரிட்டை ஒருக்கால் போவம். என்று அயல் வீட்டுச் சண்முகத்தின் வீட்டை நோக்கிப் போனார் எடே தம்பி சண்முகம் உன்ரை மோன் எங்கேயடா என்ர மோளுக்கு காசும் கடிதமும் கொடுத்து விடவேணும் இண்டைக்கு யாழ்ப்பாணம் போவான் தானே ஓமண்ண குளிக்கப்போட்டான் வந்தவுடன் வெளிக்கிடுவன் என்று சண்முகம் கூறவும் சங்கர் குளித்து விட்டு வரவும் சரியாக இருந்தது. தம்பி சங்கர் காசு தாறன் பிள்ளையிட்டைக் குடுத்து விடுறியே கெதியாக கொண்டு வாங்கோ வெளிக்கிடப்போறன். நில் தம்பி ஓடி வாறன் என்று சுந்தரம் வீட்டிலிருந்து ஒரு கவரையும் காசையும் கொண்டு வந்தார். இந்தா தம்பி நான் சுகமாம் என்று சொல்லு ஏதும் தேவை என்றால் உடன் உன்னோட சொல்லி விடச் சொல்லு என்று கூறிவிட்டுச் சென்றார்.

சங்கரோ மகிழ்ச்சியுடன் அதனை வாங்கிக் கொண்டு பஸ் வண்டிக்கு நேரமாகிவிட்டது என்று வேகமாகச் சென்றான். அவன் உள்ளத்தில் இறுதித்தடவையாக கதைத்துவிட்டு வந்த போது இருந்த வெண்ணிலாவின் அழகிய முகம் கண்ணுக்குள் நின்றது ரோசா நிறமான அவளின் உடலும் கதை சொல்லும் நீண்ட விழிகளும் சுருண்ட அடர்ந்த கருங் கூந்தலும எல்லோருடனும் சாந்தமாகப் பேசும் அவளின் இயல்பும் இன்னும் அவன் நெஞ்சை உறுத்தியது. அவளைச் சந்திக்கும் ஆவலில் சைக்கிளை வேகமாக உதைந்தான். சைக்கிளை ஒரு வீட்டில் விட்டுவிட்டு அவன் வரவும் பஸ்சும் வந்துவிட்டது. பஸ்சில் ஏறி இருந்தவனுக்கு மீண்டும் அவளின் ஞாபகம்.

இறுதி முறையாக அவளை அவன் சந்தித்தபோது சங்கர் பாங்கில் அண்ணாக்கள் போட்ட காசை எடுத்துக்கொண்டு நாம் இருவரும் கொழும்புக்கு சென்று விடுவோம். பின்பு அண்ணாமாருடன் கதைத்து எல்லாவற்றையும் சரி செய்யலாம் அதன் பின் அவர்கள் எம் இருவரையும் பிரிக்கமாட்டார்கள் ஏதோ ஒரு முடிவு கிடைக்கும். நாம் இருவரும் கதைத்து ஒருவருடம் ஆகின்றது. என்று கூறவும் சங்கர் ஒரு வித பயத்துடன் அதனை மறுக்கவும் இப்படியே நீங்கள் இருந்தால் என்ன நிலை அடுத்த மாதம் படிப்பு முடிய வீட்டை வந்து அப்பாவுடன் இருந்து என்ன செய்வது. நாம் கதைக்கக் கூட முடியாது என்று அவள் கூறவும் அடுத்த முறை வந்து முடிவு சொல்கிறேன் என்றுதான் கூறிவிட்டு சென்றதும் ஞாபகத்திற்கு வந்தது. இப்ப நான் போய் அவளிடம் என்ன சொல்வது.

அவள்தான் தன்னுடைய பணக்காரர் என்ற நிலையை நினைத்து சொல்கிறாள். அதை நம்பி நான் சென்றால் அவளின் அண்ணன்மார் என்னை ஏற்காவிட்டால் நான் என்ன செய்வது இருவரும் ஒருவேளை சாப்பிடக்கூட எனக்கு வருமானம் இல்லை ஏதோ படித்து முடித்து ஏதாவது வேலை செய்தாலும் பரவாயில்லை என்று தன் நிலையை நினைத்து குழப்பிக் கொண்டு செல்லும்போது பயணிகள் எல்லோரும் இறங்குவதைப் பார்த்து யாழ்ப்பாண நகரம் வந்துவிட்டது என்று நினைத்து கொண்டு தன் கம்பியூட்டர் வகுப்பை நோக்கி நடந்தான் அங்கே வகுப்பு முடிந்ததும் வெண்ணிலா இருக்கும் கொஸ்ரலுக்கு சென்றான். அது பெண்கள் வாழும் இடம் என்பதால் கட்டுப்பாடு கூட ஆண்களை கண்டபடி அனுமதிக்க மாட்டார்கள் ஆனாலும் சங்கர் வெண்ணிலாவிடம் சென்று பல நாட்கள் கதைத்து வருவதால் அவனை பெரிதாக பொருட்படுத்தாது விட்டுவிடுவார்கள். இதனால் அவன் நேரே வெண்ணிலாவிடம் சென்றான். சங்கர் வந்து விட்டீங்களோ இப்பதான் வாறீங்களோ போனவாரம் உங்களை பார்த்திருந்து ஏமாந்ததுதான் மிச்சம் என்ன அப்படி அடங்காதவேலை ஏன் என்னிடம் வர பிடிக்கவில்லையா ? சீச்சீ அப்படியில்லை ஏதோ முக்கியமான வேலை ஒன்று சென்று விட்டேன் போன கிழமை வகுப்பிற்கு கூட வரவில்லை அப்படி என்ன என்னை மிஞ்சிய வேலை என்று இருவரும் வழமை போல கதைத்துக் கொண்டு இருக்கும் போது சங்கர் நான் காசு எடுத்து பிளேனுக்கும் ஆயத்தம் செய்திட்டன். நீங்கள் ஓம் என்றால் சரி நீங்கள் மறுக்கமாட்டீர்கள் தானே என்று ஆவலாக கேட்டாள். சங்கர் யோசித்துக்கொண்டு இருந்தான். இங்க பாருங்கோ சங்கர் என்னவானாலும் அண்ணாக்கள் என்னை விட மாட்டார்கள். நீங்கள் சம்மதித்தால் சரி அடுத்தகிழமை போவம் என்று சொல்லவும் சங்கர் தலையாட்டி சம்மதித்தான். சரி சங்கர் நேரமாச்சு போட்டு வாங்கோ அடுத்தசனி காத்திருப்பேன் என்று சங்கரை வழி அனுப்பி வைத்து விட்டு வாழ்வினையே தான் வென்றுவிட்ட பெருமூச்சுடன் வந்து அடுத்தகிழமை பயணத்திற்காக ஆயத்தங்கள் செய்யத்தொடங்கினாள். ஆனால் சங்கரும் ஒருபக்கம் சந்தோசத்துடனும் மறு பக்கம் கவலையுடனும் ஒருவாறு வீட்டிற்கு வந்தான். ஒருவாறு ஒரு கிழமை கழிந்துவிட கொழும்புக்கு செல்வதற்கான ஆயத்தங்களுடன் சங்கர் வெண்ணிலாவிடம் சென்று இருவருமாக விமான நிலையத்தை அடைந்தனர். குறித்த நேரம் வந்ததும் விமானம் அவர்கள் இருவருடன் வேறு சில பயணிகளையும் சுமந்து கொண்டு கொழும்பு நோக்கிச் சென்றது.

இரவுப் பொழுது வந்தும் தங்கள் மகனைக் காணாததால் சண்முகமும் மனைவியும் வருத்தமுற்றவர்களாய் அதிகாலை யாழ்ப்பாணம் சென்றபோது இவர்கள் இருவரும் சென்று விட்ட செய்தி தெரிய இருவரும் வீட்டிற்கு வந்தவுடன் சுந்தரமும் செய்தியை அறிந்தார். அவரிற்கும் கால் கை ஒன்றும் ஓடவில்லை. தன் பிள்ளைகளின் நிலையையும் தன் நிலையையும் நினைத்து நினைத்து வருந்தி ஆறு மாதங்களின் பின் நோயாளியாக படுக்கையில் தள்ளப்பட்டார். இப்படி இருக்கும் ஒரு நாளில் சுந்தரம் உறங்கிக்கொண்டு இருக்கையில் அப்பா என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் என்று தன் காலடியில் ஒரு பெண் விழ திடு திடு வென விழித்தார். வெண்ணிலா கோலம் எல்லாம் மாறி யாரோ ஒரு ஏழை போல் நகை காசு எதுவும் இல்லாது இருப்பவள் போல் காணப்பட்டார். அப்பா நான் உங்கள் நம்பிக்கைக்கு துரோகம் செய்ததால் தான் எனக்கு இந்த நிலை என்று கதறி அழுகிறாள். என்ன இருந்தாலும் பெற்ற மனமல்லவா அவளைத் தேற்றி சுந்தரம் ஆறுதல் கூறுகிறார். பின்பு தான் சங்கர் தாம் கொண்டு சென்ற நகைகள் எல்லாம் விற்று காசும் முடிந்தவுடன் எங்கேயோ கொள்ளையடித்து பொலிசாரால் கைது செய்து சிறையில் இருப்பதையும் வெண்ணிலாவின் அண்ணன்மாருக்கும் அவர்களுக்கும் உறவு இல்லை என்பதையும் அறிந்தார்.

செ . கோகிலா

(2000ஆண்டு)

# பொதுப் பொருளாதாரத்தில் அரசின் பங்களிப்பு

இன்றைய பொருளாதாரங்கள் யாவும் தனியார் முயற்சியை அடித்தளமாகக் கொண்ட சந்தை முறைப் பொருளாதாரமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. அவற்றின் பலாபலன்கள் நல்லவையாக அமைவதேயாகும். எவ்வாறாயினும் அரசாங்கத்தின் பங்களிப்பும் அவசியமாகும் என்ற கருத்து உலகின் எல்லாப் பொருளாதாரங்களிலும் காணப்படுகின்றது. இவ்வாறு அரசின் பங்களிப்பு இடம் பெறும் சந்தர்ப்பங்கள் வருமாறு.

1) பொதுப்பண்டங்களை வழங்குதல்
2) பொருளாதார கட்டுமானத்தை உயர்த்துதல்
3) பொருளாதார உறுதியை ஏற்படுத்துதல்
4) பொருளாதார சமத்துவத்தை உருவாக்கல்
5) பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஏற்படுத்துதல்
6) வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்துதல்
7) சமூக நலனை உயர்த்துதல்

## தனியார் பண்டங்களும் பொதுப்பண்டங்களும்

தனியார் பண்டங்கள் என்பது விலை கொடுத்து நுகரவேண்டிய பண்டம் ஆகும் இதனால் தனியார் பண்டம் சந்தையின் விலை பொறிமுறைக்கு உட்பட்டதே ஆகும். ஆனால் பொதுப்பண்டம் என்பது விலையின்றி நுகரக்கூடியது ஆகும். எனவே தனியார் பண்டம் நுகர்வில் விலக்குதல் விதிக்கு உட்பட்டது ஆகும். எனவே சந்தையின் விலைப் பொறிமுறைக்கு உட்படமாட்டாது.

தனியார் பண்டத்தை பொறுத்தவரை விலை செலுத்தாவிடின் அதனை நுகர்வதில் இருந்தும் விலக்கி வைக்கப்படுவர். எனவே தனியார் பண்ட நுகர்வில் விலக்குதல் விதிக்கு உட்பட்டது ஆகும். ஆனால் பொதுப்பண்டத்தை பொறுத்தவரை விலை செலுத்தாவிடினும் இதன் நன்மை சென்றடைவதை யாராலும் தடுக்க முடியாது. எனவே பொதுப் பண்டம் நுகர்வின் விலக்குதல் விதிக்கு உட்பட்டது ஆகும். தனியார் பண்டங்கள் பிரித்து நுகரக்கூடியவை ஆகும். ஆனால் பொதுப்பண்டம் கூட்டாகவே நுகரப்படும், தனியார் பண்டம் நுகர்வில் போட்டித்தன்மை உடையது ஆகும். இதனால் ஒருவரின் நுகர்வில் போட்டித்தன்மை அற்றது ஆகும். இதனால் ஒருவரின் நுகர்வு இன்னொருவரின் நுகர்வினை பாதிக்க மாட்டாது.

தனியார் பண்டம் ஒன்றினை மேலதிகமாக ஒருவர் நுகர முற்படும் போது மேலதிக செலவு ஏற்படும் எனவே பண்டத்திற்கு எல்லாச் செலவும் உண்டு. ஆனால் பொதுப்பண்டம் ஒன்றினை மேலதிகமாக வேறு ஒருவர் நுகருகின்ற போது செலவு ஏற்படுவதில்லை. எனவே பொதுப்பண்டத்திற்கு எல்லைச் செலவு பூச்சியம் ஆகும். தனியார் பண்டத்திலும் நுகருகின்ற போது அமையச் செலவு ஏற்படும். ஆனால் பொதுப்பண்டத்தில் அமையச் செலவு பூச்சியம் ஆகும்.

## பொருளாதாரத்தின் உட்கட்டுமானம்

பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவும் தெருக்கள், மின்சாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, புகையிரதப்போக்குவரத்து, விமானத்தளம், துறைமுகங்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் போன்றவை பொருளாதாரத்தின் உட்கட்டமைப்பு அல்லது கீழ்க்கட்டமைப்பு வசதிகள் எனப்படுகின்றன. இத்தகைய பொருளாதார கீழ்க்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் தலையிட்டு வழங்க வேண்டிய அவசியம் உள்ளது ஏனெனில்

1) இதற்கு பெருந்தொகையான மூலதனம் அவசியம் ஆகும். தனியாரிடம் மூலதனம் பெருமளவில் திரளாது ஆகவே தலையிட்டு அதனை வழங்க வேண்டும்.
2) இவற்றினை வழங்க மானியம் வழங்க வேண்டும். இதனையும் அரசாங்கத்தினாலேயே மேற்கொள்ள முடியும்.
3) வெளிவாரி நன்மைகள் பல இருந்தால் அரசாங்கம் தலையிட்டு வழங்குகின்றது. இத்தகைய வெளிவாரி நன்மைகள் வருமாறு
   (1) உற்பத்திச் செலவு குறைவடையும்
   (2) காரணிகளின் விளைவுதிறன் அதிகரிக்கும்.
   (3) உற்பத்தி பெருக்கம் அடைந்து பொருளாதார வளர்ச்சி ஏற்படும்

இன்றைய உலகம் பொருளாதாரங்களில் பொருளாதார கீழ்க்கட்டமைப்பு வசதிகளை தனியார் துறை பெருமளவிற்கு வழங்கி வருவதனை அவதானிக்கலாம். இலங்கையிலும் தனியார் துறை இத்தகைய பொருளாதார உட்கட்டுமானத்தை வழங்க தூண்டிவிடும் நடவடிக்கைகள் வருமாறு.

1) BOO – கட்டுதல், இயங்குதல், உரிமை கொள்ளல்
2) BOT – கட்டுதல், இயங்குதல், கைமாற்றுதல்

பொருளாதாரத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் என்பதைவிட சமூக கீழ்க்கட்டமைப்பு வசதிகள் எனவும் ஒரு பதத்தை வழங்குவர். இது சமூக மக்களின் நலன் கருதி மேற்கொள்ளப்படும். கல்வி, சுகாதாரம், வீடமைப்பு போன்ற நடவடிக்கைகளை புலப்படுத்துகின்றது.

பொருளாதாரத்தின் உட்கட்டுமான வசதிகளை தனியார் துறையும் வழங்கமுடியும் எப்போதெனில் அதனை வழங்குவதற்காக ஏற்படக்கூடிய செலவுகளை வருமானமாக பெறக்கூடிய சந்தர்ப்பம் உள்ள நிலையாகும். பொருளாதாரத்தின் உட்கட்டுமான வசதிகளை பொதுப்பண்டம் என கூறிவிட முடியாது. ஏனெனில் இத்தகைய கீழ்க்கட்டுமான வசதிகளை பலர் ஒரே நேரத்தில் நுகரக்கூடியதாக இருப்பதால், பொதுப்பண்டத்தின் பண்பைக் கொண்டுள்ளது. ஆனால் இவற்றின்மீது கட்டணம் அறவிடப்படுவதால் பொதுப் பண்டத்திற்கு முரணான பண்புகளைக் கொண்டுள்ளது. ஆகவே இதனை அரைகுறைப் பொதுப்பண்டம் என அழைக்கலாம்.

## பேரினப் பொருளாதார உறுதி

பொருளாதார செயற்பாடுகளை உறுதியை உண்டாக்குவதற்காக அரசாங்கம் தலையிடும். குறிப்பாக பொருளாதார ஏற்றஇறக்கம் அற்ற நிலையை உண்டாக்குதல் இதன் கருத்தாகும். இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும்

1) விலைமட்டத்தில் தளம்பல் அற்ற நிலையை உருவாக்குதல் குறிப்பாக பணவீக்கத்தை அகற்றல்.
2) வேலையில்லாப் பிரச்சனையை ஒழித்து நிறை தொழில் மட்டத்தினை ஏற்படுத்தல்
3) சென்மதி நிலுவையில் பற்றாக்குறை ஏற்படாமல் தடுத்தல் ஆகும்.
4) தேசிய உற்பத்தியினை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியினை உண்டாக்குதல்

குறிப்பாக பொருளாதார உறுதியை உண்டாக்குதல் என்பது எல்லாப் பொருளாதாரங்களிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்த வகையில் அது முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். குறிப்பாக எந்தவொரு நாட்டிலும் அபிவிருத்தியை உண்டாக்க வேண்டுமாயின் உறுதி நிலைநாட்டப்படுவது அவசியம் ஆகும். இந்த வகையிற்றான் பொருளாதார உறுதியும் அவசியமாகின்றது.

மேற்குறிப்பிட்ட பேரண்டப் பொருளாதார உறுதியை உண்டாக்குவதற்காக பின்வரும் கொள்கைகளை அரசு வகுக்கின்றது.

1) நாணயப் பூட்கை
2) கதைப் பூட்கை
3) சர்வதேச வரத்தக்க கொள்கை

## பொருளாதார சமத்துவம்

வீட்டுத்துறையினர் மத்தியில் வருமானப் பகிர்விலும் சொத்துப் பகிர்விலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றது. இது சமுதாய அநீதியாகும். எனவே குடித்தனங்கள் மத்தியில் காணப்படும் வருமான ஏற்றத்தாழ்வுகளையும் நீக்கிக் கொள்ள முற்படுதலே பொருளாதார சமத்துவம் பேணுதல் ஆகும்.

ஓர் அரசாங்கம் பொருளாதார சமத்துவத்தை உண்டாக்குவதற்காக பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.

1) உயர்ந்த வருமானம் பெறுநர் மீது உயர்ந்த வரி அறவிடுதல்.
2) குறைந்த வருமானம் பெறுநர்க்கு நிவாரண வசதி வழங்குதல்.
3) உயர்ந்த சொத்துக்கள் வைத்திருப்போர் மீது உச்ச வரம்பிடுதல்.
உதாரணம் -- காணி உச்ச வரம்புச் சட்டம்
4) வறிய தொழிலாளர்களுக்குச் சார்பாக இழிவுக் கூலியை நிர்ணயித்தல்.
5) அரசாங்க அபிவிருத்தித் திட்டத்தின் பலாபலன்களை வறிய மக்களுக்குக் கிடைக்கச் செய்தல்
6) தனியார் மயமாக்குதல், தேசமயமாக்குதல், கொள்கைகளைப்பின்பற்றுதல்

கி. சந்திரகுமார்.
(2000 கலை)

1. ஒரு வருடத்தின் பெறுமதியைப் பற்றி வருடாந்தப் பரீட்சையில் தோல்வியுற்ற மாணவனிடம் கேளுங்கள்.
2. ஒரு வாரத்தின் பெறுமதியைப் பற்றி ஒரு வார சஞ்சிகை ஆசிரியரிடம் கேளுங்கள்
3. ஒரு மணித்தியாலத்தின் பெறுமதியைப் பற்றி போர்க்களத்தில் அனுமதிக்கப்பட்ட போர்வீரனிடம் கேளுங்கள்
4. ஒரு நிமிடத்தின் பெறுமதியைப் பற்றி புகைவண்டி ஒன்றைத் தவறவிட்டவனிடம் கேளுங்கள்
5. ஒரு மில்லி செக்கனின் பெறுமதியைப் பற்றி ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கத்தை தவறவிட்ட ஓட்டவீரரிடம் கேளுங்கள்

தொகுப்பு – வி. சசிகரன்
(2000 விஞ்ஞானம்)

# Y2K உலகைத் திசை திருப்புமா ?

கணனியின் கண்டு பிடிப்பினால் உலகமே மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தது மின்சாரத்தை மனிதன் பயன்படுத்த ஆரம்பித்த நாளில் இருந்து கிடைக்கப் பெற்ற மின் சாதனங்களுள் கணனி ஓர் உன்னத கருவியாகத் திகழ்கிறது. கணனி உருவாகி ஆண்டு பல கழிந்து விட்டது. முன்பு இது இல்லாமல் எவ்வாறு கருமங்கள் நிறைவேறின என வியக்க வேண்டியுள்ளது. இன்று தகவல்களை ஞாபகத்தில் வைத்திருப்பதில் இது அற்புதமான வியப்பூட்டும் பணியாற்றுகிறது. இது இல்லாமல் இவ்வுலகம் என்ன செய்யப் போகிறதோ ?

கணனியில் தவறு நேருமாயின் அது நிகழ்ச்சிநிரல் செய்த மனிதனின் தவறையே வெளிப்படுத்தும். மனிதனைக்காட்டிலும் மிகவேகமாக கணனி அவ்வேலையைச் செய்து முடித்துவிடுகிறது. ஆனால் வேலையில் ஏற்படும் பிரச்சனையை எவ்வாறு தீர்க்க வேண்டும் என்று மனிதன் இதற்குள் கட்டளை கொடுத்திருக்க வேண்டும். இல்லையெனில் அப்பிரச்சனையைப்பற்றி கணனி படும் பாடு பெரும் திண்டாட்டம் தான். 1956 ,1960 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கணனியில் வேலைகளைச் செய்ய ஆரம்பித்த மனிதன் எதிர்கால விளைவுகளைச் சிந்திக்கத் தவறிவிட்டான். கணனியின் ஞாபகத்தில் தகவல்களைச் சேமித்துவைக்க பெரும் செலவு ஏற்பட்டது. இதைக் குறைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டு பிடிப்பதற்கு கணனி வல்லுநர்கள் முயற்சி எடுத்தார்கள். கணனியில் சேமிக்கும் தகவல்களைக் குறைப்பதற்காக வருடங்களை இறுதி இரு எண்களால் மட்டும்குறித்தார்கள் உதாரணமாக 1960 ஆம் ஆண்டை 60 என்றே கணனிக்கு கொடுத்தனர். ஆனால் அச்சில் விடயங்களை எமக்குத் தரும்போது 19 ஐயும் சேர்த்து 1960 என்றே கொடுக்கும்

இம்முறையைப் பயன்படுத்தியே பல இலட்சக்கணக்கான தகவல்கள் கணனிக்குக் கொடுக்கப்பட்டன. பார்ப்பதற்கு எளிதாக இருக்கும் இவ்வழி பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என எவரும் சிந்திக்கவில்லை. பல தகவல்கள், நிகழ்ச்சிதிட்டங்கள் அடுத்த நூற்றாண்டுக்கும் தொடர்ந்து செல்பவை என்பதை அன்று சிந்திக்கவில்லை. இவ்வாறு இதே முறையைத் தொடர்ந்து பயன்படுத்தும் போது 2000ம் ஆண்டை 00 என்றே நாம் கணனிக்கு கொடுக்கவேண்டும். ஆனால் கணனி இதனை 1900 என்றே புரிந்து கொள்ளும் இதனால் ஏற்படக் கூடிய பிரச்சனையை எளிதில் விளங்கிக் கொள்ளலாம்

உதாரணமாக 1999 ஆம் ஆண்டு வங்கி ஒன்றில் எடுக்கப்பட்ட கடன் 5 ஆண்டுகளில் மீளச் செலுத்தப்படவேண்டும் என வைத்துக் கொண்டால் மீளச் செலுத்தும் ஆண்டு எது என்பதை கணனி 1904 என்றே காட்டும் இதுபோலவே பல்வேறுபட்ட தகவல்களிலும் தவறு ஏற்பட வாய்ப்புகள் உண்டு சில சந்தர்ப்பங்களில் மிக மோசமான விளைவுகளும் ஏற்படலாம்.

மின்சாரம் கண்டுபிடித்ததற்குப் போட்டியாக மைக்ரோசிப் நம்மிடையே தொழில் புரட்சியை ஏற்படுத்தியது என்று டொரண்டோ செய்தித்தாள் குறிப்பிட்டது. இதனுடைய கண்டுபிடிப்பாளர்கள் கற்பனை செய்ததைவிட நாம் மிக அதிகமாகவே இதனைச் சார்ந்து இருக்கிறோம். உலகம் முழுவதும் 1900 ஐயும் 2000 ஐயும் வேறுபடுத்தி அறியமுடியாத கணனிகள் நிறைய உள்ளன. இவை அடையாளம் காணப்பட்டு மாற்றப்படாவிட்டால் உலகம் முழுவதும் பல குழப்பங்கள் ஏற்படலாம்

புதிய வருடம் 2000ம் ஆண்டு பிறப்பதற்கு முன் அல்லது புதிய வருடத்தில் ஓரிரண்டு வாரங்கள் கழிவதற்கு முன்பாக யாருக்குமே இதைப் பற்றித் தெரியாது என்று அமெரிக்காவைச் சேர்ந்த செனட்டர் ராபர்ட் வெனட் குறிப்பிடுகிறார். இதன் விளைவு

பொருளாதாரத்திற்கும் மக்களுக்கும் குழப்பத்தையும் கஸ்டத்தையும் ஏற்படுத்தும் என்பதற்கு சில ஆதாரங்கள் இருக்கின்றன. மின்சாரப்பங்கீடு , தொலைத்தொடர்பு , வங்கிச்சேவை போன்றவற்றின் வலைப்பின்னல் பாதிக்கப்படும். இதேபோல் மருத்துவ நிறுவனங்கள் , காப்புறுதி போன்றனவும் பாதிக்கப்படும். இவ்வாறான வை 2 கே கணனிப் பிரச்சனையை எல்நிநோ விற்கு ஒப்பிடுகிறார்கள்.

கணனிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பணத்தை வாரியிறைக்க வேண்டும் என்கிறார்கள். சில வல்லுனர்கள், அரச கணனிகளைச் சரி செய்வதற்கு மட்டும் 470 கோடி டொலர் செலவாகும் என்கிறார்கள். உலகம் பூராவும் உள்ள கணனிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எவ்வளவு செலவாகும் தெரியுமா ? ? ? சாஃப்ட்வேரை பொருத்துவதற்கும் அது தோல்வி அடைந்தால் அதன் நட்டத்திற்கும் எவ்வளவு செலவாகும் ??? 4 இலட்சம் கோடி என்கிறது ஒரு குழு மொத்தத்தில் மனித வரலாற்றில் சொல்ல முடியாத ஒரு செலவை இது ஏற்படுத்தும் என்கிறது நியூயோக் போஸ்ட்

கடந்த வருடம் வை 2 கே தொடர்பாக ஏராளமான தகவல்கள் வெளிவந்தன. இது ஒரு மோசமான பிரச்சனை. வங்கிகள் எல்லாமே இழுத்து மூடப்படலாம். 2000 ஆண்டு பிறப்பதற்கு முன் இப்பிரச்சனை தீர்க்கப்பட்டு விடும் என மற்றோர் சாரார் நம்புகின்றனர் வலைப்பின்னல் அமைப்பு தோல்வி அடையும் என்பதை யாரும் நம்பவில்லை. இப்பிரச்சனை தற்போது உள்ளது என்பது உண்மைதான். அது எரிச்சலை ஊட்டுவதாகவே உள்ளது பல நிறுவனங்கள் திகதி மாற்றங்களை ஏற்படுத்தி கணனிகளில் ஆய்வுகள் செய்கின்றன. ஆகவே பிரச்சனைக்குத் தீர்வு காணப்படலாம். ஆனால் வை 2 கே பிரச்சனை என்ன என்பதை இவ்வுலகம் எப்படியும் தெரிந்து கொள்வது உறுதி. அவசரப்பட வேண்டாம் பொறுமையாக இருங்கள்


வி. சுகந்தன்
(2000 கலை)

---


ஏணி ஏற்றம் பெற வாழ்த்துகிறது

**அம்பிகா பல்பொருள் வாணிபம்**

முதன்மைச்சாலை நெல்லியடி



பலசரக்கு சாமான்களை தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

! அம்பிகா !

# பள்ளிச் சோதனை

நான் பள்ளிப் பருவத்தில்
துள்ளி ஓடும் மான்
இதை இனிதே கடக்க
எத்தனை தடங்கள் எனக்கு

பானை பிடிக்க வேண்டியவள்
பேனா பிடிக்கிறாள்
புலம்புகிறாள் அன்னை

உழைப்பை கரைத்து குடிக்க
உனக்கெதற்கு படிப்பு
உதாசீனம் செய்யும் தந்தை

சோகத்துடன் புத்தகப்பையை சுமந்து
வெளியே வந்தால்
படித்துக் கிழிக்கப் போகிறாள்
ஏளனம் செய்யும் சுற்றம்

இத்தனையும் தாண்டி பாதையில்
பள்ளிப் பாசறைக்கு நடக்கையில்
கையில் கடிதத்துடன்
நிற்பான் காளை ஒருவன்

எத்தனை எதிர்ப்பு வந்தாலென்ன
படி என்னும் அதிபரின் ஆலோசனையும்
உலகை ஆளக் கல் என்ற
கனிவான ஆசானின் அறிவுரை
காதில் ரீங்காரம் இடும் வரை
கற்றிடுவேன் சிறப்புடனே
நிகழ்த்திடுவேன் பல சாதனைகளை

S. PARAMESWARY
(2001 ARTS)

# வரதட்சணையின் கொடுமை

மாலை நேரத்தில் வீட்டிற்கு வந்த மாலதி தனது தோல்பையை கழற்றி வைத்துவிட்டு அலுத்துக் கொண்டு "இப்படியும் ஒரு சோதனையா என் வாழ்வில்" என்று நினைத்துக் கொண்டு "அம்மா அம்மா" என்று அழைத்தாள். "ஓ வந்திட்டியா நான் இன்னும் கவனிக்கவில்லை போய் கை கால் கழுவிட்டு வாம்மா நான் இதோ போய்த் தேனீர் கொண்டு வருகிறேன்" என்று கூறிக்கொண்டு சமையல் அறைக்குள் சென்றாள் தாய் .மாலதி ஒரு துணியால் முகம் துடைத்துக்கொண்டு உள்ளே வந்தாள். பின் திருநீற்றை எடுத்து நெற்றியில் " முருகா "என்று பூசிக்கொண்டு தேனீரைப் பருகினாள். அப்போது தாய் கூறினாள் " உனக்கு ஒரு வரன் வந்திருக்கு அம்மா அதைப் பார்த்திடலாம் என்று பார்க்கிறேன் மாப்பிள்ளையின் பெயர் ரகுவாம் அவன் படிப்பிக்கின்றானாம் நல்ல சம்பளம் எடுக்கிறான் நிறமும் பறவாயில்லை" "ஆ அது சரி நீங்கள் என்ன முடிவு சொன்னீர்கள் ?" என்று மாலதி கேட்டாள். "ஏன் அம்மா உனக்கு பிடிக்கவில்லையா? நான் என்ன சொல்கிறது ? உனக்குப் பிடிக்க வேண்டும். எதற்கும் அவள் வந்ததற்குப் பிறகு கேட்டுச் சொலுகிறேன் என்று சொல்லி அனுப்பி விட்டேன். நாளைக்கு உனக்கு லீவு தானே ? வீட்டில் நிற்பாய் தானே ? அவர்களும் வரட்டும். நேரில் கண்டு நிறை குறைகளைப் பார்த்து சரி என்டால் செய்வது " என்றாள் .

"அம்மா நீங்க ஏற்கனவே மூன்று இடத்திலிருந்து வந்து வரதட்சணை குடும்பநிலை என்று சொல்லி விட்டுப்போட்டார்கள் இனிமேல் இந்த வார்த்தை எனக்குக் கிட்ட சொல்லாதீர்கள் என்று சொன்னேன் அல்லவா? நடக்காத விசயத்தை விட்டு விடுவதை விட்டிட்டு திரும்பத் திரும்ப அதைச் சொல்லி எனக்கு கோபத்தை கிளறாதீர்கள்" என்றாள். "ஓமடி நான் கிளறக்கூடாது வேறு யார் இதை கவனிப்பார்கள்? என்னைத்தான் குறை சொல்வார்கள். உன் அப்பா இருந்தால் இது எல்லாம் வருமா ?" என்று கூறும்போது அவளது கண்களில் நீர் அரும்பியது. "அம்மா நான் எதுவும் சொன்னால் உடனே அப்பாவை அழைப்பீர்கள் பின் நீங்கள் அழுவீர்கள் என்னை என்னதான் செய்யச் சொல்றீர்கள்? அம்மா உங்களுக்கு ஒன்றும் விளங்க மாட்டேன் என்கிறதே." "என்னடி விளங்க இருக்கிறது ?" என்று தளுதளுத்த குரலில் சொல்லி முடித்தாள் தாய். "அம்மா நீங்க சொல்வது எல்லாம் சரி வாறவங்கள் வரதட்சணை என்று எல்லாம் கேட்டால் கொடுப்பதற்கு ஏது அம்மா உங்களிடம் கிடக்கு சீர் சிரத்தை நகை நட்டு என்று மேலும் கேட்பாங்கள் இதற்கு எல்லாம் என்னம்மா செய்வது ? தம்பி தங்கை படிப்புச் செலவுக்கும் உணவு உடை என்றெல்லாம் கணக்கு போட்டால் என்னுடைய இந்தச் சம்பளம் காணாமல் வட்டி குட்டி என்று சொல்லி எடுத்து ஒருமாதிரி வாழ்ந்திட்டிருக்கிறோம். நான் திருமணம் முடித்தபிறகு நீங்க தம்பி தங்கை படிப்புச்செலவுக்கு என்னம்மா செய்வீர்கள் அப்படியானால் கூலிக்குப் போவீர்கள். அதெல்லாம் வேண்டுமா? இந்த நிலையில் எனக்குத் திருமணம் வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டு போய் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டு கட்டிலில் படுத்தாள் .

அன்று இரவு முழுவதும் அவளுக்கு இருண்ட யுகமாக காட்சி அளித்தது. பின் ஒருவாறு உறங்கிவிட்டாள்.காலை 4.30 மணியை மேசை மீதுள்ள கடிகாரம் காட்டியது. பார்வதி எழுந்து தனது காலை வேலைகளைச் செய்யத் தொடங்கினாள். தாய் எழுந்தவுடன் எழும்பும் மாலதி அன்று இன்னும் எழும்பவில்லை. சற்று நேரம் கழித்து கடிகாரம் 6 முறை அடித்தது .மாலதி எழும்பி சோம்பல் முறித்துக் கொண்டு வெளியே வந்தாள். தன்னை தாய் எழுப்பிவிடவில்லை என்று தாயிடம் குறைபட்டுக் கொண்டாள். தாய் காலை உணவை சமைத்தாள் .மாலதி தன் தங்கை , தம்பியுடன் சேர்ந்திருந்து காலை உணவை உண்டாள். உண்ணும்பொழுது வாசலில் மணியோசை கேட்டது. யன்னல் வழியே எட்டிப் பார்த்தாள் பார்வதி புரோக்கருடன் மாப்பிள்ளை வீட்டார் வந்திருந்தனர்

உடனே வெளியே சென்று வரவேற்றாள் பார்வதி அதன்பின் அவர்கள் அறிமுகப்படுத்தி தங்கள் விஷயத்தைக் கூறினர் பின் தங்களுக்கு 5 இலட்சம் தர வேண்டும் என்றும் அதைத் தவிர உங்கள் மகளுக்கு நீங்கள் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தனுப்புங்கள் என்று கூறினர் பார்வதி சிறிது நேரம் மௌனத்திற்குப் பிறகு ஆமோதித்தாள். இதனைக் கவனித்துக் கொண்டிருந்த மாலதி வந்து எனக்கு இந்தத் திருமணத்திற்கு இஸ்டமில்லை என்று கூறினாள் .

எல்லோரும் திகைப்புடன் அவளை நோக்கினர் பார்வதியின் முகம் வாடி ஏனென்ற கேள்விக்குறி முகத்தில் தோன்றியது . உடனே மாலதி விளக்கம் சொன்னாள் . நான் விரும்புவது வரதட்சணை இல்லாத ஒருவர், பண்பானவராக கிடைத்தால் நான் இந்தக் கணமே கழுத்தை நீட்டத் தயார் . ஆனால் என் போன்ற ஏழைப் பெண்களை வரதட்சணை என்ற பெயரில் கொடுமைப்படுத்துகிறார்கள் . என்றைக்கோ ஒருநாள் ஏழைப் பெண்சமூகத்திற்கு வரதட்சணை என்ற பெயரில் விடிவு வரும் என்று கூறினாள் உடனே வந்தவர்கள் நன்றி கூறி விடைபெற்றுச் சென்றனர் அவர்கள் சென்றதும் மகளின் மேல் அனலாய் வார்த்தைகளை வீசினாள் பார்வதி . ஆனா() மாலதியோ அசைந்து கொடுக்கவில்லை இப்போது மாலதி தனது விடிவு காலத்தை எண்ணி ஏங்கியவண்ணம் இருக்கிறாள்

செல்வி கி. நிரோஜினி
( 2001 கலை )


"ஏணி" சிறப்புற வாழ்த்துகிறோம்

பலசரக்கு சாமான்களை மொத்தமாகவும் சில்லறையாகவும்
கொள்வனவு செய்ய மிகச் சிறந்த ஸ்தாபனம்

ஜமுனா

உங்களுக்குத் தேவையான பாடல்கள் படங்கள் என்பவற்றை
மிக நவீன முறையில் ஒலி ,ஒளிப்பதிவு செய்துகொள்ள

அருண் வீடியோ



ஜமுனா ஸ்ரோர்ஸ் & அருண் வீடியோ

பிரதான வீதி , நெல்லியடி கரவெட்டி.

# மரம் நட்டு சுகம் காண்போம்

எங்கள் பூமி வரட்சிகாண ஏது காரணம்
காலமழை கணக்குத் தப்பி போனகாரணம்
தங்கி வழியும் நீரில்லாமல் தரையும் கல்லாச்சு
தாரை மழை பெய்திடாது பாலையானது

வான்முகில் படிவில்லாத அயனமண்டலம்
வருடத்திலே நீண்டகாலம் வளிவரண்டது
கானகத்து நெடுமரங்கள் களையப்பட்டதால்
கறுக்கும் முகில் எல்லைதாண்டி கழவிரைந்தது

ஊரின் நெடுஞ்சாலை வீதி "நீ" வெளியாக
உக்கிரமாய்ப் பருதி கதிர் உருப்பெருத்தது
மாரிகாலம் ஏட்டில் உண்டு நாட்டிலில்லையே
மண்செழிப்பு மாண்டுபோன மரம் உலர்ந்தது

மரங்களினால் நிறைவுபெறும் மனை உருவாக்கம்
வாட்டசாட்ட வடிவம் தாங்கித் தோற்றம் தந்தது
கரங்களினால் நடுகை செய்யாக் காட்டுத் தாவரம்
கத்தி கோடரி தறிக்க கருகிச் சாய்ந்தது

இயற்கைச் சூழல் இறந்து போக இடர் விளைந்தது
இரவி வெப்பம் தாக்கத் தரை இறுகிப் போனது
சுத்தமான காற்று இங்கே சுவாசிக்க இல்லை
தூய நீரைத் தாகந்தீர அருந்தவு மில்லை

புத்தி கெட்ட மனிதர்களால் புவி வரண்டது
பூதம் போன்ற வெப்ப நோயால் உடல் மெலிந்தது
சத்துணவுக் காய்கனிகள் சாரம் கெட்டது
சாலி வயல் மண் செழுமை சரிவு கண்டது

இத்தியாதி இடர் தவிர்க்க இக்கணத்திலே
ஏகபோக "மரம்நடுகை" ஏற்புடையதே
சொத்தோடு சுகமும் உண்டு தூயசூழலில்
தூயசூழல் அனுபவமே சுதந்திரப்பேறு

து. துஷ்யந்தினி
(2001 கலை)

# WHY I STUDY ENGLISH

English has become the world language It is no more the property of the English . It is estimated that nearly two - thirds of the world population speak english . The area and scope of english is much more than any other language.

Man's activities have been stepped up to explore space and underground Man makes many new enquries . They widen his areas of knowledge . America tops the list in space exploration atomic research and communication . The U .S .A keeps its records of research in english. The other countries Such as Britain , France , Russia Germany and India also keep then records fully and or partially in english This clearly shows the elasticity of english to cope with the growing sciences . A knowledge of English will help us avail of this new knowledge

English has become the language of communication , International debates parleys , negotiations and concluding of Pacts and Treaties . The Simla agreement and the Camp David Accord are classical examples .

English is a rich and living language .It stands to the dictates of time. New words are being coined to meet the growing lexical demands of enquries .

English has had a sound background of Literatime ,Arts , Science and Law from these rich backgrounds , its development to meet the new demands , is no wonder.

Besides being taken into the new fields of inquiry . I am proud to say that I am one among the two -thirds who know this world language .

Sebastian K . Roy Nixon
[ 2000 maths ]

---

Child is the Father of Man
Life is a sleep and a Forgotting
Knowledge comes , but Inisdom Lingers
------- Wordsworth

If Virtue Feeble were ,Heven itself would come to Thee
--------- John Milton

# பணம்

அன்று என்
கையில் பணமிருந்தால்
நான் பலருக்கு பெஸ் பிரண்ட்
இன்று என் கையில் காசில்லை என்பதால்
என்னுடன் பேசுவதே சிலருக்கு
வேஸ்ட் ரைம் !
கையில் பணமில்லாத போது
உறவு என்று சொல்ல ஒரு நரில்லை
கையில் பணம் நிறைந்த போது
எத்தனை எத்தனை உறவுகள்
உரிமையுடன் ஓடி வருகின்றன !
பந்தம் பாசங்களிற்கிடையில்
பகையை உறவு கொள்ள வைத்து
வேடிக்கை பார்க்கிறது
உயில்லாத மனிதன் !

## சிந்தனைக்கு சில துளிகள்

* அச்சத்தை வெல்லுவதே மனிதனின் முதற்கடமை ஏனெனில் அச்சம் இருக்கும்வரை எதுவும் சரியாய்ச் செய்ய முடியாது
* அறிவைவிட அனுபவமே மிகுந்த நன்மையைந் தரும்
* அடக்கமுடியாத கோபம் ஆஸ்த்தியை அழிக்கும்
* அடக்கி ஆளப்பட்ட கோபம் புத்திசாலித்தன்மையாகும்
* அடக்கம், ஒழுக்கம், எளிமை, தூய்மை இருப்பவனிடம் தெய்வீக ஒளி வீசுகின்றது
* அடுத்தவர்களையே எல்லோரும் சீர்திருத்தப்பார்க்கிறார்கள் தங்களை மறந்து
* ஆசைக்கு உரம் அடுத்தவரைக்கண்டு வியற்றல் வியப்பின் வீரியம் பொறாமை இப் பொறாமை செருக்கோடு கலந்தால் ஏற்படும் இரசாயன மாற்றம் அகங்காரம் அகங்காரத்தின் வானளவு செயல் அட்டூழியம

க . அனுஷா
( 2001 கலை )

# சூழல் மாசடைதலை தவிர்த்தல்

20 ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்திலிருந்து 21 ஆம் நூற்றாண்டை மிக ஆவலுடன் வரவேற்க காத்திருக்கும் உலக மக்கள் அனைவரும் எதிர் நோக்கும் மிக முக்கிய பிரச்சனைகளில் ஒன்று சூழல்மாசடைதலாகும். நவீன விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாக ஏற்பட்ட தொழில் நுட்ப வளர்ச்சி கைத்தொழிலாக்கம் என்பவற்றிலேயே சூழல் பெரிதும் மாசடைகிறது, சூழல் மாசடைவதால் இயற்கைச் சமனிலை பாதிக்கப்படுவதுடன் அங்கிகளின் ஆரோக்கியமும் பாதிக்கப்படும் , பல புதிய நோய்களும் அங்கவீனமும் ஏற்பட வாய்ப்புண்டு. சூழல் மாசடைதல் என்பதை வளி மாசுறுதல் , நிலம் மாசுறுதல் , நீர் மாசுறுதல் எனும் மூன்று முக்கிய நிலமைகளில் உள்ளடக்கலாம். வளி , நிலம் , நீர் மாசடைவதற்கான காரணங்களையும் இவற்றை தடுப்பதற்கான சில நடைமுறைகளையும் எடுத்து நோக்குவோம்.

முதலில் வளி மாசடைதலை எடுப்போம். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மலிந்து காணப்படும் தொழிற்சாலைகள் வெளிவிடும் கழிவுப் பதார்த்தங்களிலுள்ள இரசாயன பொருட்கள் வளிமண்டலத்துடன் கலப்பதனால் இயற்கை வட்டங்கள் குழப்பப்படுகின்றன. வட ஐரோப்பிய நாடுகள் , ஜப்பான் , மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் பெருமளவில் காணப்படும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் அந் நாடுகளில் மட்டுமன்றி உலக நாடுகள் அனைத்திலும் பாதிப்பை உண்டாக்குகின்றன. போபால் கிருமி நாசினி தொழிற்சாலை நச்சு வாயு கசிவினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியானது பலரும் அறிந்ததே. ஜெட் , ரொக்கட் விமானங்கள் வானில் மிக உயரத்தில் பறப்பதால் முகிற் கூட்டங்களின் இயற்கை நிலை பாதிப்படைந்து கால நிலைகள் மாற்றமடைகின்றன. குப்பைகள் எரித்தல் , வாகனங்களின் புகை , ஆயுதப்பாவனை என்பவற்றால் தூய காற்று கிடைக்காமல் சுவாச நோய்கள் பல ஏற்படுகின்றன. வளியில் காபனீரொட்சைட் அளவு அதிகரிப்பதால் அமில மழை ஏற்பட்டு மீனினங்கள் இறக்க நேரிடுகின்றது. வளி மாசடைதலின் உச்ச விளைவாக அணுகுண்டு பாவனை CFC பாவனை என்பவற்றின் விளைவாக ஓசோன் படை நலிவடைகிறது இதனால் புற ஊதாக்கதிர்கள், அகச்சிவப்பு கதிர்கள் என்பன புவியை அடைவதால் பலவித புற்று நோய்களும் ஏற்படுவதுடன் புவியின் வெப்ப நிலையும் உயர்கிறது, புவி வெப்ப நிலை உயர்வதால் பனிப்பாறைகள் உருக கடல் மட்டம் உயர பல தீவுகள் கடலில் அமிழ நேரிடும்

தொழிற்சாலைக் கழிவுகளை வளி மண்டலத்துள் சேர விடாமல் தவிர்த்து நிலத்தின் கீழ் மிக ஆழமாக செலுத்துவதன் மூலமும் அணு ஆயுத பாவனையை தடை செய்வதன் மூலமும் புகை வெளியேற்றாத மாற்று வாகனங்கள் பயன்படுத்தப்படுவதன் மூலமும் குப்பைகள் எரிக்காது நிலத்தின் கீழ் புதைத்து பசளையாக்குவதன் மூலமும் CFC பாவனையை இயலுமானவரை முற்றாக தடை செய்வதன் மூலமும் மரங்களை நாட்டுவதன் மூலமும் வளி மாசடைவதை ஓரளவு குறைக்கலாம்.

அடுத்து நிலம் மாசுபடுவதை எடுத்து நோக்குவோம் பயிர்ச்செய்கையின் போது கிருமி நாசினி செயற்கை பசளை என்பன மண்ணிற்குள் சேர்க்கப்படுவதால் மண்ணில் இயற்கையாக காணப்படும் தன்மை இழக்கப்பட மண்புழு போன்ற தரை வாழ் அங்கிகள் இறக்க நேரிடுகின்றது. சனத்தொகை பெருக்கம் காரணமாக குடியிருப்புகள் அமைக்கவும் தொழிற்சாலைகள் நிறுவவும் விறகுத் தேவைக்கும் துளபாடம் செய்யவும் பெருமளவில் காடுகள் , புல் வெளிகள் அழிக்கப்படுகின்றன. இதனால் மரம் வாழ் அங்கிகள் இறக்க நேரிடுகின்றது. மழை நீர் நேரடியாக தரையை அடைவதால் மண்ணரிப்பு ஏற்பட்டு மண்வளம் குன்றுகின்றது. இயற்கை சமனிலை குழப்பப்படுகின்றது. மழை வீழ்ச்சி குன்றி வரட்சி ஏற்பட்டு புவியின் வெப்பநிலை அதிகரிக்கின்றது. கனிப்பொருட்களை பெறுவதற்காக நிலத்தை அகழ்வதால் மண்ணரிப்பு ஏற்பட வாய்ப்புண்டாகிறது.

பயிர்ச்செய்கையின் போது விளைச்சலை அதிகரிப்பதற்கு இயலுமானவரை இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்துதலும் அதிக விளைச்சல் தரும் விதையினங்களைப் பயன்படுத்துதலும் சிறந்ததாகும். காடழிப்பைத் தடுப்பதற்கான சட்டங்களை நடைமுறைப் படுத்துவதன் மூலமும் செயற்கைக் காடுகள் தேசிய வனப் பூங்காக்கள் என்பனவற்றை அமைப்பதற்கு ஊக்கமளிப்பதன் மூலமும் காடுகளின் அளவை மாறாமல் பேணலாம். கனிப்பொருட்களை அளவோடு பயன்படுத்துவதன் மூலமும் தரை மாசுபடுதலை தவிர்க்கலாம்.

அடுத்து நீர் மாசுபடுதலை எடுத்துப் பார்ப்போம். தொழிற்சாலை கழிவுகள் கடலுடன் சேர்க்கப்படுவதால் அதில் காணப்படும் நச்சுப்பொருட்களால் நீர் வாழ் அங்கிகள் இறக்க நேரிடுகின்றன. எண்ணெய்க்கப்பல்கள் விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்குவதாலும் கடலில் எண்ணெய்க்கிணறுகள் தோண்டப்பட்டு எண்ணெய் எடுக்கப்படுவதாலும் நீரின் மேற்பரப்பில் எண்ணெய் படையாகக் காணப்படும். இதனால் ஒளியும் வளியும் எண்ணெய்ப்படையை ஊடுருவி நீருக்குள் செல்ல முடியாதிருக்கின்றது. இதன் காரணமாக ஒளித்தொகுப்பை மேற்கொள்ள முடியாமல் தாவரங்களும் சுவாசிக்க முடியாமல் சில டொல்பின் போன்ற மீனினங்களும் அழிய நேரிடும். இதைவிட கடலின் கீழ் அணுவாயுத பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாலும் நீரானது நச்சுத்தன்மை அடைந்து நீர்வாழ் அங்கிகள் இறக்க நேரிடுகின்றன. மேலும் உள்நாட்டு நீர்நிலைகளில் வாகனங்களைக் கழுவுதல் விலங்குகளைக் குளிப்பாட்டுதல் என்பவற்றால் அவை மாசடைகின்றன.

தொழிற்சாலைக் கழிவுகளை நீர்நிலைகளுள் செல்ல விடாது உரிய முறையில் தடுப்பதன் மூலமும் கடலில் கப்பல் விபத்துக்களைத் தவிர்ப்பதன் மூலமும் கனிய எண்ணெய்க்கு பதிலாக மாற்று சக்தி முதல்களை பயன்படுத்துவதன் மூலமும் கடலின் கீழ் எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவதை தவிர்ப்பதன் மூலமும் கடலின் கீழான அணுவாயுத சோதனையை தவிர்ப்பதன் மூலமும் கடல் நீர் மாசடைவதை தவிர்த்து நீர்வாழ் அங்கிகளை பாதுகாக்கலாம். நீர்நிலைகளில் வாகனங்கள், விலங்குகளைக் குளிப்பாட்டுவதைத் தவிர்த்தும் நீரை சிக்கனமாகப் பாவித்தும் நீர்வளத்தைப் பேண முடியும்.

எமக்காகவும் எதிர்கால சந்ததிக்காகவும் எமது சூழலை நாம் பாதுகாக்க வேண்டும். மேற்கூறிய வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் வேறு புதிய வழிமுறைகளைக் கண்டுபிடித்தும் வளி, நிலம், நீர் என்பன மாசடைதலை ஓரளவேனும் குறைக்கலாம். இவற்றைக் கருத்தில் கொண்டே 1992 யூன் மாதத்தில் சூழல் பாதுகாப்பு தொடர்பான முதலாவது உச்சி மாநாடு பிரேசிலின் றியோடி ஜெனிரோவில் நடைபெற்றது. இம்மாநாட்டில் 173 நாடுகள் பங்குபற்றின. உலக மக்களனைவரும் ஒன்று சேர்ந்து முழு முயற்சியுடன் செயற்பட்டு சூழலை பாதுகாப்பதன் மூலம் பல பிரச்சினைகளை தவிர்க்கலாம். எனவே நாம் அனைவரும் ஒன்றுபட்டு எமது சூழலை நாமே பாதுகாப்போம்.

செல்வி பா. மனோஜா.
(2000 உயிரியல்)

---

பிறருக்காக நீ கையை உயர்த்தும் போது —உனக்காக
இறைவன் கையை உயர்த்துகின்றார்.

சத்தியத்தை அசட்டை செய்வாயானால் நீ இயற்ற வேண்டிய
அன்றாடக் கடமைகள் கூட பெரும் சுமையாக உன்னை அழுத்தும்
— — சாயி பாபா

# விஞ்ஞானக் கல்வியும் இலக்கியக் கல்வியும்

## (ஓர் உரையாடல்)

(மாலாவும் சோபாவும் சகோதரிகள் இவர்களில் மாலா விஞ்ஞானத்துறை மாணவி சோபா கலைத்துறை மாணவி இவர்கள் இருவரும் தத்தம் துறை பற்றி தர்க்கம் செய்வார்கள். அன்றும் அப்படித்தான் )

மாலா — மனிதமனம் ஒரு சிந்தனைத் தோட்டம் அதில் வளர்ந்த பயிராகியது அறிவுச்செடி இச் செடியில் பூத்துக் குலுங்குபவைகளே இன்று அவன் காணும் விஞ்ஞானப் பதுமைகள் காடுகளில் கண்டதை உண்டு காண்பதற்கெல்லாம் கடவுளைக் காரணம் காட்டி வாழ்ந்த மனிதனுக்கு இதோ இருக்கிறது வழி, அவ்வழி சென்று பயனடையுங்கள் என்று உயரிய வழி காட்டுவது விஞ்ஞானமாகும்.

சோபா — அந்த விஞ்ஞானம் காட்டிய வழி திறந்து விட்டது. ஆயினும் மனிதனுக்கு நன்மையுடன் தீமையும் மண்டிக் கிடக்கிறது. நன்மைகளை அவன் நன்கு அனுபவிக்கவும் தீமைகளிலிருந்து அவன் விலகவும் வழிகாட்டியாக நின்று மனிதனுக்கு உதவுவது இலக்கியமாகும்.

மாலா — விஞ்ஞானம் சாதித்தவைகளை விரித்துரைக்கத் தேவையில்லை. மட்குடிலில் வாழ்ந்த மனிதன் இன்று விண்ணை முட்டும் மாளிகையை அமைத்து விட்டான். பூமியின் நிலையை சரிவர உணராதிருந்தவன் இன்று சந்திரனையே சாடப் பார்க்கிறான். இவற்றுக்கெல்லாம் உதவுவதே விஞ்ஞானக்கல்வி. தங்கை! இல்லாத பொல்லாத கற்பனைகளை உலாவ விடுவது இலக்கியம் இதனை நீ முதன்மைப் படுத்துவது அபத்தம்! அபத்தம்!.

சோபா — அக்கா இவற்றினால் மட்டும் மனிதனின் வாழ்க்கை மேம்பட்டு விட்டதா? மனிதனிடம் உள்ளவைகளில் உயர்ந்தது அவன் உள்ளமே. இவ்வுள்ளமானது உயர்வடையாத வேறு எவற்றில் உயர்வடைந்தாலும் அவன் வாழ்க்கை உயர்வடையமாட்டாது. இதே உள்ளத்தைச் செப்பனிடும் திறன் விஞ்ஞானத்திற்கு உண்டா? உண்மையைச் சொல்லப்போனால் செம்மையாயிருந்த உள்ளத்தில் போட்டி பொறாமை போன்ற இழிகுணங்களை வளர்த்த பெருமை தான் விஞ்ஞானத்திற்கு உண்டு. இப்போட்டி பொறாமைக் குணங்களை நீக்க வழிகாட்டி அன்புடன் எல்லோரையும் நேசியுங்கள் என்பது இலக்கியம். " அன்பின் வழியது உயர்நிலை அ∴தில்லார் என்பு தோல் போர்த்த உடம்பு ". என்கிறது திருக்குறள் புலாலை உணவாக விற்கும் பொருட்டு ஆட்டிடையன் ஓட்டிச் சென்ற ஆடுகளை தடுத்துக் காத்து கருணை வெள்ளம் பொங்க வைத்த புத்தர் பெருமான் வாழ்க்கையைக் கூறுவதும் இலக்கியமே இப்படியாக இலக்கியங்கள் வாயிலாக எமது உள்ளத்தைச் செப்பனிட முடிகிறது அத்துடன் விஞ்ஞானத்தை ஆக்க வழியில் பயன்படுத்த மனிதனைத் தூண்டும் சக்தியும் இலக்கியங்கள் கூறும் இந்த அன்புக்கே உண்டு. இவ்வாறே வீரம், தியாகம், ஒழுக்கம், வெற்றி, தோல்வி, நன்மை, தீமை என்ற உன்னதப் பண்புகளை மனிதனுக்குப் புகட்டி அவனை நல்வழிப்படுத்துவது இலக்கியங்களே.

மாலா — இலக்கியம் வெறும் பொழுதுபோக்குச் சாதனம் சோம்பலை வளர்க்கவும் இறந்த காலத்திற்கு துதிபாடவும் எதிர்காலத்தில் நம்பிக்கை இன்மையை வளர்க்கவும் இலக்கியங்கள் பயனாகின்றன . விஞ்ஞானமோ பொழுதைப் பொன்னாக்கவும் எதிர்காலம் சுபீட்சமாக அமைய திட்டங்கள் தீட்டி நடைமுறைப்படுத்தவும் உதவுகின்றது எனவே விஞ்ஞானக் கல்வியே சிறந்தது .

சோபா — அக்கா இலக்கியம் பொழுதுபோக்குச் சாதனம் என்பது தவறானது இன்று நிதர்சன வாழ்க்கையினை உள்ளது உள்ளதுபோல் காட்டிச் சமுதாயத்தின் பலத்தையும் பலவீனங்களையும் புலப்படுத்தி மனித சிந்தனையை வளர்க்கும் இலக்கியங்களை ஆக்கிய கர்த்தாக்கள் நாடு கடந்த உலகப் புகழும் பெற்று தலைசிறந்தவர்களாய் உயர்ந்துள்ளனர் . இவ்விலக்கியங்களோ விஞ்ஞானக் கல்வியோ வளர்ந்ததுதான் இதனால் பல நவீன சாதனங்கள் எம்மத்தியில் விளங்கியது . இவை மனிதரிடையே உயர்வு தாழ்வு என்று உலகின் நிலையை மாற்றிவிட்டது ஒரு கண்டம் அணுகுண்டைப் பரீட்சிக்க முற்பட்டது . மனிதனை உயர்த்திய விஞ்ஞானம் மனிதனை அழிக்கும் கோர நிலைக்கு உள்ளாக்கியது . இந்நிலையில் மனிதனுக்கு கை கொடுத்து அறிவுரை காட்டி உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மையைப் போக்குவது இலக்கியமாகும் . இதனைக் கற்று உணராமல் அதுபற்றிக் குறை கூறுவது அழகல்ல அக்கா .

மாலா — நீ சொல்வது உண்மைதான் தங்கை , ஒருவன் ஒன்றை ஆழமாக அறியாமல் அதனைக் குறை கூறுவது தவறுதான் ஆயினும் பயன்பாட்டு அடிப்படையில் நோக்கும் போது விஞ்ஞானக் கல்வியே மேல் என்று நான் கருதுகிறேன் .

சோபா — நாம் அனைவரும் வாழவே பிறந்தோம் . ஆனால் வாழவிடு என்ற கருத்து எம்முள் பலரிடையே இல்லை தானும் வாழ்ந்து பிறரையும் வாழவிடுவதற்கு உதவியாயிருந்து வாழ்வை வளம்படுத்தி அவனை நல்வழிப்படுத்துவது இலக்கியங்கள் இந்த வாழ்வை இலகுவாக்குவது விஞ்ஞானம் . நான் கூறுவது சரியா அக்கா,

மாலா — ஆம் மனிதனுக்கு விஞ்ஞானக் கல்வியுடன் இலக்கியத்துறையில் ஈடுபாடும் அவசியம் வேண்டும் .

வே . சுதர்ஜினி
( ௨001 கலை

000000000000000000000000000000000000000000000000000000000000000000000000

இயற்கை அழகு என்பது , ஆண்டவனின் புன்சிரிப்பு
இசை என்பது அவனுடைய குரல் .

— — — — ஜான்சன்

# பெண்ணே விழித்தெழு

சங்கம் வளர்த்ததமிழ் தாய்க்குலம் காத்ததமிழ்
சிங்கம் நிகர்த்ததமிழ் வீரமதைச் சாற்றுதமிழ்
வங்கக் கடலெங்கும் வல்லரசான தமிழ்
தங்கத் தமிழென்னும் தாய்மைக்கு முதன்மைதரும்

அன்றுதொட்டின்றுவரை அன்னையினம் போற்றிடினும்
இன்றென்ன செய்கிறது பெண்ணுரிமை பின்னடைவே
நன்றே பெண்ணினத்தின் முன்னுரிமை காத்திடவே
இன்றே புறப்படுவாய் பெண்ணே விழித்தெழு

அடுப்படியிலடங்கியன்று அல்லல் பலவுற்று
வாசற்படிவெளிவாராத் தூங்கியது போதுமே
துடுப்பாடிக்கடலிலே துணிவுடனே செயலாற்றும்
துடிப்பானகாலமிது பெண்ணே விழித்தெழு

கண்ணேஎன்பார் கனிமுத்தே என்பார்
காதல்வலைவீசி முதல்பாசமழை பொழிந்திடுவார் – பின்
கல்யாணமென்றதுமே காசுபணம் என்று சொல்வார்
கயமைநிலை விரட்டிடவே பெண்ணே விழித்தெழு

சீதனமெனும் கொடுமை சீரியவர் வாழ்வில்
சீரழிவாயிருக்கின்றதே சீ....... யென்றிப்பேயை
சீரழித்துவிட்டிடவே சீறியெழு புயலெனவே
சினங்கொண்டு புறப்படுவாய் பெண்ணே விழித்தெழு

உழைப்போன் ஆண்மகனே உண்டிசமைப்பாள் பெண்மகளே
இழைக்கும் கொடுமையெல்லாம் இமையமெனத் தாங்கிடுவாள்
சளைத்த காலமெல்லாம் மலையேறிப் போச்சுதம்மா – இன்று
உழைக்கும் மங்கை நீ பெண்ணே விழித்தெழு

சமூகம் சமூகம் இச்சமூகம் உருவாகப்
பெண்ணே கால்கோள் வரை வழிகாட்டி
சமூகத்தில் தவறெனின் பெண்மேல்த்தான் விழும் – இவ்
அடிமை விலங்குடைக்கப் பெண்ணே விழித்தெழு

பெண்கோழிகூவி விடியாது என்றாரின்று
பெருநாட்டின் தலைவிகள் யாரின்று அரசியலில்
பேதையே உறங்காது பெண்ணடிமை நீக்கிடவே
பேரலையாய்த் திரண்டின்று பெண்ணே விழித்தெழு

ம.மதிவதனன்
( 2000 கலை )

# தொடர்பாடற் துறையில்

# இன்ரநெற் (INTERNET)

நாம் வாழ்ந்து கொண்டிருப்பது வர்த்தக உலகில். அத்துடன் நாம் கணனி யுகத்தை நோக்கி மிகவும் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். தொடர்பாடல் துறை வளர்ச்சியுற்ற இக்காலகட்டத்தில் தற்காலத்தில் உலகளாவியரீதியில் தொடர்பாடல் துறையில் முன்னணியில் இருப்பது இன்ரநெற் ( இணையம் ) ஆகும்.

இத்தகைய இணையத்தை நாம் "தகவல் உலகம்" என்று சிறப்பாக அழைக்கலாம். ஆம் உண்மைதான் தகவல் பெறுவதற்கு புத்தகங்களும் கலைக்களஞ்சியங்களும் புரட்டும் நிலை மாறி இன்ரநெற் தகவல் தளங்களில் சமையலறைச் சமாச்சாரங்கள் முதல் உலகின் கலை, கலாச்சாரம், பண்பாடு, அரசியல், சமயம், அறிவியல் போன்ற பல்வேறு தகவல்களை பெற முடிகிறது. இத்தகைய இன்ரநெற் மூலம் தகவல் பெற மூன்று கருவிகள் மிக அவசியமானவை. அவையாவன.

1) கணனி
2) தொலைபேசி
3) மொடம்

முத்தமிழ் என்ற அடைமொழியில் இயல். இசை. நாடகம் என்பவற்றை கொண்டிருந்த தமிழ் இன்று "மின்னியல் தமிழ்" என்ற நவீன அடைமொழி கொண்டு புதுத்துறையின் வளர்ச்சியிலையும் கொண்டு மிளிர்கின்றது. தொடர்பாடல் துறையின் தேவையினை அறிந்ததற்கு ஆதாரமாக சிங்கப்பூரில் இடம்பெற்ற தமிழ்நெற் 97, சென்னையில் நடைபெற்ற தமிழ் இணையம் 99 ஆகிய மகாநாடுகள் சான்றாகும். அடுத்து 2000 ஆண்டுக்கான மகாநாடு இலங்கையில் தமிழ் இணையம் 2000 என்ற பெயரில் இடம்பெறவுள்ளது. தமிழர் என்ற ரீதியில் இது நாம் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

இன்று உலகில் 40 நாடுகளைச் சேர்ந்த 80 மில்லியன் தமிழரில் கணனியுடன் தொடர்பு கொண்ட அனைவரதும் ஆர்வங்களும் கருத்துக்களும் போன்ற பல தகவல்களும் மட்டுமன்றி பிற மொழிகளுடனான துறைசார் மொழிபெயர்ப்புகளும் தமிழரின் தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் தமிழ் இணையத்தால் வழங்க முடியும். இதை நிறைவேற்ற வேண்டும் எனில் சிற்சில குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். அவற்றில் சில வருமாறு.

1) சர்வதேச ரீதியான பயன்பாட்டுக்கு நியமமான முறையில் தமிழ் விசைப்பலகையினை ( Key board ) உருவாக்குதல்.
2) தமிழ் மொழியை கணனியில் பயன்படுத்த தமிழ் எழுத்துக்களுக்கான வகைகளை பொது நியம முறைக்கு ஏற்ப விருத்தி செய்தல்.

ஆங்கில விசைப்பலகை எவ்வாறு சர்வதேச ரீதியாக பிரபல்யம் வாய்ந்துள்ளதோ அதேபோல் தமிழ் மொழியிலான விசைப்பலகையினை பொது நியம முறைக்கு கொண்டு வரப்பட வேண்டும் இதுவே தமிழ் மொழி மட்டும் தெரிந்த கணனித்துறை ஆர்வலர் கருத்தாகும். இப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டால் பல துறை சார்ந்த தகவல் பரிமாற்ற சாதனங்களிலும் ( Multi media ) இணையத்திலும் தமிழின் பாவனையை அதிகரிக்கச் செய்யலாம்

தற்கால உலகிலே இன்ரநெற் என்ற சொல்லை அறியாதவர்கள் எவரும் இல்லை எனலாம். ஏனெனில் இதன் பயன்கள் ஏராளம். எனினும் இதில் சில தீமைகளும் ஏற்பட்டுவிடுகிறது. ஆம் இன்ரநெற் ஓர் உலகம் என்று கூறுகின்றோம் உலகில் நல்லதும் நடக்கும் கெட்டதும் நடக்கும். அதேபோல் இன்ரநெற்றிலும் நல்லது கெட்டது நிகழ்கிறது.

இன்ரநெற் என்றவுடனேயே இன்றைய பெற்றோருக்கு சற்று கசப்பு ஏற்படுகிறது. இதற்கு காரணம் பல்வேறு தொடர்பு ஊடகங்கள் இன்ரநெற் பற்றிய நியாயமான பயத்தைக் கடந்த தலைமுறையில் ஏற்படுத்தி உள்ளன. அதேபோல இன்றைய இளஞ்சமுதாயமும் இன்ரநெற் என்ற பரந்த கடலினில் சுத்தமான இடத்தில் நீச்சலடிப்பதை விடுத்து கழிவுகள் பெருமளவு காணப்படும் இடத்தில் நீச்சலடிக்க விரும்புவதாகும்.

மேற்குலக நாடுகளில் இன்ரநெற் பாவனை மிகவும் அதிகரித்து விட்டது. இன்றநெற்றைப் பயன்படுத்தாத சிறுவர்கள் இல்லை என்றே கூறலாம். எனினும் இன்றநெற் தம் குழந்தைச் செல்வங்களை சீரழிக்கிறதென பெற்றோர் எண்ணுவது நியாயமானதுதான். இணையத்தின் விரும்பத்தகாத "வெப்" பக்கங்கள் சிறுவர்களை வலைவீசித் தேடுகின்றன.

தொலைக்காட்சி மூலம் பல தகவல் பெற்ற சிறுவர்கள் இன்று இணையம் மூலம் கூடுதலான விடயங்களை பெறுகின்றனர். அதேபோல் எம்வர்த்தக உலகுக்கான

1) பங்குச்சந்தை நிலவரம் 2) நாணயமாற்று வீதம்

3) வெளிநாட்டு கொள்வனவாளர் விற்பனையாளர் போன்றோர் விபரம்

4) ஏற்றுமதிப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு போன்றவற்றை அறிய முடிகிறது.

இத்தகைய சிறப்பம்சங்கள் கொண்டமைந்த இன்ரநெற்றினால் சில தீமைகளும் உண்டு என்பது யாராலும் மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மை என்பது உலகறிந்ததே இன்ரநெற்றின் மூலம் சில சமூக நாசகார கும்பல்களின் செயல்கள் சமூகத்திற்கு சீரழிவு ஏற்படுத்துகின்றன. இதனால் தான் என்னவோ சில பெற்றார் பிள்ளைகளின் இன்ரநெற் உபயோகத்தை எதிர்க்கின்றனர்.

இன்ரநெற்றில் பாலியல், விபசாரம், இனவாதம், வன்செயல், சட்டவிரோத செயல்கள் என்பவற்றைத் தூண்டும் கதைகள் கட்டுரைகள் ஆபாசப் பட இணைப்புகள் என்பனவும் உள்ளன. இந்த இன்ரநெற் வெப் பக்கம் பிள்ளைகளை தவறான வழிக்கு இட்டு செல்லக்கூடும். இதேபோல் இன்ரநெற்றானது சட்லைன் (chat - line) மூலமாயும் ஈமெயில் மூலமாகவும் முகந்தெரியாத நண்பர்களை பெற்றுத்தருகின்றது. நாளடைவில் இந் நட்பு வளர்ந்து நன்மையையும் ஏற்படுத்தும் தீமையையும் ஏற்படுத்தும் எனவே குழந்தைகளின் இன்ரநெற் பயன்பாட்டில் கவனம் செலுத்த வேண்டியவர்கள் பெற்றோர்கள். தொலைக்காட்சியில் வயது வந்தோருக்கான நிகழ்ச்சிகள் இருப்பது போன்று இன்ரநெற்றிலும் வெப் பக்கங்கள் உள்ளன. எனினும் விரும்பாத வெப் பக்கங்களை வடிகட்டி நல்ல விடயங்களைத் தருவதற்கு filter programme ஒன்றும் உள்ளது. இன்றைய சினிமாவில் கூட இன்ரநெற் மூலமான காதல் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதனை மிக அண்மையில் வெளியான திரைப்படமான காதலர் தினம் மூலம் அறியலாம்.

" கடலுக்கு Fishing net...... காதலுக்கு Inter net " ஆம் ! உண்மைதான்

நீரில் கலந்த பாலினை அன்னம் பிரித்து குடிப்பது போல் நாமும் இன்ரநெற் என்னும் பெருங்கடலில் கழிவுகள் உள்ள இடத்தில் நீச்சலடிக்காது தூய நீருள்ள பகுதியில் அறிவுஜீவிகளாக நீச்சலடிப்போம் வாரீர் !!

R. பத்மலோஜினி
(2000 வர்த்தகம்)

# இன்றைய வாணிப நடைமுறை விடயங்கள்

## பங்குச்சந்தை

* 1997ல் பங்குச்சந்தையின் அபிவிருத்தி தொடர்பாக இடம்பெற்ற முக்கிய மாற்றம் தன்னியக்க கணணித்திரை அடிப்படையிலான பங்கு வியாபாரம் அறிமுகம் செய்யப்பட்டமையாகும் .

* 1998ல் பங்குச்சந்தையில் அபிவிருத்தி தொடர்பில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய மாற்றம் – கொழும்பு பங்குச்சந்தை பங்குச்சந்தைகள் பன்னாட்டு உறுப்பினராக சேர்ந்து கொண்டது .

## இதன் நோக்கம்

உலக மூலதனச் சந்தையின் ஆதரவைப் பெற்று மேம்படுத்தல் .

* 1998ல் அதிகளவு விலை வீழ்ச்சியை பதிவு செய்த பிராந்திய பங்குச்சந்தை கராச்சி பங்குச்சந்தை ஆகும் .

* 1998ல் பங்குச்சந்தையில் விலை வீழ்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் .
  1) தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தொடர்ச்சியாக ஏற்பட்ட பொருளாதார மற்றும நிதியியல் பிரச்சினைகளால் பிறநாட்டு முதலீடுகள் இலங்கையை விட்டு வெளியேறியமை.
  2) இந்தியா பாகிஸ்தான் என்பவற்றில் இடம்பெற்ற அணு ஆயுத பரிசோதனைகளால் முதலீட்டாளர்கள் மனரீதியாகப் பாதிக்கப்பட்டு முதலீடுகள் வெளியேறியமை .
  3) ரஷ்யா ரூபிள் நாணய பிரச்சனையால் இலங்கை தேயிலை ஏற்றுமதி குறைந்தமை.
  4) பட்டியல்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்களின் விற்பனை அதிகரித்தமை .

* அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பங்கு விலை மதிப்புச்சுட்டி மிலங்கா விலைச்சுட்டி.
* பட்டியல்படுத்தப்பட்ட தொகுதிக்கடன் .

  கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தினூடாக பதிவு செய்து கைமாற்றப்படும் தொகுதிக்கடன் பட்டியல் பட்டியல்படுத்தப்பட்ட தொகுதிக்கடனாகும். இது மத்தியவைப்பு திட்டமுறையினூடாக பங்குத்தரகர் உதவியுடன் கைமாற்றப்படும் . பட்டியல்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்களை வெளியிட்டுள்ள கம்பனிகளிற்கு உதாரணம்
  1) வரையறுக்கப்பட்ட சிலிங்கோ பிணைகள் மற்றும் நிதியியல் கம்பனி
  2) வரையறுக்கப்பட்ட இலங்கை கிளாஸ் கம்பனி
  3) வரையறுக்கப்பட்ட வனிக்கிங் கூட்டுத்தாபனம்

## பொதுவானவை

* கடந்த ஆண்டு கடன் அட்டை பாவனை அதிகரித்தமைக்கான காரணங்கள்
  1) கடன் அட்டையை வழங்கும் நிறுவனங்கள் மேற்கொண்ட விளம்பர பகிரங்கப்படுத்தும் நடவடிக்கைகள் .
  2) கடன் அட்டையை வழங்கும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்புக்கள்.

* அண்மையில் கிராமிய அபிவிருத்தி கருதி நிறுவப்பட்ட வங்கி பிராந்திய அபிவிருத்தி வங்கி ஆகும்

* கடந்த 20 வருடங்களாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் துறையின் வளர்ச்சி கருதி இடம்பெற்று வந்த நடவடிக்கைகள்
  1) தனியார் துறையினர் காப்புறுதியில் ஈடுபட்டமை.
  2) பல்வேறு புதிய காப்புறுதி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
  3) நிறுவனங்களிடையே போட்டி நிலை உருவாக்கப்பட்டமை.
  4) வர்த்தக நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டமை.
  5) காப்புறுதி கட்டுப்பாட்டாளர்கள் நியமிக்கப்பட்டமை.

* திரட்டிய விரிந்த பணநிரம்பல் ($M_2b$)
  விரிந்த பணநிரம்பலுடன் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவில் வைப்புக்களையும் உள்ளடக்கியது $M_2b$ ஆகும்,

1998

| | |
|---|---|
| $M_1$ | 96268 |
| சேமிப்பு தவணை வைப்புகள் | 257325 |
| $M_2$ | 354263 |
| வெளிநாட்டு வங்கித்தொழில் | 23478 |
| பிரிவில் வைப்புக்கள் | 377741 |

* அரச உடமை நிறுவனங்களை தனியார் மயப்படுத்தக் கூடிய வழிமுறைகள்
  1) தனியாரிடம் முகாமையை குத்தகைக்கு வழங்கல்
  2) தொழில் முயற்சிகளில் முகாமைத்துவத்தை தனியாரிடம் கையளிக்கும் அதேவேளை உரிமையை அரசாங்கமே வைத்திருத்தல்.
  3) சிறியளவு பங்குகளில் உடமையை அரசாங்கம் வைத்திருக்கின்றவேளை முகாமை, அரச துறையின் கீழ்க் காணப்படுதல்
  4) பெருமளவு பங்குகளினை அரசாங்கம் வைத்திருக்கின்ற வேளையில் முகாமையை பங்குடமை அடிப்படையில் பாகிடல்.
  5) சொத்துக்கள் மற்றும் முகாமைத்துவத்தை பிரத்தியோகமாக தனியாருக்கு மாற்றுதல்

* தனியார் மயப்படுத்தப்பட்டு தோல்வியுற்றமை என்னும் பெயரில் அரசு பொறுப்பேற்ற நிறுவனங்கள்
  1) மத்துகம புடைவை ஆலை.
  2) கொழும்பு கொமேசியல் பேட்டிலைசர்.
  3) வரையறுக்கப்பட்ட லங்கா உலோக வன்கலம்.
  4) ஹிங்குரான சீனிக் கம்பனி.
  5) கந்தளாய் சீனிக் கம்பனி.
  6) பூகொட புடைவை ஆலை
  7) ககட்ட கிரைவைட்

* தனியார் மயப்படுத்தி தோல்வியுற்றமை என்னும் பெயரில் அரசு பொறுப்பேற்று மீள தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டவை.
  1) மத்துகம புடைவை ஆலை.
  2) கொழும்பு கொமேசியல் பேட்டிலைசர்
  3) வரையறுக்கப்பட்ட லங்கா உலோக வன்கலம்

* 1998 முகாமையை தனியாரிடம் குத்தகைக்கு வழங்கிய நிறுவனம் ஹிங்குறானை விதை நெல் பண்ணை.

* எயாலங்கா லிமிட்டெட்டில் முதலீடு செய்து முகாமையை பொறுப்பு ஏற்றுள்ள நிறுவனம் இம்பிரெற்ஸ் எயாலைன்ஸ்.

* 1998.11.09 மத்திய வங்கியில் நேர மாற்று மீள் கொள்வனவு சந்தையை மீண்டும் அறிமுகம்செய்தது

இதில் பங்குகொள்வோர்

1) எல்லா வர்த்தக வங்கிகளும்
2) வர்த்தக வங்கியல்லாத ஒப்புதல் பெற்ற முதன் நிலை வணிகர்கள்.

இதில் பயன்படும் பிணைப்பத்திரங்கள்

1) திறைசேரி உண்டியல்
2) திறைசேரி பிணைகள் / முறிகள்.

* சிறிய நடுத்தர ஏற்றுமதி அபிவிருத்தி (SMED) திட்டத்தில் அண்மையில் சேர்க்கப்பட்ட நிறுவனங்கள்
1) ஜேர்மன் பற்றிக் நியுமன் மன்றம்
2) இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனம்

* சிறிய நடுத்தர ஏற்றுமதி கண்காட்சிகள்.
இது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் அறிமுகப்படுத்தப்பட்டது.
அவையாவன
1) ஜனநிபையும்
இது மக்கள் வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்டது.
2) ஸ்ரீலங்கா இன்ராட் (1998)
இது கைத்தொழில் முதலீட்டு கண்காட்சி.
3) சார்க் வர்த்தக கண்காட்சி.
இதற்கு வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் உதவியது.

* இந்த வர்த்தக கண்காட்சியால் இலங்கைக்கு ஏற்பட்ட நன்மை.
2 மில்லியன் ரூபா ஏற்றுமதிக் கட்டளைகள் பெறப்பட்டன.

* கைத்தொழில் பூங்கா (Industrial Park) இன் விசேட பண்புகள்.

1) பல்வேறு கைத்தொழில்கள் நிறுவப்படும் வலயம்.
2) இங்கு உட்கட்டமைப்பு வசதிகள் சர்வதேச தரத்தில் இருக்கும்.
3) உட்கட்டமைப்பு வசதிகள் சர்வதேச நாடுகளினால் நிர்மாணிக்கப்படும்.
4) இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் காணப்படும்.
5) கைத்தொழில் அமைச்சினால் நேரடியாக நிர்வகிக்கப்படும்.

காசு நிறைவுச் சமூகம்.
காசுக்குப் பதிலாக அதிகரித்த அளவு பிளாஸ்ரிக் அட்டைகளை பயன்படுத்தும் சமூகம் ஆகும்.

* இலங்கையில் பயன்படுத்தப்படும் மிக நவீனத்துவமான முறைகள்.
1) தன்னியக்க ரெலர் அட்டை.
2) சிமாட் அட்டை.
3) கடன் அட்டை.

* சிமாட் அட்டை.

தொழில்நுட்ப அபிவிருத்திவருடம் இணைந்ததாக கொடுக்கல் வாங்கலிற்கு அல்லது பணப்பரிமாற்றங்களுக்கு பயன்படுத்தப்படும் ஓர் இலத்திரனியல் அட்டையே சிமாட் அட்டை ஆகும். இதனை இலத்திரனியல் பணம் எனவும் அழைப்பர்.

* இதனுடைய மாற்றுப் பயன்பாடுகள்.
1) கடன் அட்டையாகப் பயன்படுத்தல்.
2) தன்னியக்க ரெலர் அட்டையாகப் பயன்படுத்தல்.
3) பணத்தை வைப்பிலிடவும் வைப்பிலிட்ட பணத்தை மீளப் பெறவும் பயன்படுத்தல்.

* சிமாட் அட்டையை முதலில் இலங்கைக்கு அறிமுகப்படுத்திய அமைப்பு மக்கள் வங்கி ஆகும்

* மக்கள் வங்கியின் சிமாட் அட்டையை பெற்று பயன்படுத்தும் முறை.

மக்கள் வங்கி அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம் விண்ணப்பம் செய்து பின் பணத்தை செலுத்தும்போது அந்தப் பணத்தின் பெறுமதி ஒரு அட்டையில் பதிந்து வழங்கப்படும். அது அவருடைய இலத்திரனியல் பணப்பை ஆகிவிடும். பின்னர் இவ் சிமாட் அட்டை விளம்பரப்பலகையை வைத்திருக்கும் ஒவ்வொரு வணிகரிடமிருந்தும் பொருட்களை கொள்வனவு செய்ய இதனை பயன்படுத்தலாம்.

* இதன் பாவனை அதிகரித்து வருவதற்கான காரணங்கள்.
1) சொகுசுத்தன்மையும் இலகுத் தன்மையும்.
2) பாதுகாப்புத்தன்மை.
3) சிக்கனத்தன்மை.
4) தலா வருமான வளர்ச்சியும் மக்களது ஆர்வமும்.

* இலத்திரனியல் அட்டைகளின் பாவனையால் நாட்டிற்கு கிடைக்கும் நன்மைகள்.
1) கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்தல்.
2) மத்திய வங்கி வெளியிடும் பணத்தின் அளவைக் குறைக்கலாம். இதனால் அச்சிடும் செலவைக் குறைக்கலாம்.
3) பணக் கையாளல் வளர்ச்சியும் அபாயக்குறைவும் ஏற்படல்.
4) வாழ்க்கைத்தர விருத்திக்கு உதவுதல்.

* இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்ற உத்தியோக பூர்வ பெயரைக்கொண்ட இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 1998 டிசம்பர் 28 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பெயி ஆகியோரினால் கைச்சாத்திடப்பட்டது.

* இருபுடை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

இது குறிப்பிட்டதொரு தொகுதிப் பொருட்களுக்காக எல்லைத்தீர்வையைக் குறைப்பது. தீர்வையில்லா மற்றும் ஓரளவு தீர்வை ஆகிய வழி முறைகள் மீது இரு நாடுகளினாலும் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கையாகும்

* இதன் நோக்கம்

முன்னுரிமை வர்த்தகப் பங்காளருடனான வர்த்தகத்தின் மீதான தடைகளை அகற்றுவதன் மூலமாக நீண்டகால பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மேம்படுத்துவதேயாகும்.

* வர்த்தகமுன்னுரிமை உடன்படிக்கையின் முக்கிய நோக்கம்.

நாடுகளின் சொந்த உற்பத்திகளை மேம்படுத்துவதாக இருப்பதாக உடன்படிக்கையில் மூலப்பிரமாண விதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன்படி உற்பத்தி ஒன்று சலுகைகளை பெறுவதற்கு அது முழுமையாக அந்நாட்டிலேயே பெற்றிருக்கப்படவேண்டும். அல்லது மூன்றாவது நாடு ஒன்றிலிருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்திருக்குமாயின் அது இந்நாட்டிற்குள்ளேயே குறிப்பிட்டளவு உருமாற்றத்தை பெற்றிருக்கவேண்டும்

* இவ் உடன்படிக்கையின் அனுகூலங்கள்

1) புதிய கைத்தொழில்மய நாடுகளின் அனுபவங்களைக் கொண்டு உயர்ந்த வளர்ச்சி அடைதல் சுதந்திர வர்த்தகம் மூலம் வினைத்திறன், வெளிநாட்டு முதலீடு, தொழில் நுட்ப பாய்ச்சல், அறிவு பூர்வத்தன்மை என்பவற்றை மேம்படுத்தி நீண்ட காலவளர்ச்சியை ஏற்படுத்துகிறது
2) தீர்வையை குறைப்பதனால் குறைந்த விலைகளில் பொருட்களை பெற முடிவதனால் நுகர்வோர் நலன் உயரும்.
3) அதிகளவு வெளநாட்டு முதலீடுகளை பெற உதவுதல்.
4) அபிவிருத்தியடைந்த நாடுகளின் வளர்ச்சிப்போக்கு.

க. சிவதரி
( 2001 வர்த்தகம் )

## பொது அறிவு வினாக்களுக்குரிய விடைகள்

1) ஜெலி மீன்
2) Y 2 K பிரச்சனை
3) காசினி விண்கலம்
4) வைநதி ஒப்பந்தம்
5) விக்கிரம வருடம்
6) கறையான்
7) பிரான்ஸ் மொழி
8) ஷேகெல் நாணயம்
9) சைப்பிரஸ்
10) அவுஸ்திரேலியா , நியுசிலாந்து , பிஜி

## பொது அறிவுப் புதிருக்குரிய விடைகள்

1) சுவா
2) யப்பான் நாட்டினுடையது , நான்கு வரிகளுடையது
3) மக்சீம் கோர்க்கி
4) பிலிப்பைன்ஸ் நாட்டின் மாக்சே விருது
5) லிரா நாணயம்
6) டிசம்பர் 01 ஆம் திகதி
7) கானா நாடு
8) இந்தியாவின் ஜெய்ப்பூர்
9) 1000 பேர்
10) 1975 ஆம் ஆண்டு

# ஏழை மனம்

அதிகாலை ஐந்து மணிக்கு வினோத் ரயில் நிலையத்திற்கு வந்தான். அவன் வந்து சிறிது நேரத்தில் பொள்ளாச்சி போகும் ரயில் வந்தது. அவன் கொண்டு சென்ற பொருட்கள் எல்லாவற்றையும் சோதனை செய்து பயணம் செய்யும் சீட்டையும் காட்டி ரயிலில் ஏறி தனது இருக்கையில் இருந்தான். சிறிது நேரத்தில் ரயில் புறப்பட்டது. வினோத் யன்னல் வழியே வெளியே நோக்கினான். பச்சைப்பசேல் என்ற மரங்கள் சோலைகளாகக் காணப்பட்டன. வயல் வெளிகளில் மக்கள் நின்று வேலை செய்வதைப்பார்த்ததும் வினோத்திற்கு தங்களின் வயலில் வேலை செய்த நினைப்புகள் வந்தன.

வினோத் சிறுபிள்ளையாக இருக்கும் போதே தந்தை இறந்து விட்டார். விநோத்திற்கு வேறு சகோதரர்கள் இல்லை வினோத் தான் ஒரே ஒரு செல்லப்பிள்ளை சிறு வயதில் வினோத்திற்கு வேறு சகோதரர்கள் இல்லை வினோத் தன் தாயாருடன் வயலுக்கு போய் வேலை செய்து வருவான்.சிறிது காலத்திற்கு பின் தாய் “தம்பி நீயும் என்னைப்போல் கஷ்டப்படாமல் படித்து நல்ல ஒரு வேலை செய்ய வேண்டும்“ என்று அவள் தன் விருப்பத்தை கூறினாள். வினோத் தாய் மேல் அளவு கடந்த அன்பு இருந்ததால் தாய் சொன்னது போல் நான் படிக்கவேண்டும் என்ற ஆசை அவனுக்கு வந்தது . அவன் படிப்பதென்றால் ஊரில் படிக்கமுடியாது. பட்டணம் சென்று படிக்கவேண்டும். அங்கு சென்று படிப்பதற்கு வசதி இல்லை மாமா வசதியாக இருக்கிறார் தானே அவரைக் கேட்டுப் பார்ப்பம் என்று தாய்க்கு கூறினான்.

சொர்ணலிங்கம் என்று கேட்டால் அந்தக் கிராமத்தில் தெரியாதவர்களே இல்லை ஏன்னா அவருக்கு அந்தக்கிராமத்தல் உள்ள வயல் காணியில் முக்கால் பகுதியும் அவருடையது. இது மட்டுமல்லாமல் பெயர் சொல்லக் கூடிய பணமும் அவரிடம் தான் உள்ளது. சொர்ணலிங்கத்திற்கு ஒரே ஒரு மகள் . அவள் பெயர் மாலதி. மாலதிக்கு தாய் நோயால் இறந்து விட்டார். அதன் பின் மாலதியை வளர்ப்பதற்காக சொர்ணலிங்கம் இரண்டாம் கலியாணம் சாவித்தரி என்ற பெண்ணை மணம் முடித்தார். ஆனால் சாவித்திரிக்கு கன காலமாக ஒரு குழந்தையும் இல்லை சித்தி என்று வருபவர்கள் பெரும்பாலும் கொடுமை செய்வார்கள். ஆனால் சாவித்திரி விதி விலக்கானவள். மாலதிக்கு தாய் என்ற அந்தஸ்த்தில் இருந்து அவளை குறை ஏதும் இல்லாமல் பார்த்தாள். மாலதியும் ,சித்தியும் இருந்த நேரம் பணஉதவி கேட்டு வினோத்தின் தாய் வந்தாள். வினோத்தின் தாயை சொர்ணலிங்கம் பெரிதாக மதிப்பதில்லை . பண வசதி இல்லை என்பதால் மாலதிக்கு நடக்கும் பிறந்ததின விழாவிற்கு கூடச் சொல்லவில்லை. ஆனால் மாலதி கோயிலுக்கு சென்று வரும் போது வினோத் வீட்டிற்கு சென்று அவனது தாயிடம் ஆசீர்வாதம் வாங்கித்தான் வருவாள்.

மறுநாள் காலை வினோத்தின் தாய் தனது அண்ணன் சொர்ணலிங்கம் வீட்டிற்கு சென்றாள். அவளைக் கண்ட சொர்ணலிங்கம் “ம் ....ம் ........ வா என்ன வந்த விசயம் என்ன தேவை ? ” என்று கேட்டான். அவள் “ஒன்றுமில்லை .......” என்று இழுத்தாள் .அவள் “இல்லை ............. அண்ணா வினோ.......த்....த்..... பட்டணம்.......” “பட்டணமா எதற்கு ” என்று அவசரப்பட்டு கேட்டான். “ இல்லை அண்ணா அவனை பட்டணத்திற்கு அனுப்பி படிக்கவைக்கப்போறன் அது தான் உங்களிடம் வந்தேன் ” என்றாள் பயம் கலந்த குரலில் . அவன் “ என்னால் பணம் எதுவும் தர முடியாது நீ வயல் வைத்திருக்கிறாய் தானே அதனை விற்று உன் மகனை படிக்க அனுப்பு . ” என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டு சாவித்திரி “ நான் வயலுக்கு போகிறேன் ” என்று கூறிவிட்டுப் போய்விட்டார் .

இவர்கள் உரையாடியதைக்கேட்டுக் கொண்ட மாலதியும் சாவித்திரியும் அவளைக் கூப்பிட்டனர், " மாமி வினோத் படிக்க நான் பணம் தருகின்றேன் நீங்கள் வயல் காணி விற்க வேண்டாம் " என்று மாலதி கூறினாள். "ஆம் -- ஆம் -- மாலதி சொல்வது சரிதான் நானும் மாலதியும் உங்களுக்கு உதவுவோம்." என்று உறுதியாக சாவித்திரி கூறினாள். சாவித்திரியும் மாலதியும் வினோத்தின் தாயிடம் பணத்தைக் கொடுத்து விட்டார்கள். "அப்பா ஏன் இப்படி பணத்தை சேர்க்கிறார் இந்தப்பணம் நிலைக்காது " என்று கண் கலங்கினாள் மாலதி.

வினோத் தாய் வருவதைக் கண்டதும் "அம்மா -- அம்மா -- பணம் தந்தாரா " என்று ஆவலாக கேட்டான். அவர் தரவில்லை என்று நடந்தவற்றைச் சொல்லிக் கலங்கினாள். தாயின் கண்ணீரைத் துடைத்தபடி வினோத் " நான் படித்து அவர்களிடம் வாங்கிய பணம் எல்லாம் கொடுத்து விடுவேன்." என்று தாய்க்கு ஆறுதல் மொழி கூறினான்.

அவர்கள் கொடுத்த பணத்தைக் கொண்டு பட்டணம் சென்று அங்கு படிப்பதற்கு ஆக வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து கல்லூரியில் படித்தான். விடுமுறை நாளில் தாயை வந்து பார்த்துப் போவான். மறக்காமல் சாவித்திரியையும் பார்த்துப் போவான். அவர்கள் ஏதாவது பணம் கொடுத்து அனுப்புவார்கள். இப்படியாக காலம் உருண்டோடி படிப்பு முடித்து வேலைக்கு விண்ணப்பித்து விட்டு அவன் தாயிடம் ரயிலில் வந்து கொண்டு இருக்கிறான். சிறிது நேரத்தில் பொள்ளாச்சி ஊர் வந்ததும் ரயிலில் இருந்து இறங்கி வீட்டுக்குச் சென்றான்.

வினோத்தைக் கண்ட தாய் "என்னப்பா சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று வந்து விட்டாய் " என்றாள். வினோத் மகிழ்ச்சியுடன் " எனக்கு பரீட்சை எல்லாம் முடிந்து வேலைக்கு விண்ணப்பம் செய்துவிட்டேன் " என்று கூறினான். "சரி சரி கை கால் முகம் கழுவி வாப்பா ஏதாவது சாப்பிட" என்றாள் தாய். சிறிது நேரத்தில் சாப்பாட்டைப் போட்டுவிட்டு தாய் "வினோத் -- வினோத் -- " என அழைத்தாள். " இதோ வந்திட்டன்" என்றவாறு வந்தான்.

"என்னப்பா கையிலை சேலை வைச்சிருக்கா"

"இதுவா உனக்கு ஒன்று மற்றது மாலதிக்கு" என்றான். சரி சாப்பிட வா என்றாள் சாப்பிட்டு முடிந்ததும் தாயிடம் " அம்மா மாலதியிடம் என்னென்று இதைக் கொடுப்பது. வீட்டில் போய் கொடுக்கவா ? " என்றான் . " மாலதி நாளைக்கு கோயிலுக்கு போட்டு வீட்டை வந்து போவா அப்போது கொடுக்கலாம் " என்றாள் தாய்.

" அம்மா நான் கொஞ்சம் வெளியில் போய் வருகிறேன் " என்று கூறிவிட்டு வீதிக்கு வந்தான். " எப்ப தம்பி வந்தனீர் " என்று கேட்டவாறு வீரகத்தி வந்தார்.

" காலையில்தான் வந்தனான்"

" படிப்பெல்லாம் முடிஞ்சுதா " எனக் கேட்டு " எப்ப திரும்பப் போறீர் "எனக் கேட்டார் " இப்போதைக்குப் போகத் தேவையில்லை " என்றான் .அவரிடம் விடைபெற்று வீதிக்குச் சென்றான் . தொலைவில் ஒரு கார் நிற்பதைக்கண்டு " எங்க ஊருக்குள் யாருவீட்டை கார் வந்திருக்கு "என்று காரின் திசை நோக்கினான். " ஓ..... ஓ..... இது மாமா வீட்டுப்பக்கமாகப் போகுது . ஆருக்கும் என்னவும் ஆச்சோ ?. " என்றவாறு காருக்கு அருகில் சென்றான். அங்கு மாமா நான்கு பேருடன் கதைத்தவாறு வெளியில் வந்தார். வினோத்தைக் கண்டதும் " வா...வா... வினோத் எப்ப வந்தாய் " என்று கேட்டு , "இவன் பட்டணத்திலே படிக்கிறான் எங்க தங்கை பையன் " என வந்தவர்களிடம் அறிமுகப்படுத்தினார் . வந்தவர்கள் விடை பெற்று சென்றதும் " உள்ளே வா வினோத் " என்று அவனை அழைத்தார் வினோத்திற்கு உள்ளே செல்ல விருப்பம் இல்லை என்றாலும் மாலதிக்காக உள்ளே சென்றான். அங்கு மேசையில் தட்டம் இருந்தது . அதில் வெற்றிலை, பாக்கு, பழம், பூ ,சேலை என பல பொருட்கள் இருந்தன . அவற்றைப் பார்த்ததும் மலைத்துப் போய் விட்டான் . " என்ன அப்படியே நின்றிட்டாய் ? வா உள்ளே " என மாமா அழைத்தார்.

மாமா சொர்ணலிங்கம் வினோத்திடம் "இப்ப வந்த வங்க அமெரிக்காவில் இருக்கிறம் மகன் எஞ்சினியர் மாலதியை பொண்ணு பார்த்துப் போறாங்க வாற முகூர்த்தத்தில் திருமணம் " என்றார் . அப்போ வினோத் மாமனிடம் சீர்வரிசை எல்லாம் நிறைய கேட்டிருப்பாங்களே " என்றான் . " ஓ .... ஐம்பது பவுண் நகை முப்பது லட்சம் காசு என்றார்" மாமனார் சந்தோஷமாக . வினோத்திற்கு ஏதும் சாப்பிடக் கொடு என்றார் . சாவித்திரியை நோக்கி " சீ...சீ..... எனக்கொன்றும் வேண்டாம் "என்று கூறி வினோத் விடை பெற்றான் . வரும் வழியில் மாமனின் குணத்தை எடை போட்டவாறு வீடு வந்து சேர்ந்தான் . வினோத்தைக் கண்ட தாய் " இவ்வளவு நேரம் எங்கப்பா நின்றிட்டு வாறாய் " என்றாள் . வினோத் நடந்தவற்றைக் கூறி முடித்தான் . " சரி .......சரி ...... நீ உனது மாமாவை நினைக்காமல் மாலதிக்காக எல்லா வேலைகளும் போய் செய்து கொடு" என்றாள் தாய் . தாய் கூறியபடி எல்லா உதவியும் மாலதியின் திருமணத்திற்காகச் செய்தான் . திருமணநாள் நெருங்கியது வினோத்தை அவனது மாமன் கூப்பிட்டு " நான் போய் வங்கியில் போட்ட பணத்தையும் மாலதிக்கு செய்யக் கொடுத்த நகையையும் எடுத்து வாறேன் " என்று கூற " மாமா நானும் வாறன் இவ்வளவு பணம் ,நகையையும் கொண்டுவரப் பயம் " என்றான் . " என்னை யாரென நினைச்சாய் என்னட்டை ஒருதரும் வாலாட்ட முடியாது " என்றார் மாமன் . "வினோத் நாளை காலை 11.00 மணிக்குத் தான் நாள் எல்லாம் சிறப்பாகச் செய்ய வேண்டும் " என்று கூறி விடை பெற்றார் சொர்ணலிங்கம் . இவ்வாறு கலியாண ஏற்பாடுகள் சகலதும் நடைபெற்றன . பொழுது இருட்டிவிட்டது .

" அம்மா....அம்மா...... " என்று கூப்பிட்டவண்ணம் வயல் காட்டு வீரகத்தி ஓடிவந்தார் . என்னப்பா என்ன நடந்தது என்று கேட்க அப்பொழுது அவன் கண்கலங்கியபடி எங்க ஐயாவை யாரோ குத்தி கொலை செய்து விட்டு நகை காசைத் திருடிக் கொண்டு போய் விட்டார்கள் . எனக் கூறி முடித்தான் . இதனைக் கேட்டு அலறிக்கொண்டு வயல்க் காட்டை நோக்கி ஓடினார்கள் சொர்ணலிங்கத்தின் உயிரற்ற உடலைக் கண்டதும் சாவித்திரி அதிலேயே உயிர் பிரிந்தாள் . ஊர் மக்கள் மாலதியை இவளின் சகுனம் சரியில்லை என்று முணுமுணுத்தார்கள் . திருமணம் தடைபட்டது . வினோத்தின் தாய் மாப்பிள்ளை வீட்டாரிடம் சென்று திருமணத்தைப்பற்றிக் கேட்க அவர்கள் மறுத்து விட்டார்கள் .

இவற்றை எல்லாம் பார்த்த மாலதி அறைக்குள் சென்று உள்ளால் தாழ் போட்டு அழுதாள் பின் ஒரு முடிவாக இறப்பதற்காக வளையில் கயிறு போட்டாள் அதற்கிடையில் வினோத் யன்னல் வழியாக மாலதிக்கு ஏன் இந்த முடிவுக்கு வந்தாய் உனக்கு நானும் அம்மாவும் இருக்கிறோம் நான் உன்னை மனைவியாக ஏற்கிறேன் என்றான் அப்பொழுது மாலதி அறையைத் திறந்து கொண்டு வினோத்தின் கையைப் பிடித்து அழுதாள் .

கு . நித்தியாஞ்சலி
( 2000 கலை )

========================================

உங்களுடைய இலக்கு எப்பொழுதும் உயர்வானதாகவே இருக்க வேண்டும்.

.........சாக்கிரடீஸ்

காலமென்னும் ஆழ்கடலில் பயணம் செல்லும் நமக்கு
கலங்கரை விளக்கமாகத் திகழ்பவை நல்ல புத்தகங்களே

..................வீப்பில்

# தவிப்பு

அதிகாலை இளங்காற்றின் வருடலாலும் சூரியவொளித் தோன்றலாலும் குயில்களின் ஓசை நயத்தினாலும் கடடாந்தரையிலே கட்டெறும்பு போலச் சுருண்டு கிடந்தவன் பொழுது புலர்ந்ததே தெரியாத அளவிற்கு சுருண்டு கிடந்தான்.

" அடே கணேசா என்னடா அசதியாய்த் தூங்குற எழும்பு" என கந்தண்ணை கணேசனை எழுப்பினார்.

" என்னண்ணை " எனச் சிணுங்கிவாறு எழுந்தான் குழந்தையின் முகத்தோற்றமும் அழகிய தோளினையுமுடைய கணேசன். கணேசன் கடிகாரத்தை உற்று நோக்கினான். கடிகாரத்திலே எட்டு மணி என நேரம் காட்டியது. கணேசன் அவசர அவசரமாக வேலைக்குச் செல்வதற்கு ஆயத்தமானான்.

"கந்தண்ணை வீட்டைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள" என கந்தண்ணையிடம் கூறிவிட்டு பஸ்நிலையத்தை நோக்கி நடக்கலானான். முகமெல்லாம் வியர்வைத் துளிகள் சொட்டச் சொட்ட பஸ்சை எதிர்நோக்கியவாறு காத்திருந்தான். பஸ் வர அதிக நேரம் தாமதமானதால் ஒரு ஓட்டோ ஒன்றை பிடித்துக் கொண்டு அலுவலகத்துக்குச் சென்றான்.

கணேசன் கொழும்பு பாட்டா கொம்பனியில் கணக்காளராகப் பணியாற்றுகின்ற ஒரு சாதாரண குடும்பத்துப் பையன். அவன் யாழ்ப்பாணத்திலுள்ள கரவை என்னும் கிராமத்தில் ஓலைக் குடிசையிலே வாழ்ந்தவன். கணேசனுக்கு வாழ்க்கையிலே துணையாக இருந்தவர்கள் அவனது தாயும் அவனது காதலியான கவிதாவும் தான். கணேசன் சிறு வயதிலே தனது தந்தையை இழந்து தனது தாயாருடன் தனிமையில் வாடியபோது அவனுக்குத் துணையாக யாருமில்லாது தவித்தான். றோசாச் செடியிலே தனியொரு றோசா மலர்ந்திருப்பதைப் போலத் தவித்தான். இறைவா இவ்வொற்றைச் செடியில் பூத்திருக்கும் றோசாப் பூவுடன் இன்னுமொரு றோசாப்பூ பூக்காதா என ஏங்கும் கணேசனுக்கு வாழ்விலே எல்லா சுகங்களையும் பெற்று கொண்டாற்போல் ஓர் உணர்வு. அந்த நாளும் பொன்னாளானது. அன்று கணேசன் வழமைபோல் தனிமையிலே பாடசாலைக்கு நேரம் போனமையால் ஓட்டமும் நடையுமாய்ச் சென்றான். அப்போது

" ஹலோ ! கணேஸ் வாறீங்களா நான் ட்றாப் பண்ணிவிடுறன்" என ஓர் மென்மையான குயிலின் ஓசையைக் கேட்பது போலக் கவிதாவின் அழைப்பொலி அவன் காதிலே விழுந்தது.

" பரவாயில்லை கவிதா நான் நடந்தே போறன் " என அடக்க ஒடுக்கம் நிறைந்த பணிவான குரலில் பதிலளித்தான். இவ்வாறு கணேசன் கூறியதைச் செவிமடுத்தவாறு கவிதா சென்று விட்டாள்.

" அடி கமலா நான் உனக்கு ஒன்று சொல்லுறன் அதை நீ யாரிடமும் சொல்லாமல் எனக்கு உதவி செய்வாயா ?" எனக் கவிதா தனது உயிர் நண்பியான கமலாவிடம் கேட்டாள்.

" என்னடி இன்ற மட்டும் இப்படிப் பேசுற ! எப்ப உனக்கு நான் துரோகம் செய்திருக்கிறன். நீ இவ்வளவு காலமும் சும்மா பகடைக்காய் போலத் தான் பழகினாய் ! ம்! சரி நீ என்ன சொன்னாய் சொல்லு என்னால முடிஞ்சா நான் உதவி செய்யிறன்" என்றாள்.

" நான் கணேசை உயிருக்குயிராய் நேசிக்கிறேன். " எனக் கூறி முடிக்கு முன்னரோ கமலாவின் வாயில் இருந்து கேலியாக ஒரு பாடல் உதிர்ந்தது.

" காதலெனும் தேர்வெழுதி காத்திருந்த மாணவி நீ ...................."
எனப் பாடினாள்.

" சரி நான் ட்ரை பண்ணிப்பார்க்கிறேன் உனக்கு அதிஸ்ரம் இருந்தால் உன் காதல் நிலைக்கும்" எனக் கூறி முடித்தாள். ஆனால் கணேசனே கமலா மூலம் தன் காதலை வெளிப்படுத்தினான். இவ்வாறு அவர்களது காதலானது தென்றலில் மிதந்து வரும் தேவலோகம் போலக் கழிந்தது. இப்படி இருக்கும் போது ஒருநாள் கணேசன் கவிதாவிடம் வந்து

" கவிதா நான் என்னுடைய அம்மாவை நன்கு நேசிப்பவன் என்று உனக்கே தெரியும். இனியும் அம்மாவை வேலைக்கு விட்டு நான் வாழுவதை விரும்பவில்லை. நான் படிச்சிட்டுச் சும்மாதான் இருக்கிறன் கொழும்பு போய் ஒரு வேலை தேடலாமென்று இருக்கின்றேன் " எனச் சொல்லும்போதே கவிதாவின் கண்களில் இருந்து கண்ணீர் மல்கியது.

" கணேஸ் என்னை மறக்க மாட்டீங்கள் தானே " என அழுதவாறு வழியனுப்பினாள். இவ்வாறு தனது தாய் மீது வைத்த அன்பினாலும் தான் பிற்காலத்தில் சொந்தக்காலில் நிற்கவேணும் என்பதற்காகவும் கொழும்பு பாட்டா கம்பனியில் வேலை பார்க்கிறான். வேலை முடிந்ததும் கணேசன் தீபாவளி நெருங்கியதால் தனக்கும் தாயாருக்கும் காதலிக்கும் உடுப்பு எடுக்கச் சென்றான். அவனின் துரதிஸ்ரம் அவ்வேளை பெற்றாச் சந்தியிலே பெரும் சத்தத்துடன் குண்டு வெடித்ததில் அங்கு நின்ற பொலிசார் பல தமிழ் இளைஞர்களை கைது செய்தனர் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் கணேசனும் ஒருவனாக இருந்தான் இவ்வாறு பிடிபட்டு இருக்கும் போதுதான் கணேசனுக்கு ஓர் அதிர்ச்சியான செய்தி வந்தது.

" கணேசா எப்படி சுகமாய் இருக்கிறியா உனக்கு காலையில் ஒரு தந்தி வந்தது உன் அம்மாவிற்கு வருத்தமாம் " என கந்தண்ணை கூறிவிட்டு அழுதார்.

" என்ன அண்ணை என்ன நடந்தது சொல்லுங்கோ " எனக் கேட்டான்.
"இல்லை கணேசா உன் தாய் இறந்து விட்டா ". எனக் கூறிவிட்டு கவலை தாங்கா வண்ணம் சென்று விட்டார். கணேசனின் நிலைமை கவலைக்கிடமாகத்தான் இருந்தது கணேசன் றிலீசானதும் ஆவாரமாக வீட்டுக்குச் சென்றான். கணேசன் வீட்டுவாசலில் வந்து இறங்கும் போதே வீட்டினுள் ஒருகாகத்தைக் கூடக் காணவில்லை. அப்படியிருக்கும்போது வீட்டினுள் இருந்து சுதன் மட்டும் வெளியே வந்தான். "அடா கணேசா வா....வா... எப்ப வந்தாய்" எனக் கணேசனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

" கணேசா நாங்கள் நீ வருவாய் வருவாய் எனக் காத்திருந்து நான் தான் முன்னின்று எல்லாத்தையும் முடித்திட்டன். உனக்கு நடந்ததை எல்லாம் அறிந்தன் நீ அதிஸ்ரம் இல்லாதவன் போல "எனக் கூறியவாறு சுதன் தனது வீட்டுக்குச் சென்று விட்டான் இவ்வாறு தனிமையில் வாடிய கணேசன் தனது துணைக்கு மிகவும் முக்கியமான அந்தக் கவிதாவைத் தேடிச் சென்றான். ஆனால் அங்கு அவளது வீடு பூட்டி இருந்தது. ஏமாற்றமடைந்த கணேசன் மறுநாள் சுதனைச் சந்தித்து கவிதாவைப் பற்றி கேட்கலானான்

" சுதன் நான் ஒன்று கேட்கிறேன் தப்பா நினைக்கக் கூடாது" எனக் கேட்கலானான்." ஏன் கவிதாவின் வீடு பூட்டி இருக்கு " என்றான். "அடா அதுவா உனக்கு ஒண்ணும் தெரியாதா நீ போய் ஓரிரண்டு மாதத்திற்குப் பின்னர் கவிதா தன் குடும்ப நிலை காரணமாக தன் சொந்த பந்தங்களை பிரிந்து வெளிநாடு சென்று விட்டாள். " எனக் கூறினான்.

" அப்ப எனக்கு இவ்வளவு நாளும் யார் கடிதம் போட்டாங்க ? அப்ப அந்தக் கடிதங்கள் யாவும் கவிதா போடவில்லையா ? யார் எனக்கு கவிதாவின் பெயரில் கடிதம் போட்டது ? " என அழுதவாறு கேட்டான்.

"கணேசா நான் சொல்வதை பொறுமையாகக் கேள் நீ கொழும்பு சென்று வேலை செய்யும் வேளையில் நான் தான் கவிதாவின் பெயரில் உனக்கு கடிதம் போட்டனான் ஏனென்றால் நீ அங்கு எதையும் செய்துவிடக் கூடாது என்று தான் கணேசா ...... உன்னிலும் பிழை இல்லை கவிதாவிலும் பிழை இல்லை "எனக் கூறினான்.

இவற்றை எல்லாம் கேட்ட கணேசன் தனிமையில் வாடினான். முன்பு போலவே தனிமையில் வாடினான். றோசாச் செடியிலே பூத்த ஒரு றோசாப்பூ போல வாடிக் கொண்டே போனான்.

ச. சுதர்சன்
(2000 கலை)

# பொது அறிவுப் புதிர்கள்.

1) பிஜி நாட்டின் தலைநகரம் யாது?
2) மிகவும் சிறிய தேசிய கீதம் யாது? எத்தனை வரிகளை உடையது?
3) தாய் எனது பல்கலைக்கழகம் என்ற நூலை எழுதியவர் யார்?
4) ஆசியாவின் நோபல் பரிசு எனப் புகழப்படுவது எது?
5) வத்திக்கான் நாட்டின் நாணயம் யாது?
6) உலக எயிட்ஸ் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
7) கோல்ட் கோஸ்ற் என்னும் பழைய பெயரைக் கொண்ட நாடு எது?
8) இளஞ்சிவப்பு நகரம் யாது?
9) வத்திக்கானில் வாழும் மக்களின் எண்ணிக்கை யாது?
10) உலகக் கிண்ண கிரிக்கட் போட்டி தொடங்கிய ஆண்டு எது?

சி. ராஜசுதன்
(2000 கலை)

---

மனித குலத்தை விட உயர்ந்தது எதுவும் இல்லை
எவனும் தன்னை இழிவாக எண்ணுதல் கூடாது தன்னை
இழிவாக எண்ணுபவன் எப்பொழுதும் வெற்றி அடைய மாட்டான்
மகா பாரதம்

உண்மையே கடவுள், எல்லா அறங்களும் உண்மையைப் பின்
தொடர்கின்றன உண்மையைவிட மேலானது வேறொன்றும் இல்லை.
வால்மீகி

# ஓசோன் படையின் சிதைவும் அதைப் பேணலும்

வளி மண்டலத்தில் காணப்படும் $10^8$ வாயு மூலக்கூறுகளின் 1 அல்லது 2 மூலக்கூறுகள் ஓசோன் ஆகும். ஓசோன் மணமற்ற வெளிர் நீல நிற வாயுவாகும். இது ஞாயிற்றுக்கதிர் வீச்சின் அதிகப்படியான தாக்கத்திலிருந்து புவியை பாதுகாப்பதுடன் புற ஊதாக்கதிர்களையும் தடுத்து வானவெளிக்கு அனுப்புகிறது. வளி மண்டல “ஓ” கோளில் ஏற்படும் மாறுபாடுகள் துவாரங்கள் பச்சை வீட்டு விளைவிலும் மாறுபாடுகளை ஏற்படுத்தும். இதனால் புவி வெப்பமாகும் போக்கு உயிரின சுகாதார வாழ்வில் அச்சுறுத்தல் அதிகரித்த இயறகை அழிவுகள் ஏற்பட இடமுண்டு.

புவிமேற்பரப்பிலிருந்து 15 – 35 km உயரமான வளிமண்டல பகுதியிலேயே ஓசோன் செறிவாக காணப்படுகிறது. செறிவாவுள்ள இப்பகுதியே ஓசோன் படை எனப்படுகிறது. படைமண்டலத்தின் கீழ்ப்பகுதியில் ஒளி இரசாயன செயற்பாடு காரணமாக ஓசோன் உருவாகிறது. ஒட்சிசன் வாயு மூலக்கூறுகளுடன் பிற ஊதாக்கதிர்களின் தாக்கத்தினால் ஒட்சிசன் அணு உருவாகிறது. இவ் ஒட்சிசன் அணு உரிய வெப்பநிலை – அமுக்க நிபந்தனைகளில் ஒட்சிசன் வாயு மூலக்கூறுகளுடன் இணைந்து ஓசோனாகிறது. இது நிலையானதல்ல மோதுகை, ஒளி – பிரிகையாக்கம் ஆகிய செயற்பாடுகளால் ஓசோன் சிதைக்கப்படும். வளி மண்டலத்தில் 80 – 100 km உயரப்பகுதியில் ஒட்சிசன் வாயு மூலக்கூறுகளின் பிரிகையாக்கம் நிகழ்கிறது. ஆனால் ஓசோன் உருவாக்க செயற்பாடு 30 – 60 km உயரப்பகுதியில் நடைபெறுகிறது.

வளி மண்டலத்தில் காணப்படும் ஓசோன் மூலக்கூறுகள் குறைவுத்தன்மையை ஓசோன் சிதைவு எனப்படும். 15 நிமிடங்களுக்கு மேல் சாதாரண மனிதனால் புற ஊதாக்கதிர்களின் தாக்கத்திறகு நின்று பிடிக்கமுடியாது. 1985 இல் nimbus 7 எனும் அமெரிக்க வானிலைச் செய்மதி முதன் முதலாக தென்முனைவிற்கு மேல் ஓசோன் படையில் துவாரம் காணப்பட்டதை அவதானித்து இதன் பாதிப்பு ரியோடி ஜெனீரோ, அரேனஸ் போன்ற தென்னமெரிக்க நகரங்களின் மேல் அவதானிக்கப்பட்டது. தற்போது ஆக்டிக் பகுதி நிலவரம் காரணமாக ஐரோப்பிய கண்டத்திலும் இவ் அச்சுறுத்தல் ஏற்பட இடமுண்டு ஓசோன் படையானது முனைவு இடைவெப்ப வலயப் பகுதிகளில் மனித சுகவாழ்வைப் பேணுவதுடன் அயனப் பகுதியில் சூழல் மற்றும் பயிரழிவுகளைத் தடுக்கிறது. ஓசோன் துவாரம் மூலம் ஊடுருவும் புற ஊதாக் கதிர்களின் தாக்கத்தினால் தோலில் புற்றுநோய், கண்ணில் கற்றாய்க், மனித உடலில் தாக்குப் பிடிக்கும் ஆற்றலில் குறைபாடு. பக்டீரியா – பங்கசு தொற்றுகள் ஏற்பட இடமுண்டு.

மனித சுகாதார வாழ்விற்கு ஏற்படும் அச்சுறுத்தலைவிட ஓசோனைச் சிதைக்கும் நவீன தொழில்நுட்ப அம்சங்களாக குளோரின், புளோரின் சேர்வைகள் வளிமண்டலத்தில் கலப்பதால் புவி வெப்பமாகும் போக்கு அதிகரிக்கிறது. 2030 ஆம் ஆண்டளவில் 1.4° – 4.5° c வரை புவியின் வெப்பநிலை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் உணவுச் சங்கிலி, உணவுவலை செயற்பாடுகளில் பாதிப்பு, நிலம், கடல், உணவு உற்பத்தியில் குறைவு, புவி வெப்பமாகும் போக்கினால் முனைவுப்பனி உருகுதல், கடல் மட்டத்தை அண்டிய தீவுகள் நீரில் மூழ்குதல், கட்டுப்பாடற்ற வரட்சி – வெள்ளம் போன்ற அழிவுகள் வளி மாசடைதல் போன்ற சூழல் பிரச்சனைகள் ஏற்படும்.

படை மண்டல ஓசோன் மனிதருக்கு நன்மை செய்வது போல மாறன் மண்டல ஓசோன் நன்மை செய்வதில்லை. மாறாக ஓசோனின் செறிவைப் பொறுத்து தாவர அழிவுகள் மனித சுகாதார அச்சுறுத்தல்கள் என்பன ஏற்படும். மாறன் மணடலத்தில் ஓசோன் உருவாக்கமும், படை மண்டலத்தில் ஓசோன் சிதைவு காரணமாக புவிக்கோளம்

இன்று நீர்.வெப்பம் புற ஊதாக்கதிர்கள் தொடர்பாக பிரச்சனைகளை எதிர் நோக்குகிறது. ஆரம்பத்தில் ஓசோன் படையானது நைதரசன் ஒட்சைட்டுக்களால் பாதிப்படைகிறது எனக் கருதப்பட்டது. 1974 இல் இதற்கு முக்கியமாக தொழில்நுட்ப செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும் குளோரோபுளோரோ காபன்கள் (CFC)காரணம் என்பது அறியப்பட்டது.

1985 இல் பிரித்தானிய விஞ்ஞானிகள் அண்டாட்டிக்காவிற்கு மேலே காணப்பட்ட ஓசோன் துவாரம் பற்றி ஆராய்ந்தனர். இத் துவாரம் ஒவ்வொரு ஆண்டிலும் வசந்த காலத்தில் பருமனில் அதிகரித்தும் பின் பழைய நிலையை அடைந்தும் காணப்படுகிறது. வளிமண்டலத்தில் குளோரின், புளோரின் சேர்வைகளின் அதிகரிப்பைத் தொடர்ந்து ஓசோன் துவாரம் பெரிதாகிக் கொண்டு போகிறது. குத்துயர ரீதியில் பார்க்கும் பொழுது உம்க்ஜோர் செய்மதித் தரவுகளின் படி 35 k.m உயர வளிமண்டலப்பகுதியிலேயே ஓசோன் சிதைவு அதிகமாக உள்ளது. 1979 களில் இருந்து படை மண்டலத்தில் 45 முதல் 55 கிலோமீற்றருக்கு இடைப்பட்ட பகுதியில் ஓசோனின் 10 வீதக் குறைபாட்டால் வெப்பநிலை 1.7 k அளவு குறைந்துள்ளது. ஓசோன் படையானது எரிமலைத் தாக்கங்கள், ஒட்சிசன் அணுமூலக்கூறுகளுடனான தாக்கம் என்பவற்றால் இயற்கையில் சிதைவடைகிறது. நவீன தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு முக்கியமான குளோரின், புரோமின் சேர்வைகள் செயற்கையாக சிதைக்கின்றன.

CFC நீண்ட ஆயுள் காரணமாக பிரிகை அடையாது வளிமண்டலச் செயற்பாடுகள் ஊடாகப் படைமண்டலத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன. அங்கு புற ஊதக்கதிர்களின் தாக்கம் காரணமாக CFC மூலக்கூறுகளில் இருந்து குளோரின் அணு பிரித்தெடுக்கப்படும். குளோரின் அணு உயர் தாக்குதிறன் கொண்டது. தனித்த குளோரின் அணு 100,000 ஓசோன் அணுக்களைச் சிதைக்கும், CFC தவிர ஏனைய குளோரின் கொண்ட சேர்வைகளும் ஓசோனைச் சிதைக்கும் ஆற்றல் உள்ளவை.

ஓசோன் சிதைவை தடுப்பதற்காக இன்று குளோரின் புரோமினுடன் சேர்வைகளுக்குப் பிரதியீடாக HFC, HCFC. ICI. Dupon 4 ஆகியன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மேலும் சூழல் மாசடைவைச் செய்யாத புதியனவற்றைக் கண்டு பிடிப்பதிலும் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். 1950 களிலேயே ஓசோன் பற்றிய தகவல்கள் பெறப்பட்டாலும் ஓசோனின் ஒப்பீட்டு ரீதியான ஆய்வுகள் 1980 களின் பின்னரே தொடங்கின. சிட்னிசப்மன் என்ற விஞ்ஞானி முதன்முதலில் ஓசோன் அழிவு பற்றி ஆராய்ந்தார். கடந்த 40 வருடங்களாக நாஸா உலக வளிமண்டலவியல் நிறுவனம் (WMO) வளிமண்டல ஓசோன் பற்றிய அளவீடுகளையும் ஆராய்ச்சிகளையும் நடத்தி வருகின்றது. புவிக்கோள அவதானிப்பு ஒழுங்கு, வளி மாசடைதலின் பின்னணியைக் கண்காணிக்கும் இணையமைப்பு வலையமைப்பு, புவிக்கோள வளிமண்டல அவதானிப்பு போன்ற அமைப்புக்களை இந்த ஓசோன் பாதுகாப்பு நோக்கத்திற்காக நிறுவியுள்ளன. ஓசோன் தொடர்பான WMO இன் நடவடிக்கைகள் இன்று 140 க்கு மேற்பட்ட ஓசோன் நிலையங்கள் செய்மதித் தொடர்பாடலுடன் புவிக்கோள ஓசோன் அவதானிப்பு ஒழுங்கினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

நா. நயனா
(2000 – உயிரியல் விஞ்)

துக்கப்படுவதால் மட்டும் எந்தப் பிரச்சினையும் தீர்ந்து விடாது

--- பண்டித நேரு

# தாயுள்ளம்

அன்று வழக்கம் போல நிலத்தின் அன்னை தன் மைந்தனைப் பார்த்து புன்னகை பூத்துக் கொண்டாள். குளிர்ந்த காற்று பூக்களைக் வருடிச் செல்வது அன்னையவள் தாலாட்டித் தூங்கவைப்பது போன்று இருந்தது. இடையிடையே வண்டுகள் தேனைப் பருகுவதற்காகப் போட்டி போட்டன. குருவிகள் சத்தமும் கிளிகளின் சத்தமும் ஊர்மக்களை பொழுது விடிந்து விட்டது எழுந்து விடுங்கள் என்பது போல அங்குமிங்குமாக ஓடித்திரிந்து கூச்சலிட்டது போல் கேட்டன. அப்போது கமலா தன்னுடைய இரு பிள்ளைகளையும் எழுப்பினாள்.

"தம்பி எழும்பு" என தனது இளைய மகனை எழுப்பினாள். அவன் எழுந்தவுடன் தனது தமக்கையை எழுப்பி இருவரும் முகம் கழுவிவிட்டு தமது வழமையான வீட்டு வேலைகளை செய்யத் தொடங்கினர். கமலாவும் தனது வேலைகளைத் தொடர்ந்தாள் அப்போது பக்கத்து வீட்டு மணியத்தார் "பிள்ளை கமலா எங்களுக்கு இண்டைக்குத் தோசை வேண்டாம்" என்றார் கமலாவும் "சரியண்ணை." எனத் தனது தலையை மான் போன்ற மருண்ட பார்வையுடன் அசைத்தாள். "தம்பி ராமு கடைக்குக் கொண்டு சென்று குடுத்திட்டு வா. நேரமாகுது" எனக் கூற மகனும் "சரியம்மா" எனத் தலையாட்டியவண்ணம் கடைக்குக் கொண்டு சென்றான். மகள் நாவிழியும் தாய்க்கு குசினியுள் நுழைந்து ஒத்தாசை புரிந்தாள்.

இவ்வாறு வேலைகளை முடித்துக் கொண்டு நாவிழியும், ராமுவும் பாடசாலை சென்றனர் தாயும் தன் மதிய கடமைகள் முடிந்துவிட்டது என சிறிது நேரம் தூங்கினாள். அவளது கிராமமோ குக்கிராமம் அவ்வூரில் அவளது வீடு ஓரமாக இருந்தது நான்கு மரங்கள் தாங்கிய வீடும் தென்னை ஓலையால் வேயப்பட்டதுமாகக் காணப்பட்டது தாய் தந்த சொத்தாக அதுவே காணப்பட்டது. பாவம் இவளது கணவன் ராசப்பு தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்க ஏறும் போது சறுக்கி விழுந்தார். இவ்வாறு விழுந்தவரை பக்கத்து வீட்டுக்காரன் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதும் உயிர் நீத்தார். பாவம் தாலியைக் கழட்டி வைத்த கையோடு பூவும் பொட்டும் இன்றி விதனை அடக்கு வைத்து அவரது பிதிர்க் கடன்களை ஒருவாறு முடித்தாள்.

இவ்வாறாக தனது பிள்ளைகளை வளர்ப்பதற்கு தோசை சுட்டு விற்று வந்தாள். இவ்வாறு விற்றவளுக்கு சில நேரம் தோசை மிஞ்சும். அதனையும் தனது பிள்ளைகளுக்கு பாடசாலைக்குக் கொண்டு போகும்படி கொடுத்து விடுவாள். தான் வெறும் வயிற்றுடன் காலை நேரத்தைப் போக்குவாள். அப்போது ராமுவும் நாவிழியும் அழுத கண்ணோடு வீடு சேர்ந்தார்கள் தாய் நித்திரை விட்டெழுந்து ராமு நாவிழி என்ற வண்ணம் வாய் தடுமாறினாள். தம்பி ராமு பாடசாலைக் கதையைச் சொல்லலானான். "அக்காவின் வகுப்பில் படிக்கும் பிள்ளையின் பேனையைக் காணவில்லையாம். உடனே பேனையைத் தொலைத்த பிள்ளை ஆசிரியருக்கு முறையிட்டு அவர் வந்து ஒவ்வொருவரின் பையையும் சோதிக்க அக்காவின் பையினுள் பக்கத்தில் இருந்த பிள்ளை போட்டு வைக்கவும் சரியாக இருந்தது. இதனை அறியாத ஆசிரியர் அக்காவை அடித்தார். அவ்வகுப்பில் உள்ள எல்லாப் பிள்ளைகளும் தமது நோக்கம் வெற்றி அளித்துவிட்டது" என மகிழ்ந்தனர்." என ராமு கூறி முடித்தான். உடனே தாய் கமலா "நீ அழாதை அம்மா" எனத் தன் பிள்ளையை அணைத்தவண்ணம் உணவித்து உறங்கவைத்தாள்.

அன்று முழுவதும் நித்திரைக்குப் போகும் வரைக்கும் அந்நினைவு அவளது தூக்கத்தைக் கலைத்தது. விடிந்தவுடன் அவ்வாசிரியரிடம் சென்று தனது பிள்ளையை தண்டித்த காரணத்தைக் கேட்போம் என உறுதி பூண்டவள் பிறகு தன் தொழில் கெட்டு

விடும் எனக் கருதி மனம் தளர்ந்தாள். இவ்வாறு ஒருவாறாக நித்திரையை முடித்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்காரர் கதைக்கும் சத்தம் கேட்டு விழுந்து விட்டது எனக் கருதி வேலையைத் தொடர்ந்தாள். குருவிகளும் தங்களது கடமைகளை முடித்துக் கொள்ள சூரியனும் தனது சிறகுகளை நீல வானத்தில் நீட்டிய வண்ணம் ஒளியைக் காட்டினான்.

மகனைக் கடைக்குக் கொண்டு சென்று கொடுக்கும்படி கூறிவிட்டு தன் மகள் நாவிழியை “ ஏனம்மா பாடசாலைக்குப் போகவில்லையா” எனக் கேட்க “ இல்லையம்மா அப்படியான வகுப்பில் நான் படிக்க விரும்பவில்லை ” எனச் சொல்ல தாய் தன் கணவனைத்தான் நொந்தாள். ஏனெனில் இப்போது அவர் இருந்தால் எங்களுக்கு இந்த நிலைமை வருமா ? என தனது மனதை அங்கலாய்க்கவிட்டு தன்னையே மறந்து அழுது விட்டாள். ஆறுதல் சொல்லும் அம்மா அழுதால் பிள்ளைகள் அழாமலா இருப்பார்கள். ஒருவாறு தமது நிலையை நொந்து அழுதுவிட்டு “ ராமு நீயும் போகவில்லையா ?” எனக் கேட்டாள். “இல்லையம்மா “என்றான் அவனும். சரியெனத் தனது காலை வேலையை முடித்து பக்கத்து வீட்டு மணியத்தாரிடம் சென்றாள். படலையைத் திறந்ததும் மணியத்தார் தனது பாடசாலை இரவு வேலையை முடித்துவிட்டு வந்து பல் துலக்கிக் கொண்டு நின்றார். “ ஏன் பிள்ளை ஒருமாதிரி முகம் இருக்கு ” எனக் கேட்டார். அதற்கு கமலா இல்லை அண்ணை என தனது பிள்ளையின் கதையைக் கூறி முடித்தாள். மணியத்தார் சொன்னார் “ நான் எங்கட பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுகிறேன் ” எனக் கூறி தனது வேலைகளைக் கவனியாது சைக்கிளை ஒரு மிதி மிதித்துக் கொண்டு இரு பிள்ளைகளையும் ஏற்றிக் கொண்டு பாடசாலை அதிபருடன் கதைத்துச் சேர்த்த பெருமையில் கமலாவிடம் சென்று தனது கெட்டித்தனத்தை எடுத்துக்கூற கமலாவும் நன்றி கூறியவளாய் தனது மதிய சமையல் வேலையைத் தொடர்ந்தாள்.

இவ்வாறு காலத்தை ஓட்டியவள் தனது பிள்ளைகள் இருவரையும் படிப்பித்து முன்னேற்றி மணியத்தாரின் உதவியுடன் இருவருக்கும் நல்ல இடத்தில் திருமணம் செய்து வைத்தாள். பின்னர் கமலா தன் மகள் நாவிழியை அடித்த ஆசிரியரிடம் சென்று முன்பு நடந்த பிரச்சனையை நினைவு கூற அவரும் தன் பிழையை உணர்ந்து மன்னிப்புக் கேட்டார். காலம் ஓட விதியின் பயனும் சேர கமலாவின் வாழ்வும் முடிந்தது. பிள்ளைகள் இருவரும் கதறினர். அயல் கிராமத்திலிருந்து ஒலிபெருக்கியில்

“ தாய் தந்த பிச்சையிலே பிறந்தேனம்மா – இன்று
நீ தந்த பிச்சையிலே வளர்ந்தேனம்மா ......... ” எனும் பாடல் காற்றுடன் கலந்தொலித்தது. பிள்ளைகள் வேரற்ற ஆலமரம் போல் விம்மினார்கள். மாண்டவரை எண்ணி அழுதாலும் மீண்டும் வரவழைக்க முடியாது என்று மணியத்தார் ஆறுதல் கூறினார். இவ்வாறு ராமுவும் நாவிழியும் தமது தாயின் மரணக்கிரியைகளை முடித்துக் கொண்டு தம் தாயின் பெயரில் அவ்விடத்தில் ஓர் மடம் அமைத்துவிட்டு தமது தாயின் நினைவோடு தமது புகுந்த வீட்டிற்குப் புறப்பட்டார்கள்.

கே. ஜெகஜீம்மன்
( 2001 கலை )

உண்மை பேசுவதே சுவர்க்கம் அடைவதற்கான
ஏற்ற நல்ல செயல்.

— — — நபிகள் நாயகம்

# பாரதி கண்ட சமுதாயம்

நம் தமிழ் மொழியை வளர்க்கக் காலத்துக்குக் காலம் பல பாவலர்களும் நாவலர்களும் தோன்றி இருக்கிறார்கள். அவர்களுள் இருபதாம் நூற்றாண்டின் சிறந்த கவிஞன் என்ற பெயரினைப் பெற்றுக் கொண்டவன் பாரதி. பாரதி உலக மகாகவி, புதுமைக்கவி மக்கள் வாழ்வோடு ஒட்டி உறவாடி மக்களைத் தட்டி எழுப்பி கவி பாடினான் பாரதி.

பாரதி பாடினான் பாப்பாப் பாட்டுக்கள், கண்ணன் பாட்டுக்கள் குயிற்பாட்டு, பெண்கள் விடுதலைக்கும்மி, தேசிய விடுதலைப் பாட்டுக்கள், சக்திப்பாடல்கள் தீண்டாமையை ஒழிக்கும் பாடல்கள் முதலியன.

பாரதி சிறுவர் முதல் பாமரர் பண்டிதர் வரையான பல்திறத்தோரும் படித்து விளங்கும் வண்ணம் எளிய தமிழ்நடையில் பாடல்கள் பாடினான், தனது பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட்ட பாரதி "பாட்டுக்கொரு புலவன் பாரதி" என்ற பட்டத்தையும் ஈட்டிக் கொண்டான்,

தனது தாய்மொழியாகிய தமிழை நேசித்தான். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்றும் "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்றும் பாடி தமிழையும் தாய் நாட்டையும் நேசித்தான்

சிறுவர்களைக் பார்த்து "ஓடி விளையாடு பாப்பா" என்று பாடி இருக்கிறான் .பாப்பாக்களைப் பார்த்து "கூடி விளையாடு பாப்பா ஒரு குழந்தையை வையாதே பாப்பா" என்று பாடி ஒற்றுமையை வலியுறுத்துகிறான், "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்று வீட்டுக்குள்ளே பெண்களை அடைத்து அடிமையாகப் பெண்களை அடக்கி ஒடுக்கி வைத்த மக்களைப் பார்த்து

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்"
என்றும்
"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி"
என்றும் பெண்விடுதலைக்காகப் பாடுபட்டான்.

நம் தமிழ் மக்களிடையே காலங்காலமாகக் காணப்பட்ட கொடுமையிலும் கொடுமையான சாதியத்தை கண்டு உள்ளம் குமுறினான் பாரதி. நம்மிடையே ஒரு சிலரை சாதி காட்டி ஒதுக்கி வைக்கும் தீண்டாமைப் பேயை ஒழிக்கக் கங்கணம் கட்டினான் பாரதி.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு
"சாதிகள் இல்லையடி பாப்பா — குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்று பாடி சாதீயத்துக்கு சாவுமணியடித்தான் பாரதி.

"நெஞ்சு பொறுக்குதில்லையே — இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்" என்று பாடி உள்ளம் குமுறுகின்றான் பாரதி.

பசி, பட்டினி அகன்று வசியும் வளனும் பெற்று பசியற்ற ஒரு சமுதாயத்தைக் காண விழைந்தான் பாரதி, எச்சில் இலைக்காக நாயுடன் போட்டி போட்டுக் கொண்டு, பிறரிடம் கையேந்தி நிற்கும் மாந்தரின் இழிநிலை கண்டு உள்ளம் வெதும்பினான் பாரதி.

தனி ஒருவனுக்கு உணவில்லை எனின் – இந்தச்
ஜகத்தினை அழித்திடுவோம்.

என்று பொங்கி எழுந்தான் பாரதி.

வேலை இல்லையே என்று இல்லைப் பாட்டுப் பாடி சந்திகளிலும், மதகுகளிலும் குந்திக் கொண்டு வீணே பொழுது போக்குபவர்களைப் பார்த்து

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
யந்திரங்கள் வகுத்திடுவீரே
கரும்பைச்சாறு பிழிந்திடுவீரே
கடலில் மூழ்கி நன்முத்தெடுப்பீரே

என்று பாடி மக்களைச் சோம்பேறிகளாக இராமல் ஏதாவது ஒரு தொழிலைச் செய்து உழையுங்கள் என்று புத்திமதி கூறினான் பாரதி. இந்திய நாடு அடிமைப்பட்டிருப்பதைப் பார்த்து சுதந்திர கீதம் பாடினான் பாரதி.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமென்பதில்லை

என்று மக்களைத் தட்டி எழுப்பி தேச விடுதலைக்காகப் பாடுபட்டான்.

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் – பின்னர்
வேறொன்று கொள்வாரோ

என்று தேச சுதந்திரத்தை பாடினான்

தமிழ் மக்கள் தமிழ் மொழியை கற்று போற்றாமல் இருக்கின்ற நிலையைப் பார்த்து பாரதியால் பொறுக்க முடியவில்லை. தமிழர் பழம் பெருமையை மட்டும் பேசிக் கொண்டு இருக்கின்றனரே என்று எடுத்து காட்டுகிறார். தமிழர்கள் உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் தமிழ் மொழியும் வளம் படும் என்று கூறித் தமிழ்த் தொண்டு செய்யும்படி கூறுகின்றார்,

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தமிழ் மொழியில் பெயர்க்க வேண்டும் என்றும் தேமதுரத்தமிழ் உலகமெலாம் பரவும் வகை செய்யும் படியும் கூறுகின்றார் மேற்கு நாடுகளில் வளரும் புத்தம் புதிய கலைகளை தமிழ் மொழியில் கொண்டு வந்து சேர்க்கும்படி பாரதியார் பாடுகிறார்.

பாரதி படைத்த தமிழுலகில் பரிமளம் கமழ்கிறது கவிதையை ஒரு புதிய பாதையில் திருப்பி அதற்கு மலர்ச்சியும் எளிய வடிவமும் கொடுத்த பெருமை பாரதியையே சாரும். மக்கள் மத்தியில் பாரதியின் பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி, சிட்டுக்குருவி, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பன முக்கியத்துவம் பெற்றுள்ளன.

புதுமைக்கவி பாரதி அடிமையற்ற சுதந்திர சமுதாயத்தைக் கட்டி எழுப்பக் கனவு கண்டான். அதற்காகத் தன் பாட்டுத்திறத்தால் மக்களைத் தட்டியெழுப்பினான். அவனது பாடல்களைப் போற்றி பின்பற்றி நாமும் நடப்போம். அவனது கனவை நனவாக்கி அவன் வழி நடப்போம்.

ஜெ. பிரதீபன்.
( 2000 கலை )

# கலைந்த கனவுகள்.

காவேரி தீரம் அமைதி குடிகொண்டு விளங்கிற்று உதயசூரியனின் செம்பொற் கிரணங்களால் நதியின் செந்நீர் பிரவாகம் பொன்நிறம் பெற்று திகழ்ந்தது. அந்தப் புண்ணிய நதிக்கு பொன்னி என்னும் பெயர் அந்த வேளையில் மிகப் பொருத்தமாய் தோன்றியது. சுழிகள், சுழல்களுடனே விரைந்து சென்று கொண்டிருந்த அந்தப் பிரவாகத்தின் மீது காலை இளங்காற்று தவழ்ந்து விளையாடி இந்திரஜால வித்தைகள் காட்டிக் கொண்டிருந்தது. சின்னஞ்சிறு அலைகள் ஒன்றோடொன்று இலேசாக மோதியபொழுது சிதறி விழுந்த ஆயிரமாயிரம் நீர்த்துளிகள் ஐஸ்வர்யமான இரத்தினங்களாகவும், கோமேதகங்களாகவும் வைரங்களாகவும் பிரகாசித்து காவேரி நதியை ஓர் மாயாபுரியாக ஆக்கிக் கொண்டிருந்தன. இவ்வாறு இயற்கை அன்னையின் கொடையாக விளங்கிய காவேரியின் வடகரையிலேயே பொன்களத்தூர் கிராமம் அமைந்துள்ளது.

அழகும் அமைதியும் பொருந்திய ஓர் மனோகரமான காலைப் பொழுதில் அங்கு எழுந்த பல வகைச் சத்தங்கள் நதி தீரத்தின் அமைதியைக் கெடுத்துக் காட்டுவனவாய் இருந்தன. விசாலமான ஆலமரங்களில் வாழ்ந்த பறவை இனங்கள் சூரிய உதயத்தை வரவேற்றுப் பற்பல இசைகளில் கீதங்கள் பாடின. அந்த இயற்கை சங்கீதத்திற்கு நதிப் பிரவாகத்தின் "ஹோ" என்ற ஓசை சுருதி கொடுத்துக் கொண்டிருந்தது. உணவு தேடும்பொருட்டு வெளியே கிளம்புவதற்கு ஆயத்தமாக பறவைகள் தம் சிறகுகளை அடித்து ஆர்ப்பரித்தன. தாய்ப் பறவைகள் குஞ்சுகளிடம் கொஞ்சிக் கொஞ்சி விடைபெற்றுக் கொண்டிருந்தன. பறவைகளின் இன்னிசை கீதத்தினால் பொன்களத்தூர் கிராமம் உயிர் பெறத்தொடங்கியது. அவ் அதிகாலையிலேயே பூங்குழலியும் எழுந்து விட்டாள். பெயருக்கேற்றவாறே பூவைப் போன்றவளும் கரிய அடர்ந்த நீண்ட கூந்தலையும் உடையவளான குழலி ஏழை விவசாயிகளான தருமனதும் பொன்னம்மாவினதும் செல்ல மகளாவாள். அக்கிராமத்தில் இருக்கும் ஆரம்பப் பாடசாலையிலே படித்து விட்டு அத்துடன் படிப்பை நிறுத்தி வீட்டிலே தாய் தந்தையருக்கு உதவியாக இருந்துவிட்டாள்.

அதிகாலையிலே எழுந்து வழக்கம் போல் வாசல் தெளித்து கோலம் போட ஆரம்பித்தாள். கோலம் போடுவதில் ஆழ்ந்திருந்த குழலியை தாயாரின் பாசக்குரல் கலைத்தது. தாயை நாடிச் சென்ற குழலியிடம் தாயார் தேனீரை வழங்கியபடி அந்த இன்பச் செய்தியை தெரிவித்தாள். "குழலி நாம் வருகின்ற பத்தாம் திகதி இங்கிருந்து புறப்பட்டு மயூரன் வீட்டிற்குச் செல்ல வேண்டும். அங்கிருந்து பதினாறாம் திகதி புறப்பட்டு சென்னை செல்கின்றோம். இருபதாம் திகதி உனக்கு லண்டனுக்கு விமானம்." நேற்றுத்தான் மயூரனின் அப்பா இங்கு வந்து கூறினார் என்று சொன்னாள். இதைக் கேட்ட குழலியின் முகம் அந்தி வானம் போல் சிவந்தது. வெட்கத்துடன் அவ்விடத்தைவிட்டு அகன்றாள். மகிழ்ச்சித் துள்ளலுடன் செல்லும் மகளை கருணையுடன் நோக்கினாள் பொன்னம்மா. மயூரன் இவன் தான் பூங்குழலிக்கு பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை. குழலியின் மனத்திற்குப் பிடித்த காதலனும் கூட. அவனை நிச்சயித்த நாளில் இருந்து பூங்குழலி தினமும் கனவில் மயூரனுடன் கைகோர்த்து உல்லாசவானிலே பவனி வருவாள். அவர்கள் இருவரும் சேர்ந்து பல காதல் கீதங்களை இசைத்தனர்.

குழலி எதிர்பார்த்த அந்த இனிய நாளும் வந்தது. அதிகாலையிலேயே எழுந்த பூங்குழலி புத்தாடை அணிந்து சீவிச் சிங்காரித்து தன்னை அழகு படுத்தினாள். தந்தையுடனும் தாயுடனும் புறப்பட்டு அயல் கிராமத்தில் இருந்த மயூரன் வீட்டிற்குச் சென்றாள்.

நிச்சயிக்கப்பட்டபடி 15 ஆம் திகதி மயூரன் வீட்டிலிருந்து புறப்பட்டு இரு நாட்களில் சென்னையை அடைந்தனர். குறிப்பிட்ட நாளில் பிரயாண முகவர் ஒருவர் வந்து அவளை அழைத்துச் சென்றார். தாய் தந்தை உற்றார் உறவினர் நண்பர்கள் ஆகியோரை பிரியும் சோகம் ஒருபுறமாகவும் மயூரனிடம் செல்லப் போகின்றோம் என்ற மகிழ்ச்சி மறுபுறமாகவும் குழம்பிய நிலையிலே அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் விமானம் ஏறி லண்டனை நோக்கி விரைந்தாள்.

லண்டனிலே கிராய்டன் விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியது பேசுவதற்கு மொழியோ அல்லது பழகுவதற்கு தெரிந்த மனிதரோ இல்லாத அந்த அன்னிய தேசத்திலே குழலி காலடி எடுத்து வைத்தாள். அப்பொழுது அவள் சந்திரனை முதன்முதலில் சென்றடைந்த ஆம்ஸ்ரோங் இலும் பன்மடங்கு மகிழ்ச்சியை அடைந்தாள். மயூரனிற்கு குழலியின் புகைப்படமும் குழலிக்கு மயூரனின் புகைப்படமும் அனுப்பியதால் இருவரும் இலகுவாக அடையாளம் கண்டு கொண்டனர். பின் மயூரனின் காரில் இருவரும் மயூரனின் வீட்டிற்கு விரைந்தனர். அங்கு சென்று சிறிது நேரத்தில் இன்னுமொரு கார் வந்து போர்ட்டிக்கோவில் நின்றது. யாராயிருக்குமென எட்டிப்பார்த்த குழலி அசந்து விட்டாள் மிகவும் அழகான ஒரு வெள்ளைக்காரப் பெண் ஒருத்தி வந்து கொண்டிருந்தாள். முழங்கால் வரையான சட்டை ஒன்றுடன் சினிமா கதாநாயகி போல் தன் " பொப் "செய்யப்பட்ட கேசம் காற்றில் அசைந்தாட ஒய்யார நடையில் தங்கப் பதுமையாக வந்து கொண்டிருந்தாள். அவளைக் கண்ட மயூரனின் முகத்தில் ஆயிரம் வோல்ற் பல்ப் இன் பிரகாசம் தோன்றியது. வந்த அந்த அழகி அவனை அணைத்து அவன் அதரத்தில் முத்தமிட்டாள். இதனைப்பார்த்த குழலியின் முகத்தில் அதிர்ச்சி ரேகைகள் ஓடின. அழுகை பொங்கி வந்தது. இதைக் கவனித்த மயூரன் அவளை ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று அவளை சமாதானப் படுத்தும் வகையில் உருக்கமாகப் பல கதைகள் கூறினான். கடைசியாக " குழலி எமக்கு நாளைமறுதினம் திருமணம் இங்கு அருகில் உள்ள ஓர் முருகன் கோவிலில் தான் ஆடம்பரம் எதுவுமின்றி அமைதியாகவும் எளிமையாகவும் நடக்க ஏற்பாடு செய்துள்ளேன். உனக்கும் சம்மதம் தானே ?"எனக் கனிவுடன் கேட்டான். ஆனால் இது எதையுமே ஜீரணிக்கும் நிலையில் குழலி இருக்கவில்லை அவளின் மனம் முழுவதும் சற்றுமுன் மயூரனை அணைத்த அம்மங்கையின் மீதே இருந்தது. எனவே அவள் முகம் தெளிவுறாமல் இருந்தது. அவள் மயூரனிடமே " யார் அந்த அழகி ?"என வினாவினாள். இதனைக் கேட்ட மயூரன் பெரிதாக நகைத்தான். " குழலி அவளுடைய பெயர் லாரா அவள் இங்குள்ள ஒரு பெரிய மருத்துவமனையிலே தலைமை வைத்தியராக கடமை புரிகின்றாள். இவ்வீடும் அவளுடையதுதான். நான் கீழ்த்தளத்தை வாடகைக்கு எடுத்துள்ளேன். அவர்களின் கலாச்சாரம் வேறு , எங்களின் கலாச்சாரம் வேறு . அவர்களின் வழக்கப்படி அவர்கள் செய்யும் எத்தனையோ செயல்கள் உனக்கு அதிர்ச்சியாக இருக்கும் . ஆனால் நீ இதைப் போகப் போகப் பழகிவிடுவாய் " எனத் தேற்றி விட்டு அவ்விடத்தை விட்டகன்றான்

குறித்த திகதியில் திருமணமும் நடந்தேறியது. அவனது அலுவலகத்தை சேர்ந்த இரண்டு பேருடனேயே திருமணம் நடந்தது. இதைக்கண்ட குழலியின் மனம் பெரிதும் வேதனைப்பட்டது எளிமையாகக் கல்யாணம் என்றால் இப்படியா? ஏன் இவன் தன் வீட்டுக்காரியான லாராவைக் கூட அழைக்கவில்லை ? எனப் பலவாறாக யோசித்தாலும் திருமண சந்தோசத்தில் அவள் அதை எல்லாம் மறந்து விட்டாள். நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி இரு மாதங்கள் உருண்டோடி விட்டன. மயூரன் வேலைக்குச் செல்லும் பொழுது பாதுகாப்பு என்ற காரணத்தை காட்டி அவளை வீட்டிற்குள் வைத்துப் பூட்டி விட்டே செல்வான். அத்துடன் கீழ்த்தளத்தில் மட்டும் தான் இருக்க வேண்டும். தவறிக்கூட மாடிக்குச் செல்லக்கூடாது எனக் கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தான் ஆனால் அவன் நினைத்த நேரம் எல்லாம் மாடிக்குச் சென்று வந்தான். ஆனால் ஒன்றைச் செய்ய வேண்டாம் எனக் கூறும் பொழுது அச்செயலை செய்யும்படிதான் எண்ணம் தோன்றும்

இது மனித இயல்பு குழலியின் மனமும் மாடிக்கு சென்று பார்க்க வேண்டும் என எண்ணியது அன்று மயூரன் வேலைக்குச் சென்று விட்டான். ஒரேயடியாக வீட்டிற்குள் அடைபட்டிருப்பது குழலிக்கு போரடித்தது. இனி லாராவும் மயூரனும் மாலையே வீடு திரும்புவர். அதுவரை என்ன செய்யலாம் என யோசித்த குழலி இன்று மாடிக்கு சென்று பார்ப்போம் என நினைத்து மாடிக்குச் சென்றாள். முதலில் அவள் திறந்த அறை லாராவின் படுக்கையறை அது மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது சுவரிலே இரு படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன முதலில் இருந்த படம் தேம்ஸ் நதிக்கரையிலே இலண்டன் மாநகர் அமைந்திருந்த காட்சி மிக அற்புதமாக இருந்தது. அடுத்த படத்தை பார்த்த குழலி அதிர்ச்சியில் உறைந்துவிட்டாள் அப்படத்தில் மயூரனும் லாராவும் திருமணக் கோலத்திலே சிரித்தபடி காட்சி அளித்தனர். இவ்வதிர்ச்சியை தாங்கிக்கொண்டு அடுத்த அறைக்கு சென்றாள். அங்கே மேசையிலே இரண்டு அல்பங்கள் இருந்தன. அவற்றை எடுத்துப் பார்த்த குழலி மயங்கிச் சாய்ந்து விட்டாள். ஆம் அது அவளது ஆசை கணவன் மயூரனதும் லாராவினதும் திருமணப் படங்கள் சுமார் அரைமணி நேரத்தின் பின் எழும்பிய குழலி இருந்த மாதிரி எல்லாவற்றையும் வைத்துவிட்டு கீழே சென்றாள்.

மாலை, வேலையால் வந்த மயூரனிடம் இதைப்பற்றிக் கேட்டாள் குழலி இதைக் கேட்ட மயூரனின் முகம் கறுத்தது. என்ன செய்கிறோம் எனத் தெரியாமல் பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஒன்றால் அவளிற்கு சூடு போட்டான் வலியால் துடித்த அவளிடம் "நான் அவளை எப்பொழுதோ திருமணம் செய்து விட்டேன் ஆனால் பெற்றோரிடம் பயம் காரணமாக இதைத் தெரிவிக்கவில்லை நீ இனி வீட்டிற்கு கடிதம் போட வேண்டாம் லாராவிடம் உன்னை என் வேலைக்காரியாகவே அறிமுகம் செய்துள்ளேன். இதை எல்லாம் மீறி நீ நடக்கத் தொடங்கினால் நீ உயிருடன் இருக்க மாட்டாய்". எனக் கூறிவிட்டு சென்றுவிட்டான். இதைக் கேட்ட குழலியை அதிர்ச்சி ஆட்கொண்டது. இப்படியாக மேலும் ஒரு மாதம் சென்றது. ஒருநாள் லாராவும் மயூரனும் கடைவீதிக்குச் செல்லப் புறப்பட்டனர் லாராவின் வற்புறுத்தலின் பேரில் குழலியும் அவர்களுடன் சென்றாள். செல்லும் பொழுது தான் எப்பொழுதோ எடுத்து வைத்திருந்த பெற்றோரின் விலாசத்தையும் மாமனார் வீட்டு விலாசத்தையும் எடுத்துச் சென்றாள். கடை வீதியிலே மயூரனும் லாராவும் மகிழ்ச்சியுடன் இருந்த சமயம் வீதியின் எதிர்ப்புறம் சென்றாள். அங்கு தமிழ்ப் பெண் போலக் காணப்பட்ட ஒரு அம்மாளின் கைகளிலே அவ்விலாசங்களைத் திணித்து தனக்குத் தெரிந்த ஒரேயொரு ஆங்கில வார்த்தையான ஹெல்ப் என்பதைக் கூறிக் கொண்டு அவளின் காலிலேயே விழுந்து விட்டாள். அப்பொழுது தன்னருகிலே குழலியைக் காணாத மயூரன் வெளியே வந்து பார்த்தான். எதிர்ப்புறத்தில் ஓர் அம்மாள் அவளை தூக்கிவிடுவதைக் கண்ட மயூரன் சந்தேகத்துடன் அங்கே சென்றான். அவன் வருவதைக் கண்ட குழலியின் முகம் மாறியது. இதனைக் கவனித்த அந்த அம்மாள் இவனால்தான் இப்பெண்ணிற்கு ஏதோ ஆபத்து என எண்ணி ஒன்றுமில்லை என்னில் மோதி விழுந்து விட்டாள் என ஆங்கிலத்தில் கூறினாள். அதனைக் கேட்ட மயூரன் ஓரளவு சமாதானம் அடைந்து அவளையும் லாராவையும் அழைத்துச் சென்றான். அந்த அம்மாள் குழலி கொடுத்த இரு விலாசத்திற்கும் அவசர தந்தி ஒன்று மூலம் தகவல் அனுப்பினார். கடிதங்களைப் பார்த்த அவ்விரு குடும்பமும் கலந்தாலோசித்து யூரோபோல் அமைப்புடன் தொடர்பு கொண்டனர். அவர்களும் லாராவிடம் சென்று விடயத்தைக் கூறினார்கள். அதைக் கேட்ட லாரா அதிர்ச்சியும் கோபமும் ஒருங்கே வரப் பெற்றவளாக சென்னையில் மயூரன் வீட்டுடன் தொடர்பு கொண்டாள். உண்மையை அறிந்த மயூரனின் பெற்றோர் குழலியை கவனமாக அழைத்து வரும்படி லாராவிடம் கூறினார்கள். அவர்களிற்கு வாக்களித்து விட்டு லாரா நீதிமன்றத்தில் தன்னையும் குழலியையும் மயூரன் ஏமாற்றி விட்டதாக வழக்குத் தொடுத்தாள்

சந்தர்ப்ப சாட்சியங்கள் யாவும் மயூரனிற்கு எதிராக அமைந்ததினால் அவனிற்கு குழலியின் மீது ஆத்திரம் வந்தது வீட்டிற்கு வந்தவன் குழலியைக் கதிரை ஒன்றுடன் கட்டிவிட்டு பெற்றோலை எடுத்து அவளைக் குளிப்பாட்டினான். இதனால் கலவரமடைந்த குழலி தயவு செய்து என்னைக் கொல்லாதீர்கள் . இப்பொழுது நான் உங்கள் பிள்ளையையும் வயிற்றில் சுமக்கிறேன் எனக் கதறி அழுதாள். இதைக் கேட்ட மயூரன் தாமதித்தான். அப்பொழுது வீட்டிற்கு வந்த லாரா வீடு பூட்டி இருப்பதையும் பெற்றோல் வாசனை வருவதையும் உணர்ந்து ஏதோ விபரீதம் நடக்கப் போகின்றது என எண்ணி உடனடியாக பொலிஸ் இற்கு அறிவித்தாள். அங்கு விரைந்த பொலிஸ் வீட்டைச் சுற்றி வளைத்து மாடியினூடாக உள்ளே புகுந்து சத்தமெதுவுமின்றி மயூரனும் குழலியும் இருந்த அறையை அடைந்தார்கள் அங்கு மனம் மாறி திரும்பவும் அவளைக் கொலை செய்ய எண்ணிய மயூரனைக் கைது செய்தனர். லாரா குழலியின் விருப்பப்படி அவளின் கருவைக் கலைத்தாள் பின் தன சொத்துக்களை எல்லாம் விற்று விட்டு குழலியுடன் இந்தியா திரும்பினாள் . அங்கு ஒரு மருத்துவ மனையை நிறுவினாள் .குழலியின் பெற்றோரிடமும் மயூரனின் பெற்றோரிடமும் நடந்ததைக்கூறி மயூரனிற்கு ஏழு வருட சிறைத்தண்டனை கிடைத்ததையும் கூறினாள். இருவரின் பெற்றோரும் தம் பிள்ளைகளின் நிலையை எண்ணி கதறி அழுதனர் .குழலியும் படிப்பறிவு இல்லாமையால் தானே தனது ஆசைகள் கனவுகள் கற்பனைகள் சிதைந்து இந்த நிலையை அடைந்தேன் என நினைத்து தொடர்ந்து படிக்கத் தொடங்கினாள் .அவளின் எண்ணத்தை அறிந்த லாரா அவளின் படிப்பிற்கு உதவினாள். தனக்கு நேர்ந்த இந்த நிலை வேறு எந்தப் பெண்ணிற்கும் ஏற்படக் கூடாதெனக் கருதி குழலி தன் கதையை ஓர் பத்திரிகைக்கு தொடராக எழுதினாள் . இப்பொழுது அவள் லாராவின் மருத்துவமனையிலே ஓர் தாதியாக கடமையாற்றுகின்றாள் அவளின் வாழ்க்கை அமைதியான நதியில் செல்லும் ஓடம் போல செல்கிறது.

செல்வி .யோ. ஆர்த்தி
( 2001 வர்த்தகம் )

---

உங்கள் நண்பர்களுக்கிடையில் விரோதமும் சண்டையும் மூண்டால் இவைகளை அதிகப்படுத்த முயலாதீர்கள் பிரியத்தோடும் அனுதாபத்தோடும் பழையபடி அவர்கள் நண்பர்களாயிருக்கச் செய்யவே முயலுங்கள்.

— — சாயி பாபா

நம்மில் யாருடனாவது ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டு உறவு முறிந்திருந்தால் மூன்று தினங்களுக்குள்ளாக பேச்சை ஆரம்பித்து விடவேண்டும்

— — நபிகள் நாயகம்

கெட்ட கனி தரும் நல்ல மரம் இல்லை, நல்ல கனி தரும் கெட்ட மரம் இல்லை . ஒவ்வொரு மரத்தையும் அறிவது அதனதன் கனியாலே .

— — யேசுநாதர்

# பெண்ணே — செயற்படு — விழித்தெழு

பெண்ணே ! புதுமைப் பெண்ணே !
அடிமை விலங்கை அறிந்திட விழித்தெழு !
பெண்ணென்றால் என்ன கிள்ளுக் கீரையா ?
உடைத்தெறி விலங்கை விழித்தெழு
மனைவியும் நீயே மகளும் நீயே
தாயும் நீயே தரணிக்கு உணர்த்து
அடக்கமும் ஒழுக்கமும் கடைச்சரக்காச்சு
சீதனம் இன்று சிறப்பணி ஆச்சு
யாரிடம் சொல்லுவது சிந்தித்துபார் நீ
பெண்ணிடம் பிறந்ததை பெண்ணுக்கே கொடுக்க
சீதனம் கேட்கும் ஆண்களே வெட்கம்
பெண்பிள்ளை பிறந்தால் போச்சு என்று
பெண்ணை அடக்கிய காலமும் போச்சு
பெண்ணே நீ நிமிர்ந்து நடைபோடு
பின்னே திரும்பாது புறப்பட்டு போராடு
பட்டங்கள் பல பெற்று பாரில்
பார்போற்றப் புகழோடு வாழ
கை கட்டிச் சேவகம் செய்ய
உலகே கண்முன்னே வந்திடும் பாரு
சீதனமும் இல்லை திருமணமும் வேண்டாம்
ஆண்களின் சகவாசம் வேண்டவே வேண்டாம்
பிள்ளையும் வேண்டாம் குட்டியும் வேண்டாம்
ஆர்ப்பரித் தெழுவோம் அலையாய் திரள்வோம்
மாதர்கள் சேர்ந்து மகாநாடு கூட்டி
பெண்ணியம் பேசி கண்ணியம் காப்போம்
சீனாவில் கூட்டம் ரஷ்யாவில் கூட்டம்
ஒன்றும் விடாமல் முழங்குவோம் நாங்கள்
சட்டங்கள் போட்டோம் திட்டங்கள் தீட்டினோம்
ஆகா ஆகா அருமைத் திட்டம்
செய்திட்ட ஆவணம் கையிலே வந்தது
பெண்ணியம் வாழ்க ! பெண்மையும் வாழ்க !
கூட்டம் முடிந்து குழுவாய் வந்து
சேர்ந்தே நுழைந்தனர் சேலைக்கடைக்கு
என்றை அவருக்கு இது நல்ல சேட்டு
உன்றை அவருக்கு உது நல்ல சேட்டு
என்னது என்னது இது என்ன பேச்சு
பெண்ணே உன் புத்தி பின் புத்திதானா
மாறாது மாறாது உன் புத்தி மாறாது
சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தம் இல்லை
உன்னுடைய புத்தியை மாற்ற முடியாது
என்றாலும் நான் சொல்கிறேன்
விழித்தெழு பெண்ணே விழித்தெழு

சோ. ஜனார்த்தன்
(2001 கலை)

# மின் (ELECTRICITY)

அம்பரைத் ( Amber ) தேய்த்தால் , அது சிறிய நூலிழைத் துண்டுகளையும் , அதைப் போன்ற கனமில்லாத சிறிய பொருள்களையும் தன்னிடம் இழுக்கும் சக்தி அடைகின்றது என்பதை இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னரே மக்கள் கண்டறிந்தனர். இச்சக்திக்கு மின்சார சக்தி என்ற பெயர் வழங்கப்பட்டது. இதே காலத்தில் ஆசியா மைனர் என்ற நாட்டில் உள்ள " மாக்னீஷியா " என்னும் இடத்தில் சில கற்கள் ஆக்கப்பட்டன. அவைகளுக்கு இரும்புத்தூளை இழுத்துக்கொள்ளும் இயல்பு உண்டு என்பதனை அறிந்த பின்னர் அக் கற்களுக்கு " மாக்னடிக் " என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது. இக் கற்களை ஒரு நூலில் கட்டித் தொங்கவிட்டால் அவை வடக்குத் தெற்காக திரும்பி நிற்க முயலுகின்றன என்பதனை இக் கற்கள் கண்டுபிடிக்கப்பட்டு பல ஆண்டுகளுக்கு பின்னரே மக்கள் கண்டுபிடித்தனர். இவற்றின் உதவியால் மாலுமிகள் நடுக்கடலில் திசையை அறிந்து பயணம் செல்வது சாத்தியமானது. இவ் இரண்டு செயற்பாடுகளுமே தற்கால மின்சாரவியலில் ஏற்பட்டிருக்கும் பாரிய மாற்றத்திற்கு அடிப்படைக் காரணிகளாக திகழ்ந்துள்ளன என்பதனை விஞ்ஞானிகள் ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடித்தனர்.

இவை தவிர கண்ணாடித்துண்டு போன்ற பலவிதமான பொருட்களுக்கும் இவ்விதமான இயல்பு உண்டு என்பதனை கில்பார்ட் என்பவர் பதினாறாம் நூற்றாண்டளவில் கண்டார். இவர் மின்சாரத்தின் குணங்களை அறிந்து முதன் முதலில் வெளியிட்டதனால் இவர் மின்சாரத்தின் தந்தை என்று கருதப்பட்டார். முதன் முதலில் புவியின் காந்த இயல்பை நிரூபித்துக் காட்டியவரும் இவர் ஆவார்.

அம்பர் , கண்ணாடி இவைகளுக்கு பதிலாக கம்பளியில் தேய்க்கப்பட்ட ஊற்றுப் பேனாவையும் காகிதத்தையும் கிட்ட கொண்டு சென்றால் அவை ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்ளும் தன்மையை கண்டறிந்த பின்னர் இவற்றை மின் சுமை ஏற்றனவாக கூறப்பட்டது . இங்கு மின்சாரம் ஓடாமல் ஓரிடத்தில் தேங்கி நிற்கின்றது. இம் மின்சாரத்தை நிலை மின்சாரம் என்று கூறுவார்கள். எபனைட் அம்பர் , கண்ணாடி குச்சி போன்றவற்றை தக்க பொருட்களோடு தேய்ப்பதால் நமக்கு குறைந்தளவு மின்சாரமே கிடைக்கும். அதிகளவான மின்சாரத்தை உண்டாக்க மேற்கொண்ட சாதனமே மின் சுமை இயந்திரம் (electrical machine ) எனப்படும் இதனை " ஓட்டோ வான் கெரிக் " என்பவர் முதன் முதலில் கண்டுபிடித்தார் . இதன் பின்னர் மின் சுமை ஏற்றிய வஸ்துக்களின் மேற்பரப்பில் மட்டும் தான் மின்சாரம் தங்கியிருக்கின்றது என்றும் உலோகங்களை கூடத் தோல் முதலியவற்றில் தேய்ப்பதால் மின் சுமை ஏற்றக்கூடும் என்றும் ஹக்ஸ்பீ என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார் உலோகங்களின் மூலமாக மின்சாரம் பாய்ந்து செல்கின்றது என்பதை முதன் முதலாக கண்டு பிடித்தவர் " ஸ்டீபன் கிரே " என்பவராவர் , இவர் பல உலோகக் குச்சிகளை எடுத்துக் கொண்டு ஒன்றை ஒன்று தொடுமாறு நீள் வட்டத்தில் வைத்து மின் தேய்க்கப்பட்ட கண்ணாடி ஒன்றை வரிசையின் முதலில் உள்ள குச்சியை தொடச் செய்து கடைசி வரையில் மின் சக்தி பாய்ந்து வருவதை காண்பார். இதிலிருந்து மின்சாரமானது சிலவற்றில் மட்டும்தான் பாய்ந்து செல்கின்றது என்பதனைக் கண்டார்.

இதே காலத்தில் பிரான்ஸ் தேசத்தில் வசித்து வந்த டியூபே என்ற விஞ்ஞானியும் இங்கிலாந்து தேசத்துக் காவண்டிஸ் என்ற விஞ்ஞானியும் மின்சாரத்தில் அதிமின்சாரம் குறை மின்சாரம் என உண்டென்று கண்டறிந்தார்கள் ஊடகத்தினால் மின் சுமை ஏற்றக்கூடும் என்று ஸ்டீபன் கிரே என்பவர் கண்டுபிடித்த முடிவைக் கொண்டு லெய்டன் வாரி என்ற பெயர் போன கருவி இயற்றப்பட்டது.

இவ்வியந்திரம் ஒரு டச்சுக் காரரால் இயற்றப்பட்டதால் அந்தப் பெயரால் வழங்கி வருகின்றது இத்தாலி தேசத்து கால்வனி என்ற விஞ்ஞானி 1791 ஆம் ஆண்டு ஓர் அதிசய சம்பவத்தை கண்டறிந்தார். மின் சுமை இயந்திரத்திற்கு சமீபமாக தவளை ஒன்றை கத்தியினால் அறுத்து பரிசோதனை செய்யும் போது கத்தியானது தவளையின் நரம்பினைத் தீண்ட அதன் நரம்புகள் விம்மி விம்மி குதித்ததைக் கண்டார். மின் சுமை இயந்திரத்தை சுழற்றி பொறி உண்டாக்கியதனால் தான் தவளையின் தசைகளில் இசைவு ஏற்பட்டதை அறிந்தார். இந்த இசைவிற்கு காரணம் மின் என்பதனை உணர்ந்தார். இதனால் அக்கருவிக்கு கால்வனி கருவி என்ற பெயர் வழங்கப்பட்டது. இதன் பின்னர் வோல்டா என்ற விஞ்ஞானி ஒரு செப்புத்தகட்டையும் நாகத்தகட்டையும் உப்புத்தண்ணீரில் வைத்து உலோகத்தகடுகளை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் போது அதில் மின் பாய்வதைக் கண்டார். இவ்வாறு செய்யப்பட்டகலம் வோல்ற்றா கலம் எனப்பட்டது. இதன் பின்னர் இருபது வருடங்களின் பின்னர் வோல்ற்றா கலத்துடன் தொடுக்கப்பட்ட தண்டலத்தின் ஒரு பாகத்தை திசை காட்டிக்கு மேலால் கொண்டு செல்ல அது விலகுவதை அவதானித்தார். பின்னர் எதிர்ப்பக்கமாக கொண்டு செல்லும் போதும் அது எதிர்ப்பக்கமாக விலகுவதை கண்டனர். இதன் மூலம் வோல்ற்றா கலத்தில் மின் பாயும் போது சமீபத்தில் ஓர் காந்தபுலம் உண்டாகின்றது என்பதனை ஞர்ஸ் டெட் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார். இதன் பின்னர் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த அம்பியர் என்ற விஞ்ஞானி மின்னிற்கும் காந்தபுலத்திற்கும் இடையே உள்ள தொடர்பை விரைவாக எடுத்துக் காட்டினர். இதற்கு அம்பியர் விதி என்று பெயர் வழங்கப்பட்டது. மின்னை அளப்பதற்கு உபயோகிக்கப்படும் அலகும் அவர் பெயரால் வழங்கப்பட்டது.

மின்சாரமானது ஓர் உயர்ந்த இடத்தில் இருந்து தாழ்ந்த இடத்திற்கு தான் பாயும் என்றும் மின்னிற்கும் நிலை வேறுபாட்டிற்கும் உள்ள தொடர்பு போன்றவற்றை ஜேர்மனியை சேர்ந்த ஓம் என்ற விஞ்ஞானி கண்டறிந்து ஓர் விதியை முன்வைத்தார். இது ஓமின் விதி என அழைக்கப்படுகின்றது. இவருடைய பெயரோ அலகாக் கொண்டு மின் கடத்திகளின் தடை அளக்கப்படுகின்றது. நம்முடைய வாழ்க்கையில் பெரிதும் உபயோகிக்கப்பட்டு வரும் மின்குமிழ் , மின் விசிறி , வானொலி போன்றவற்றை நிறுவுவதற்கு மைக்கோல் பரடே என்ற விஞ்ஞானியே அடிக்கல்லாக அமைத்துள்ளார் என்பதனை அந்தக் காலத்தில் சிலரே அறிந்தனர். அந்தக் காலத்தில் பிரசித்தி பெற்ற ஸர் ஹம்பிரேடேவி என்ற ஆராய்ச்சியாளர் இவரை தனது ஆராய்ச்சிச் சாலையில் ஒரு வேலையில் அமர்த்திக் கொண்டார். அன்று முதல் இவர் மின்சாரம் சம்மந்தமான ஆராய்ச்சிகளை செய்யத் தொடங்கினார். இவர் முதலில் ஒரு சிறிய மென்னிரும்பை எடுத்து அதன் மேல் இரண்டு கம்பிச் சுருள்களை ஒன்றுக்கொன்று எதிரான திசையில் சுற்றினார். ஒரு முனையில் மின் கலத்தையும் மற்றைய முனையில் கல்வனோ மீற்றரையும் இணைத்தார். அப்போது கல்வனோ மீற்றரின் முள் ஓர் திசையில் அசைவதையும் மின்னைத்துண்டிக்கும் போது கலவனோ மீற்றரின் முள் எதிர்த்திசையில் அசைவதையும் அவதானித்த இவர் மின் ஓடும்போது காந்த புலம் ஏற்படும் அதே போல் காந்தபுலத்தைக் கொண்டு மின்னைப் பிறப்பிக்கலாம் என்ற முடிவை முன் வைத்தார். இந்த முடிவு தான் தற்போது மின் சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

மைக்கல் பரடே மிகவும் சொல்வன்மை உடையவர் இவர் இரசாயன பௌதீக சம்மந்தமான பல விடயங்களை பொதுக்கூட்டங்களில் பலரும் அறியும் படியாக பேசுவார். இவரே முதன் முதலில் மின்னின் இரசாயன விதிகளையும் எடுத்துக்கூறினார். இதன் விளைவாகத்தான் மின்சாரப் பூச்சுக்கள் உலோகங்களை சுத்தப்படுத்துதல் உலோகங்களை தாதுப்பொருட்களில் இருந்து பிரித்து எடுத்தல் போன்றன. மின்னின் இரசாயன விதிகளை பயன்படுத்தியே செய்யப்பட்டது. இவரைத் தொடர்ந்து வந்த ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல் என்பவர் பதினைந்து வயதிலேயே கணித பௌதீக சம்மந்தமான ஆராய்ச்சிகளை

செய்து மின் காந்த அலைகளும் உண்டு என்பதனை எடுத்துக்காட்டினார். இவ்வகையானது ஒளியின் அலை வேகத்தோடு செல்லும் என்பதனையும் பரிசோதனை ரீதியாக செய்து நிருபித்தார். இத்தாலி நாட்டு தீர்க்கதரிசியான மார்க்கோணி என்ற விஞ்ஞானியும் இந்திய நாட்டு விஞ்ஞானியான ஜகதீச சந்திரபோஸும் இவ் அலைகளைக் கொண்டு அயல் நாடுகளுக்கு செய்திகள் அனுப்பக்கூடும் என்று காண்பித்தார்கள். இதன் விளைவாக தற்போது தொலைபேசி , வானொலி, தொலைக்காட்சி போன்ற கருவிகள் நம்மிடையே இயங்குகின்றது. இவ் மின் காந்த அலையைக் கொண்டு தற்போது உலகில் பெரும் பாரிய மாற்றங்கள் நடைபெறுகின்றன. மிகச்சிறிய அணுவை உடைத்து பாரிய அளவிலான சக்தியை பெறுவதற்கும் மின் காந்த அலையே பயன்படுகின்றது.

இவ்வாறாக இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கண்டு பிடித்த அடிப்படை இலத்திரனியல் துணிக்கைகளைக் கொண்டு தற்காலத்தில் மனிதனுக்கு மிகவும் பயன்படக்கூடிய வகையில் பல விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட பல தொழில்நுட்ப பொருட்கள் இன்று நம்மிடையே பழக்கத்தில் உள்ளது. இது தவிரபல கண்டுபிடிப்புகள் வானியல் ஆராயச்சிகள் போன்றவற்றிற்கு மின்சாரமானது அடிப்படைக்காரணமாய் திகழ்கின்றது என்பதனை எவராலும் மறுக்கமுடியாத ஒன்றாக இன்றைய நூற்றாண்டில் திகழ்ந்துகொண்டிருக்கின்றது.

க. பிரதீப்
( 2000 கணிதம் )

---


ஏணி சிறப்புற வாழ்த்துகிறது

**ஜீவா பல்பொருள் வாணிபம்**

பருத்தித்துறை வீதி நெல்லியடி

சகலவிதமான பொருட்களையும் மலிவாகவும் தரமாகவும்
உடனே பெற்றுக் கொள்ள சிறந்த பலசரக்கு மாளிகை

**ஜீவா ! ஜீவா ! ஜீவா!**

வாடிக்கையாளரின் தேவைகளை இன்முகத்துடன் பூர்த்தி செய்து
அவர்களை மீண்டும் மீண்டும் தன்னிடம் அழைக்கும்
ஒரேஒரு பல்பொருள் வாணிபம் அதுதான்

**ஜீவா பல்பொருள் வாணிபம்**

மற்றும்

**SUPPER MARKET**

பருத்தித்துறை வீதி நெல்லியடி

# கருங்குஷ்டம் (தொழுநோய்)
# LEPROSY

வீ.க.நிருபன்.
( 2000 – உயிரியல் )

இன்று உலகில் காணப்படுகின்ற மிகவும் கடுமையாக ஊனப்படுத்தக்கூடிய நோய்களுள் தொழுநோயும் ஒன்றாகும். ஆசியாவினதும் ஆபிரிக்காவினதும் அயன மண்டலப் பிரதேசங்கள், தெற்கு ஐரோப்பா, தூர கிழக்கு மத்திய மற்றும் தென் அமெரிக்கா, சில பசுபிக் தீவுகள் போன்ற பகுதிகளில் இந்நோய் பரவலாகக் காணப்படுகிறது. இன்று உலகெங்கும் சுமார் 20 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

Mycobocierium Leprce எனப்படும் கோலுருவான (பசிலசு வகை) பக்றீரிய இனமே இந்நோயை உருவாக்குகின்றது இவ்வினம் மிக மெதுவாகவே இனத்தைப் பெருக்குகின்றது. இதனை செயற்கையான வளர்ப்பூடகங்களில் வளர்க்க முடியாது. Armodillo என்ற விலங்கின் உடலிலும் மாத்திரம் இது வளரும். தொழுநோயாளிகள் தும்மும் போது வெளிவரும் சிறுதுளிகளின் மூலமே நோய்க்காரணி பரவுகின்றது. எனினும் இந்த பக்றீரியா, சுவாசம் மூலம் தொற்றுகின்றதா அல்லது தோலினூடாக உட்செல்கின்றதா என்பது சரியாகத் தெரியவில்லை. நோயரும்பு காலம் 2 முதல் 5 வருடங்களாகும்.

இந்த பக்றீரியா மனிதனின் சுற்றயல் நரம்புகளையும் தோல், மேற்சுவாசப் பாதையின் சீதப்படைகள் என்பவற்றையுமே தாக்குகின்றன Myco-Leprae பக்றீரியாவிற்கு ஒருவரின் உடல்காட்டும் எதிர்ப்பின் அளவைப் பொறுத்தே உண்டாகும் நோயின் தன்மை தங்கியிருக்கின்றது. பெரும்பாலானவர்களில் ஆரம்பத்தில் ஏற்படும் தொற்று குறுகிய காலத்திற்கே இருக்கும். அத்தோடு தானாகவே குணமாகி விடும். அவ்வாறு குணமாகாத பட்சத்தில் மாத்திரமே தொழுநோய் விருத்தியடைகின்றது.

உடல் காட்டும் எதிர்ப்புச் சக்தியைப் பொறுத்து இரு பிரதான வகைகளாக நோய் விருத்தியடையலாம். இவற்றுள் ஒன்றின் தன்மை கசநோயின் இயல்புகளை ஒத்திருப்பதால் அது Tuberculoid Leprosy எனப்படும் அடுத்த வகை Lepromatus Leprosy என அழைக்கப்படுகின்றது.

Tuberculoid வகை நோயில் தோலிலும் வெளிப்புறமாக உள்ள நரம்புகளிலும் சிறிய அளவிலான சேதம் ஏற்படும். இதன் விளைவாகத் தோலில் இடையிடையே தடிப்புக்கள் தோன்றும். இத்தடிப்புகளின் எல்லைகள் நன்கு முனைப்பாகத் தெரிவதோடு மேற்பரப்பு உலர்ந்து செதில் கொண்டது போல் இருக்கும். கடுமையான தோல உடையவர்களில் இத்தடிப்புகள் இளநிறமானவையாகவும் வெளிறிய தோல் உள்ளவர்களில் செங்கபில நிறமானவையாகவும் தென்படும். இவ்வாறான தடிப்புகள் உள்ள தோலின் பகுதி உணர்திறன் அற்றதாகிவிடுவது குறிப்பிடத்தக்கது. அவ்விடத்தில் ஓர் ஊசியால் மெதுவாகக் குற்றிப் பார்த்தால் நோவை உணர முடியாமல் இருக்கும். முகத்தில் ஏற்படும் தடிப்புக்களில் ஓரளவு உணர்திறன் காணப்படும். நரம்புமுனைகள் சிதைவடைவதனாலேயே உணர்திறனில் பாதிப்பு ஏற்படுகின்றது.

இத்தடிப்புகள் தோலின் எந்த இடத்திலும் எந்தப் பருவனிலும் தோன்றலாம். எனினும் குறிப்பாக கைகள், கால்கள் ஆசனப்பகுதி என்பவற்றில் இவற்றைக் காண முடியும்.

Tuberculoid வகைத் தொழுநோய் மிக மெதுவாகக் குணமடைந்து விடும் இதன் காரணமாக உடல் ஊனமுறுவது மிக அரிதாகவே நிகழ்கின்றது. அத்தோடு இந்தவகை நோய் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு தொற்றுவதும் இல்லை.

Lepromatous வகை நோயே மிக ஆபத்தானதாகும். இந்தவகையிலும் தோலில் சிறு தடிப்புக்கள் ஏற்படுவதுண்டு. எனினும் இவை பருமனில் சிறியனவாகவும் உடலெங்கும் பரவியும் காணப்படும். இவற்றின் பரம்பலில் சமச்சீர்த்தன்மை காணப்படும். உதாரணமாக வலது கையில் ஓரிடத்தில் தடிப்பு ஏற்பட்டால் இடதுகையிலும் அதே இடத்தில் ஏற்படும். இத்தடிப்புகளின் எல்லைகள் தெளிவாகப் புலப்படமாட்டா. நோய் முற்றும் போது இப்பகுதிகள் சீழ் கட்டி சிதைவுறத் தொடங்கும். குறிப்பாக முகத்திலும் காதுகளிலும் இவ்வாறான சிதைவுகள் உருவாகும். கண் புருவ மயிர்கள் முற்றாக இல்லாமற் போகும். இந்த வகை தொழுநோயினால் பாதிக்கப்பட்ட சிலரின் காதுச்சோணைகள் தடிப்பாவதோடு சமச்சீர்க் கோலத்தில் தோல் தடிப்படையலாம்.

காலஞ் செல்லச் செல்ல நரம்பு முனைகள் சிதைவடைவதனால் உணர்திறன் இன்மை விருத்தியடையும். முதலில் முன்னங்கைகளும் காலின் கீழ்ப்பகுதியும் உணர்வற்றுப்போகும். அப்பகுதிகளில் வியர்வையும் உருவாகாது. உடலெங்கும் இந்நிலை பரவும். நரம்புச்சிதைவு காரணமாகத் தசைகளும் நலிவடையும். மூக்கு, வாய், வாதனாளி என்பன புண்ணாகும். கண்களும் சேதமடையும். கசியிழையங்களிலும் எலும்புகளிலும் இழையங்கள் இங்கத் தொடங்குவதனால் விரல்கள், மூக்கு, வாய்க்குழி என்பன சிதைவடைந்து உருக்குலைந்து போகும். மேற்றாடையிலுள்ள வெட்டுப் பற்கள் விழுந்து விடும். ஆண்களில் விதைகள் முற்றாக சேதமடையும். வைத்திய உதவியை பெற்றுக் கொள்ளத் தவறினால் நோயாளி மிகவும் பரிதாபகரமான நிலைக்கு ஆளாகி விடுவார்.

ஆரம்பப் பருவத்திலேயே நோயை இனங்கண்டு கொள்வதன் மூலம் அதனை விரைவில் குணமாக்கிக் கொள்ள முடியும். மேற்குறிப்பிட்டவாறான மாற்றங்கள் தோலில் ஏற்படும் போது வைத்திய உதவியை நாடுவதே மிகச் சிறந்த வழியாகும். பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து பெறப்பட்ட இழையங்களின் Mycobacterium leprae ஐ இனங்கண்டு கொள்வதன் மூலம் தொழுநோயைக் கண்டு பிடிக்கும் வசதிகள் இருக்கின்றன. Lepromin என்னும் சோதனையைப் பயன்படுத்தித் தொழுநோய் வகைகளை வேறுபிரித்தறிய முடியும்.

தொழுநோயைக் கட்டுப்படுத்தக்கூடிய Dapsone, Rifompicin, Clofazimine போன்ற வலிமையான மருந்துகள் இப்போது பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை வைத்திய ஆலோசனைப்படி ஒழுங்காகப் பயன்படுத்துவதன் மூலம் நோயைக் குணமாக்கிக் கொள்ள முடியும். எனினும் சேதமடைந்த நரம்புகளை பழைய நிலைக்குக் கொண்டு வருவது அசாத்தியமானது.

தொழுநோய் தொற்றாமல் தடுப்பதற்கு மருந்துகள் இல்லை, எனினும் காச நோய் வராமல் தடுப்பதற்காகக் கொடுக்கப்படும் BCG இந்நோயைத் தடுப்பதற்கு ஓரளவு உதவுகின்றது. இளஞ் சந்ததியினரை சோதனையிடுவதற்கான செயற் திட்டங்கள் மூலம் தொழுநோயாளர்களை ஆரம்ப நிலையிலேயே இனங்கண்டு வைத்தியம் செய்ய வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே இவ்வாறான சோதனை முயற்சிகள் நடைபெறும்போது முழுஅளவிலான ஒத்துழைப்பு வழங்குவது எமது கடமை ஆகும். ஒரு பிரதேசத்தின் சமூக ,பொருளாதார நிலைமைகள் விருத்தியடையும் போது தொழுநோய் ஆபத்தும் குறைந்து விடுகின்றது.

தொழுநோய் பற்றி சமூகங்களில் காணப்படும் அருவருப்பு மனப்பான்மை காரணமாக தொழு நோயாளர் வெறுத்து ஒதுக்கப்பட்டு வந்துள்ளனர். இந்நிலை எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது. இந்த மனப்பாங்கை மாற்றியமைப்பதற்கு பல முயற்சிகள் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு படியாக இந்நோயின் பெயர் Hansen's Disease என மாற்றப்பட்டுள்ளது. நோர்வே நாட்டு வைத்தியரான Gerhard Henrik A,Hansen என்பவரே 1874 ஆம் ஆண்டு தொழுநோயை உருவாக்கும் பக்ரீரியாவை கண்டு பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சைவசித்தாந்தம்

## ஆராயும் பசு

பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் பற்றிய ஆய்வில் சித்தாந்திகள் பதி பற்றி ஆராய்ந்த ஆராய்வுகளை அடுத்து பசு பற்றிய ஆய்வுக்கு முக்கியத்துவம் வழங்கி இருக்கக் காண்கின்றோம். சித்தாந்திகள் ஆன்மாவையே பசு என்னும் பெயர் கொண்டு அழைத்தனர். ஆன்மாக்கள் பற்றியதாக ஆராய்ந்த ஆய்வுகளில் பசுவின் நித்தியத்தன்மை வேறுபாடும் அதற்குரிய இலக்கணம் அதன் இலட்சியம் இலட்சியத்தை அடைவதற்கான வழிமுறைகள் அவற்றின் சிறப்புக்கள் என்பன ஆராயப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். பசுவை முக்கியப்படுத்த எழுந்த சித்தாந்திகள் பலஉவமைகளை முன்வைத்து பல உதாரணங்களோடு அதன் நித்தியத்தன்மையை எடுத்துத்தர முற்படுகின்றனர். இதற்கு சிவஞானபோத ஆசிரியர் "உளது இலது என்றலின் எனதுடல் என்றலின்" என்ற சூத்திர மூலம் எனது உடல் என்பது சரீரத்தின் முழுப்பகுதியையும் கொண்டதாகவே விளங்குகின்றது. எனவே எனது என்னும் சொல்லானது எதனைக்குறிக்கின்றதோ அதுவே ஆன்மா என உண்மைப்படுத்தப்படுகின்றது. இதே போல எந்த ஒரு என்பது முடிபாகும். இதனை நாம் மேலும் விளங்கவைக்க எமது புலன்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான தொழிற்பாடுகளை ஆற்றுகின்றன. ஆனால் ஒருகாலப்பகுதியில் புலன்கள் இருந்தாலும் அவை ஒரு செயலையும் ஆற்றமுடியாமல் இருக்கும். இதனை நாம் ஏற்றுக்கொள்வோமாயின் அப்புலன்களை தொழிற்படுத்தும் சக்தியே ஆன்மா என உணரப்படுகின்றது.

பதிக்கும் பசுவிற்கும் இடையேயுள்ள ஒற்றுமை பற்றிய நோக்குகையில் உண்மைத்தன்மை , அநாதியான தன்மை, இயக்கிகளாக விளங்கும் தன்மை, கட்புலனாகாத தன்மை ஆகியவற்றில் இவையிரண்டும் ஒற்றுமையுடையனவாக விளங்குகின்றன. பதிக்கும் பசுவிற்கும் இடையே உள்ள வேற்றுமைபற்றி நோக்கும் பொழுது ஆணவ மலமானது பசுவைப் பீடிக்கும் என்பதில் இரண்டிற்குமிடையே வேறுபாடு காணப்படுகின்றது.

பசுவின் இயல்பு பற்றி நோக்குகையில் அது அறிவித்தால் மட்டும் அறியக்கூடிய தன்மையுடையதாகும். அறிவிக்காதபோது எதனையும் அறிந்துகொள்ள முடியாத தன்மையுடையது. ஆன்மாவானது சார்ந்ததன் வண்ணம் இயல்புடையது. அதாவது பதியினைச்சார்ந்து சத்தாகவும் பாசத்தைச் சார்ந்து அசத்தாகவும் விளங்கும் ஆதலாலே ஆன்மா சதசத்து என அழைக்கப்படும்.

ஆன்மாவிற்கு உடல் ஊன்றுகோலாக விளங்குகின்றது. ஆன்மா எந்த ஒரு காரியத்தையும் ஆற்றுவதற்கு உடல் இன்றி அமையாததாகின்றது. ஆன்மா ஐம்பொறிகளையும் கருவியாகக் கொண்டு அவற்றை செயல்ப்படுத்துகின்றது. இதனை உமாபதி சிவாச்சாரியார்

"பொறியின்று ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவென்ற பெயர் நன் றற."

என்றும் கூறுகின்றார். பொறிகளின் துணையில்லாது எதனையும் அறிந்து கொள்ள முடியாத இவ் ஆன்மாவிற்கு அறிவு என்ற பெயர் மிகப்பிழையானது என்று கூறுகின்றார். சித்தாந்திகள் ஆன்மாக்களை மூன்று வகையாக வகைப்படுத்துகின்றார். அவையாவன ..

1. சகலர்.
2. பிரளயாகலர்.
3. விஞ்ஞானகலர்.

ஆணவம், கன்மம் , மாயை என்னும் மும்மலங்களாலும் பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள் சகலர் எனவும் ஆணவம் , கன்மம் எனும் இருமலங்களால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள் பிரளயாகலர் எனவும் ஆணவத்தினால் மட்டுமே பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் எனவும் கூறுவர்.

சித்தாந்திகள் ஆன்மாவுக்குரிய நிலைகளை மூன்று என்று குறிப்பிடுவர். நிலைகள் என்பது சைவசித்தாந்தத்தில் அவத்தை என குறிப்பிடப்படுவது வழக்கம்.

1. கேவலாவத்தை.
2. சகலாவத்தை.
3. சுத்தாவத்தை.

என்பனவாகும். இதில் கேவலாவத்தை என்பது ஆன்மா ஆணவத்தோடு மாத்திரம் சார்ந்தது அதன் மயமாகி நிற்கும் நிலை. இந்நிலையில் ஆன்மாவிற்கு இச்சை, செயல் , அறிவு எதுவுமே கிடையாது. இதனால் இது இருள்நிலை என அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு ஒடுங்கிக்கிடந்த ஆன்மா மாயை எனக்கூறப்படுகின்ற ஒரு மூலப் பொருளிலிருந்து உற்பத்தி ஆகின்ற உடம்பையும் உலகத்தையும் பெற்று இயங்கத் தொடங்குகின்றது. இந்த அவத்தையிலே ஆன்மா ஆணவ மலத்தோடு மட்டுமன்றி கன்மம், மாயை ஆகியமலங்களோடும் சேர்ந்து நிற்கின்றது. இதனால் இதற்கு சகலாவத்தை எனவும் அழைப்பர். இவ் அவத்தையிலே ஆன்மாவிற்கு இச்சை , ஞானம், கிரியை ஆகிய மூன்றும் காணப்படுகின்றது. கேவலாவத்தையில் ஆன்மாவிற்கு அறிவே கிடையாது. சகலாவத்தையில் தனு கரணங்களில் துணையிலேயே ஆன்மாவிற்கு சிறிது அறிவு கிட்டியபோதும் அதனறிவு பூரண அறிவாகாது இதனால் இந்நிலை மருள்நிலை எனப்படும்.

அறியாமையும் அரைகுறை நிலையும் நீங்கி ஆன்மா பூரண அறிவை பெறவேண்டும் என்பதே இலட்சியமாகும். இதற்கு இறைவனின் அருள் வேண்டும் என சைவசித்தாந்தம் கூறுகின்றது. இதனை சைவசித்தாந்தம் அருள்நிலை எனக்கூறுகின்றது. இதுவே ஆன்மாவின் மூன்றாவது நிலை ஆகும். இந்நிலை சுத்தாவத்தை எனப்படுகின்றது.

ஆன்மாக்களின் இருவகை நிலைகளை மேலும் சித்தாந்திகள் விளக்கிச் சொல்கின்றனர். ஆன்மா பாசத்துடன் கூடியிருக்கும் நிலை பெத்தநிலை எனவும் ஆன்மா பதியுடன் கூடியிருக்கும் நிலை முத்திநிலை எனவும்கூறுகின்றனர்.

பசுவின் இலட்சியம் பற்றி சித்தாந்திகள் குறிப்பிடும் பொழுது ஆன்மாவை அனாதியாகவே பீடித்த ஆணவமலமானது நெல்லில் உமிபோலவும் செம்பிற் களிம்புபோலவும் பற்றி நிற்பதாகவும் உவமை மூலம் விளக்கியுள்ளனர். இதனால் தன் இயல்பை இழந்த ஆன்மாக்கள் செயற்படுவதற்கு பொறிகளை தொழிற்படவைத்து அதன் செயற்பாட்டினால் ஏற்படும் தன்மைபற்றியும் சித்தாந்திகள் விளக்குகின்றனர். இதே போன்று இந்நிலையில் இருந்து தம்மை விடுவித்து கொள்ளவேண்டும் என்பதை இறுதி இலட்சியமாக கொண்டு அவ் இறுதிஇலட்சியத்தின் நிலையை சித்தாந்திகள் கூறியிருக்க காண்கின்றோம். குருலிங்க சங்கம வழிபாடு சிவசின்னங்களான விபூதி, உருத்திராக்கம் , பஞ்சாட்சரமந்திரம் என்பவற்றை உபயோகித்தல் தீட்சை முதலியவற்றை குறிப்பிட்டாலும் சரியை , கிரியை , யோகம் , ஞானம் எனும் நாற்பத நெறியை வலியுறுத்தியுள்ளனர். இச்சரியை முதலிய நெறிமுறை ஏற்படுத்தும் சிறப்புப் பற்றி கூறுகையில்

"சரியையில் ஆணவம் கால் சரிந்திடும்
கிரியையில் அரைமலம் கெடுதி யுற்றிடும்
மருவு யோகத்தில் முக்கால் மழுந்திடும்
பிரிசில ஞானத்தில் முற்றும் வீயுமே."

என படிப்படியாக ஆணவத்தை அழித்தற்குரிய சாதகமாகவே இந்த நான்கு வகை நெறிகளையும் குறிப்பிடுகின்றார்.

அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞானத்தை வருவிக்க சிறந்த ஒரு குருவை நாடுதல் அருவுருவத் திருமேனி ஆகிய லிங்கத்தை வழிபடுதல் சங்கமத்தார்களை நாடி அவர்களுடன் இணைந்து செயற்படல் ஆகிய வழிமுறைகள் பேணுவதால் நல்வினை தீவினை இரண்டையும் சம நோக்கில் கொள்ளக் கூடிய ஒப்புநிலை ஏற்படும். இந்த இருவினை ஒப்பானது மலத்தை முழுமையாக அழிக்கும் அந்த மலபரிபாக நிலையில் திருவருள் சக்தியின் அருள் கிடைக்கும். இதனை

" நீடுமிருவினைகள் நேராக நேராதல்
கூடுமிறை சக்தி கொளல் "

எனக் கூறப்படுவதனால் இருவினை ஒப்பு மலபரிபாகம் ஏற்பட சக்திநிபாதம் ஏற்படும் எனக் குறிப்பிடுகின்றனர். இந்நிலையில் இறுதிப் பேறாகிய இறைத்துவத்தை அடைவதாக சித்தாந்திகள் கூறுகின்றனர் இந்த இறுதி இலட்சியத்தின் சிறப்பைக் கூறவந்த சித்தாந்த நூல்கள் தாள் தலை என்ற இரு சொற்கள் புணர்கின்ற இடத்து தாடலை என்கின்ற உருவ அமைப்பை பெறுவது போல மலநீக்கம் பெற்ற ஆன்மாவும் இறைவனும் இரண்டறக் கலப்பதாகச் சித்தாந்திகள் கூறுகின்றனர். இதனை

" தாடலை போற் கூடியவை தானிகளாக வேற்றின்ப
கூடலை நீ ஏகமெனக் கொள் "

எனவும்

" அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி "

எனவும் கூறப்படும் விளக்கங்கள் இறுதி நிலைப்பேற்றை விளக்குகின்றன. இந்த இறுதிநிலை சுத்த அத்வைதம் என்ற சொற்றொடரால் வழங்கப்படுகின்றது

எனவே உயிரை நித்தியப்படுத்தி அதன் இயல்புகளை விளக்கி இயல்புகளோடு கூடிய ஆன்மாக்களின் விடுதலைக்கு வழி தேடி இறுதி இலட்சியமான அத்துவித முத்தி வரை சித்தாந்த நூல்கள் ஆராய்ந்து ஆன்மா பற்றிய முழுமையான கருத்துக்களையும் விளக்கி இருக்க காண்கின்றோம்

இ. ராதை
( 2000 கலை )

---

இளமையில் வந்த முதுமையும் முதுமையில் வந்த செல்வமும் துன்பத்தை ஏற்படுத்தும்.

— — ஔவையார்

தீமை செய்தால் தீமை செய்வது தான் உலக வழக்கம் ஆனால்
தீமை செய்தால் நன்மை செய்வது தான் உத்தமர் வழக்கம்

— — குருநானக்

# பெண்கள் உத்தியோகம் பார்க்கலாமா? கூடாதா?

## ( ஓர் உரையாடல் )

இடம் .. பேருந்துத்தரிப்பு நிலையம்.

உரையாடுபவர்கள் .. அபி, ராதா.

பேருந்துத் தரிப்பிடத்தில் நின்ற ராதா தற்செயலாக திரும்பிப்பார்க்கும் போது தன் நண்பி அபியைக் காண்கிறாள்.

ராதா – என்ன அபி!உன்னைப்பார்த்து நிறைய நாளாயிற்று எங்கே போவதற்காக இங்கே நிற்கிறாய் ?

அபி – (ஆச்சரியத்துடன்) ஆ! ராதாவா வா வா நான் ஆசிரியர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து விட்டேன். அதற்கான நேர்முகப்பரீட்சைதான் இன்று. அதற்காகத்தான் வந்தேன். ஆம்......... நீ எங்கே போகிறாய் ?

ராதா – நான் அருகில் இருக்கும் கடைக்குத்தான் போகின்றேன். உன்னைக்கண்டு விட்டேன் அல்லவா பேருந்து வண்டி வர இன்று நேரமாகுமாம். வருகின்றாயா ? சிறிது நேரம் அந்த ஓரத்தில் நின்று பேசுவோம்.

அபி – சரி சரி வா போவோம்.

ராதா – என்ன அபி வேலை கிடைப்பது எவ்வளவு சந்தோசமான விடயம் என்ன உன் முகத்தில் சந்தோசத்தையே காணவில்லை.

அபி – நாம் பெண்கள் வேலைசெய்து எதைச் சாதிக்கப் போகின்றோம்.

ராதா – அபி என்ன இது உன் கோழைத்தனம். ஒரு வேலைகிடைத்தால் அதை சந்தோசமாக ஏற்றுக்கொண்டு திறமையாக அதைச் செய்ய வேண்டியது தானே. பெண்கள் அது இது என்று என்ன கதை பேசுகின்றாய்.

அபி – இந்த நேர்முகப் பரீட்சையில் நான் தெரிவு செய்யப்படுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. ஆனால் இதை ஏற்று வேலை செய்ய நான் தயாராக இல்லை என்று கூறிவிட்டு வந்துவிடுவேன்.

ராதா – என்ன அபி தேடிவந்த வேலையை உதறிவிட்டு பின்னர் தான் நீ உணர்வாய் அதன் அருமையை . பெண்கள் வேலை செய்வதால் எவ்வளவு நன்மை தெரியுமா ? இன்று நாட்டில், குடும்பத்தில் உள்ள பிரச்சனை பொருளாதாரப் பிரச்சனைதானே . ஒரு குடும்பத்தில்ஆண் மட்டும் வேலை செய்தால் குடும்பப் பொருளாதாரப் பிரச்சனை என்றைக்குமே தீரமாட்டாது. அத்துடன் பெண் வேலைசெய்தால் தன் சொந்தக்காலிலேயே நிற்கலாமல்லவா ?

அபி – பொருளாதாரப்பிரச்சனை இருப்பது உண்மைதான் . ஒரு பெண் சொந்தக் காலில் நிற்கவும் குடும்பப் பொருளாதாரப் பிரச்சனை தீரவும் வேலை செய்ய வேண்டுமா ? பெண்கள் வேலை செய்வதைப் போன்று சிரமமான காரியம் வேறொன்றும் இல்லை. பெண்கள் பஸ் வண்டிகளில் வேலைக்குப் போய்வருவதென்றால் பண்பாடுகளையெல்லாம் உதறி எறிந்து விட்டுத்தான் வரவேண்டும். அப்படியா கூறுகின்றது தமிழ் கலாச்சாரம்.

ராதா – அப்படிக் கூறவில்லைத்தான். ஆனால் புரட்சிக்கவிஞன் பாரதியின் கருத்து அவ்வாறு இல்லையே. “சட்டங்கள் செய்யவும் பட்டங்கள் பெறவும் பாரினில் பெண்கள் உதித்து வந்தோம் என்று ஆனந்தக் கும்மி அடியுங்கள் ” என்று கூறி இருக்கிறான் அல்லவா?

அபி — ஆம் புரட்சிக்கவிஞனின் கருத்து சரிதான் . ஒரு குடும்பப் பெண் வீட்டில் இருப்பதை விட வேலைக்குப் போகும் போது இயந்திரமாக இயங்க வேண்டும் . உணவு தயாரிக்க வேண்டும் வேலைக்கு கணவனை அனுப்ப வேண்டும் . பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்ப வேண்டும் . எல்லா வேலையையும் செய்து தானும் வேலைக்கு போக அவள் என்ன இயந்திரமா ? பெண்கள் வீட்டிலிருந்து கொண்டும் ஆடு , மாடு ,கோழி என்பன வளர்த்தல் , பாய் இழைத்தல் போன்ற வேலைகளைச் செய்த காசு உழைக்கலாமே?

ராதா — இன்றைய கால கட்டத்தில் பொருட்களின் விலை உயர்ச்சியால் இத்தொழில்களால் காசு உழைப்பது போதுமானதல்ல . ஒரு பெண் வீட்டில் இருந்து உழைத்தும் பொருளாதாரப் பிரச்சனை தீராவிட்டால் குடும்பத்திற் கடன் தொல்லைகள் அதிகரித்து குடும்பத்தின் சமூக நிலையே பாதிப்படைந்து விடும் அல்லவா ?

அபி — அப்படியானால் வேலை செய்யும் பெண்கள் வீட்டில் குடும்ப நிலை சுமூகமாக உள்ளது என்பது தான் உன் கருத்தா? வீட்டில் இருக்கும் பெண்களின் வீடுகளை விட வேலை செய்யும் பெண்களின் வீடுகளில் தான் சமூக நிலை பாதிக்கப்பட்டிருக்கும் . ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் வேலை செய்வதால் இருவரும் மாலையில் களைத்து வீடு திரும்புகின்றார்கள் இந்நிலையில் அவர்கள் சந்தோசமாக இருக்கின்றார்களா? இல்லையே ?

ராதா — ஏன் கணவன் தன் மனைவி என்றாற் கூட அதிகம் கதைப்பதாற் தானே சண்டை சச்சரவுகள் தோன்றுகின்றன . வேலைக்குப் போகும் பெண்கள் வீட்டில் தேவையில்லாது கதைக்க மாட்டார்கள் . தமது வேலையையும் குடும்பத்தையும் கவனிப்பதிலேயே பொழுது போகின்றது . ஆனால் வீட்டிலிருக்கும் பெண்களோ தேவையில்லாத கதைகள் கதைத்து வீண் பொழுது போக்குகின்றனர் . இதனால் ஏதாவது நன்மை உண்டா ?

அபி — ம்...... அது பிரயோசனமற்ற வேலை தான் ஆனால் ஒரு பெண் வேலைக்குப் போனால் அவளிற்கு ஏற்படும் செலவா ? அல்லது வீட்டிலிருக்கும் பெண்ணிற்கா பணச் செலவு கூடுதலாயிருக்கும் என்று யோசித்துப் பார்த்தாயா ? எப்படியும் வேலை செய்யும் பெண்ணால் வருமானமும் இருக்கும் செலவும் இருக்குமே ?

ராதா — என்னதான் நீ கூறினாலும் வருமானத்தின் ஒரு பகுதிதானே செலவாகும் அந்தச் செலவை விடு அது சரி வீட்டில் இருக்கும் பெண்ணிற்கா அல்லது வேலை செய்யும் பெண்ணிற்கா அறிவு , பண்பாடு, நாகரீகம் என்பன கூடுதலாக இருக்கும் என்று யோசித்தாயா ?

அபி — வேலைக்குப் போகும் பெண்ணிடம் பண்பாடு கூடுதலாக இருக்கும் என்று கூறுகிறாய் போல் இருக்கிறதே ? ஒரு தமிழ்ப் பெண்ணின் பண்பாடு என்னவென்று தெரியுமா உனக்கு ? , கணவனைக் கண்கண்ட தெய்வமாக போற்றி கணவனிடமும் பிள்ளைகளிடமும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பது தான் . ஆனால் வேலைக்குப் போகும் பெண்ணின் பண்பாடு கெட்டுப்போய்விடுமே ? தவிர வளர்ந்து விடாது . ஆண்களுடன் சமத்துவமாக ஓர் ஆணைப்போல் பெண் வேலை செய்வது எனக்கு விருப்பமே இல்லை ராதா

ராதா — இன்னும் புரியவில்லையா உனக்கு ? பெண்கள் நமது திறமைகளை எல்லாம் மறைத்து வைத்திருந்து கொண்டு பாடசாலையில் படிக்கக் கூடாது ,வேலை செய்யக்கூடாது என்றிருந்த காலம் மலையேறிவிட்டது இன்று பெண்களெல்லாம் பெண்விடுதலை சமத்துவம் என்று கூச்சல் போடுகிறார்கள் . ஆண்களுடன் சரி சமமாக வேலை செய்யலாம் என்றாலே அதுதானே அவளிற்குக் கிடைத்த பெரும் சமத்துவம் இல்லையா ? மேலை நாடுகளில் பெண்களும் ஆண்களுக்குச் சமத்துவமாக வேலை செய்வதால் தான் அறிவு பெருகி அந்நாடுகள் வளர்ச்சியடைந்து வருகின்றன . ஆனால் எமது நாடு............

அபி— போதும் நிறுத்து மேலை நாடுகளில் பெண்கள் என்ன பண்பாடுள்ளவர்களாகவா நடக்கின்றார்கள் ?

ராதா— அவர்கள் அப்படியில்லைத்தான் ஆனாலும் எமது நாட்டுப் பெண்கள் எங்கென்றாலும் எமது பண்பாட்டை மாற்ற மாட்டார்கள் அல்லவா ?

அபி— ஆனால் நீ என்னதான் கூறினாலும் வேலைக்குச் செல்லும் மேலை நாட்டுப் பெண்களுக்கு தம் குழந்தைகள் மேற் பாசமே இல்லையாமே ? எமது நாட்டுப் பெண்களும் வேலைக்குச் சென்றால் அப்படித்தானே இருக்கும் எம் நாட்டுப் பெண்கள் வேலைக்குச் செல்லாவிட்டாலும் அடக்க ஒடுக்கமாக இருக்கின்றார்களே ? அது போதாதா?

ராதா— மேலை நாட்டுக் கலாச்சாரம் வேறு, எமது நாட்டுக் கலாச்சாரம் வேறு . எம் நாட்டுப் பெண்களின் இரத்தத்தில் ஊறிவிட்ட குணங்கள் தான் பாசமும் , அடக்கமும் அதை எவராலும் மாற்ற முடியாது . ஒரு நல்ல குடும்பப் பெண்ணால் வேலையும் பார்க்க முடியும் குடும்பத்தையும் கவனிக்க முடியும் அடக்கம் ,பண்பாடு என்று கூறிக்கொண்டு நமது திறமைகளையெல்லாம் எத்தனை பெண்கள் இலைமறைகாயாய் மறைத்து வைத்து ஆண்களுக்கு அடிமையாக வாழ்கின்றார்களே ? ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகள் என்ற அடிமை விலங்கு உடைத்தெறியப்படவேண்டும் பெண்ணிடம் இயல்பாகவே இருக்கும் குணம் அன்பு அல்லவா ?

( அபி மௌனமாக தலையை அசைக்கின்றாள் )

ராதா— அன்பாகச் செய்யக்கூடிய வேலைகளான தாதித் தொழில், ஆசிரியத் தொழில் , வைத்தியத் தொழில் போன்றவற்றை பெண்களே ஆண்களைவிட சிறப்பாகச் செய்கின்றார்கள். இப்படிப் பெண் வேலை செய்வதால் ஏற்படும் நன்மைகள் நிறையவே இருக்கின்றன . இப்படி நன்மைகள் இருக்கும் போது நீ கோழைத்தனத்துடன் இருக்கின்றாயே .

அபி— ஆம் ராதா உன் கருத்துக்கள் என்னை மாற்றி விட்டன .அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்களே அதுபோல என் மனதை மாற்றியே விட்டாய் ராதா.

ராதா— சிரித்துக் கொண்டு இப்போது வேலையை ஏற்கச் சம்மதம் தானே ?

அபி— ஆமாம் எனக்குக் கிடைத்த இந்த வேலையை மனப்பூர்வமாக ஏற்றுத் திறமையாக பணிபுரிவேன் .

ராதா— எதிர் காலத் திறமையான ஆசிரியைக்கு என் இனிய வாழ்த்துக்கள் . அதோ உனக்குரிய பேருந்து வருகின்றதே .

அபி— ஆமாம் நான் போய் வருகிறேன் ராதா .

( அபி பேருந்தில் ஏறி தனது ஒளிமயமான எதிர் காலத்தை நோக்கி பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகப் போய்க் கொண்டிருந்தாள். ராதா தன் நண்பி நல்வழியில் செல்ல உதவி விட்டேன் என்ற மனத் திருப்தியுடன் கடைக்குச் சென்று கொண்டிருந்தாள் )

செல்வி மு . ராதிகா
( 2000 கலை )

---

கணனியில் பயன்படுத்தப்படும் " மௌஸ் " MOUSE கண்டுபிடிக்கப்பட்டது 8 .12 . 1968 இல் . 8 .12 .1999 அன்று அதற்கு முப்பதாவது பிறந்த நாளாகும்

# சிலப்பதிகாரம்

## வழக்குரைகாதை

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் கண்ணகி கோவலன் பற்றிய கதையைக் கூறுவதாக அமைந்துள்ளது . பூம்புகாரில் பிறந்த கண்ணகி மதுரையில் வழக்குரைத்தது , பின் வஞ்சியில் தெய்வீகமுற்றமையை இது கூறுகின்றது .திருவள்ளுவர் கூறிய பெண்ணுக்குரிய இலக்கணம் அமைந்த கற்புக்கரசியாகிய கண்ணகி தன் கணவன் சிலம்பு திருடியவன் என்று அரசன் ஏவலாளரால் கொலை செய்தமையை இட்டு சினம் கொண்டு தன் கணவன் கள்வனல்லன் என்பதை நிரூபிப்பதற்காக பாண்டியன் அவைக்கு செல்கின்றாள் . பாண்டியன் அவையிற் கண்ணகி அறிமுகப்படுத்துவது முதல் கோப்பெருந்தேவி இறக்கும் வரையுள்ள சம்பவத்தை இளங்கோவடிகள் சித்தரித்தும் ஆக்கியும் உள்ள முறைமை வழக்குரை காதையில் உச்சக்கட்டு நாடகக் காட்சி ஆக்கியுள்ளதை இங்கு நோக்கலாம்

வழக்குரை காதைப் பகுதி உரையாடல் போன்றமைந்து நாடகப் பாணியில் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. இதற்கு வழக்குரைத்தல் சான்று பகிர்கின்றது . கோப்பெருந்தேவி தீக்கனா பல கண்டு அவற்றை அரியணை மீதிருந்த தன் கணவனிடம் கூறிக்கொண்டிருந்த சமயத்தில் பெருஞ் சீற்றத்துடன் வாயிலை அடைந்த கண்ணகி தன் வரவை அறிவிப்பதற்காக வாயிற்காவலனை நோக்கி அரசமுறை தப்பிய பாண்டியன் வாயிற்காவலனே உன் அரசனிடம் சென்று கணவனை இழந்த பெண் ஒருத்தி முறை வேண்டி ஒற்றைச் சிலம்புடன் வந்திருக்கிறாள் என்று கூறி அனுப்பினாள் . இதனை இளங்கோவடிகள்

" அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத்தாளென்று
அறிவிப்பாயே அறிவிப்பாயே"

என்னும் அடிகள் மூலமாக கண்ணகியின் உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றார் . கண்ணகியின் தோற்றம் வாயிற்காவலனையே அஞ்சத்தக்க விதத்தில் இளங்கோ சித்தரித்துள்ளமை நாடகத்தின் உச்சக்கட்டத்திற்கு கொண்டு செல்லும் அமைப்பாக அமைந்துள்ளது .

வாயிற்காவலன் அரசனிடமிருந்து மீண்டும் வந்து அரண்மனையில் மன்னன் இருக்கும் இடத்தைக் காட்டுகிறான் . அரசன் இருக்கும் இடத்திற்கு கண்ணகி சென்றடைகின்றாள் . மன்னன் , நீர் ஒழுகும் கண்களுடன் என் முன்னே வந்தவளே இளங்கொடியே யாரோ நீ என வினவுகிறான். இதனை இளங்கோ

" நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ நீ மடக்கொடி யோய் "

என்னும் வரிகளினால் புலப்படுத்துகின்றார். அதற்கு கண்ணகி மன்னனை நோக்கி "தேரா மன்னா செப்புவதுடையேன் " என விழித்து தன்னை அறிமுகம் செய்கிறாள். தனது நாட்டு மன்னனின் சிறப்பையும் ஊரையும் முதலில் கூறுகின்றாள் . இகழ்தல் இல்லாத சிறப்பினையுடையவரான இமையவரும் வியப்படையுமாறு புறாவின் துயரினை தீர்த்தவன் என்றும் அவனல்லாமலும் கடைவாயின் மணியின் நாவானது அசையப்பசுவின் கடைக்கண்களினின்றும் வழிந்த கண்ணீர்

தன் நெஞ்சினைச் சுடத்தானே தன் பெறுதற்கரிய புதல்வனைத் தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்றவன் ஆகிய சோழர்களது பெரும் பெயர் பெற்ற புகார் நகரமே தனது ஊர் என்று கூறுகின்றாள். இதனை

" என்னது சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத்தான் தன்
அரும் பெற்ற புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர் புகா ரென்பதியே அல்லூர்"

என்னும் அடிகளினூடாகப் புலப்படுத்துகின்றார்.

இதற்குப் பின்னர் தன் கணவன் குலத்தையும் கணவனையும் அறிமுகம் செய்கிறாள். பழியற்ற சிறப்புடன் புகழ் விளங்கும் பெருங்குடி வணிகனான மாசாத்துவான் என்பவனின் மகனாகப் பிறந்து வாழ்க்கை நடத்துவதற்காக வேண்டி ஊழ்வினை செலுத்துதலால் வீரக்கழலணிந்த மன்னவனே மதுரைமா நகரிலே புகுந்து இங்கு என்னுடைய காற்சிலம்பினை விற்பதற்கு விரும்பி நின்னிடத்தாக் கொலைக்களப்பட்ட கோவலனின் மனைவி எனக் கூறி இறுதியாக தன் பெயர் கண்ணகி என்று கூறுகிறாள்.

" ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனையாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்கு
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரே "

என வரும் பாடல் இதனை உணர்த்துகின்றது.

மேலும் நீதிக்காக வாதாடுவதையும் இளங்கோ சித்தரித்துள்ளமையையும் இங்கு காணலாம் அரசன் கள்வனை கொல்வது கொடுங்கோன்மை இல்லை என்பதனை விளக்கிய போது கண்ணகி துயரமிகுதியால் அறநெறியிற் செல்லாத நியாயத்தை தெளிந்து செயலாற்று கொற்கை வேந்தனே தன்னுடைய காற் பொற்சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது என்று கூறுகின்றாள். பின்வரும்

" நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே"

எனும் வரிகள் இதனைத் தெளிவுறுத்துகின்றன

அரசனுடைய சிலம்பு முத்துக்களை உள்ளீடு பரல்களாக கொண்டது கோவலனிடம் இருந்து பெற்ற கண்ணகியின் அணியான அந்த அழகிய காற் பொற் சிலம்பை கண்ணகி முன் அரசன் வைக்கிறான். கண்ணகி அதனை நிரூபிப்பதற்காக அவன் முன்னே மோதி உடைக்கின்றாள். அப்பொழுது மாணிக்கப்பரல்கள் அவன் வாய்முதலாக தெறித்து வீழ்ந்தது.

" கண்ணகி அணிமணிக் காற் சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்த மணியே "

மணிகண்ட அரசன் பதறிப் போனான். பொற்கொல்லனின் சொல்கேட்டு உண்மை என்று எண்ணி நடந்தமையினால் குடிமக்களை காத்துப் பேணுகின்ற தென்னாட்டின் பாண்டியர் ஆட்சி தன்னால் பிழைத்து விட்டதை உணர்ந்து தன் உயிரையே போக்கினான் இதனை மணிகண்டு

"தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் தன் சொற் கேட்ட
யானோ அரசன் யானோ கள்வன்
மன்பதை காக்கும் தென்புலக் காவல்
என் முதற் பிழைத்தது கெடுக என் ஆயுளே"

என வரும் பாடல் மூலம் இளங்கோ புலப்படுத்துகிறார்.

கோப்பெருந்தேவியும் கணவனை இழந்தோர்க்குப் புகலிடமாகக் காட்டுவது யாதும் இல்லை என்று எண்ணி அவளும் உயிர் துறந்தாள். இதனை

" கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்லென்று
இணையடி தொழுது வீழ்ந்தனள் மடமொழி "

என்னும் அடிகளினூடு எடுத்துக் காட்டுகிறார்.

இவ்வகையில் இதனை நோக்குகின்ற போது வழக்குரை காதை பகுதியில் உள்ள ஒவ்வொரு சம்பவங்களையும் பாத்திரக் கூற்றுக்களையும் சித்தரித்தும் ஆக்கியும் உள்ளமை நாடகத்தின் உச்சக்கட்ட காட்சியாக ஆக்கியுள்ளது என்று கூறினால் சாலவும் பொருந்தும்.

செல்வி. நி. காயத்திரி
(2000 கலை)

---


ஏணி - 1999
புகழ் மணம் பரப்ப வாழ்த்துகிறோம்

DINA AUDIO VEDIO CENTRE
POINT PEDRO ROAD, NELLIADY

உங்கள் நெஞ்சில் நிறைந்த பழைய பாடல்களையும்
துள்ளாத மனங்களையும் துள்ள வைக்கும் புத்தம் புதிய பாடல்களையும்
CD இசைத்தட்டு மூலம் ஒலிப்பதிவு செய்து கொள்ள நாடுங்கள்

DINA

பல ஆண்டு காலமாக மக்களின் நன் மதிப்பைப் பெற்று
பல நவீன ஒலிப்பதிவு சாதனங்கள் மூலம்
அனுபவசாலிகளான ஒலிப்பதிவாளர்களைக் கொண்டு இயங்குகிறது
டினா

ஒலிப்பதிவு மட்டுமன்றி வீடியோ கசட்டுக்களையும் வாடகைக்குப் பெற்றுக் கொள்ள

DINA AUDIO VEDIO CENTRE

# புறநானூற்றினூடாக சங்ககால மக்களின் வாழ்க்கை

சங்ககால இலக்கியங்களில் முதன்மையானதும் தொன்மையானதும் பழந் தமிழ்நாட்டின் பொருளாதார , கலை , கலாச்சாரங்களை எடுத்துக்காட்டுவதும் புறநானூறு நூல் என்றால் அது மிகையாகாது .இந்நூலிலே வன்மை வாய்ந்த வள்ளல்களையும் வீரம் செறிந்த அரசர்களையும் கற்றறிந்த கொள்கைச் சான்றோர்களையும் மறத்தமிழ்க் குடிகளையும் காணலாம் . சுருங்கக் கூறின் கலைமகளும் திருமகளும் களிநடம் புரிந்த பழந் தமிழ்நாட்டை புறநானூற்றினூடாகக் காணலாம்.

## புரவலரும் புலவரும்

முற்கால தமிழ் மன்னரில் பலர் பொன்மலர் மாற்றம் உடைத்தது போன்று புவிச் செல்வத்தோடு கவிச்செல்வத்தையும் உடையோராய் விளங்கினார்கள் .முத்தமிழ் நாட்டை ஆண்ட மூவேந்தர்கள் சிலர் பாடிய பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன . பாண்டியன் நெடுஞ்செழியன் கவி பாடும் திறன் பெற்றவன் . மக்களாய்ப் பிறந்தோரெல்லாம் கல்வியில் மேம்படல் வேண்டும் எனும் தன் ஆசையை அம்மன்னன் ஒரு பாடலால் தெரிவிக்கின்றான்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே

என்ற பாடல் தெட்டத் தெளிவாக இதனைக் காட்டுகிறது . புறநானூறு அரசர்களினதும் புலவர்களினதும் நட்பையும் நல்லுறவையும் எமக்குக் காட்டுகிறது . கோப்பெருஞ்சோழனை நோக்குவோமானால் ,அவர் கவிபாடும் திறன் பெற்றதோடு புலவர்களையும் தக்கவாறு போற்றியவர் . சோழன் செல்வத்தில் திளைத்திருந்தாலும் பிசிராந்தையார் என்னும் தமிழ்ப் புலவரையே உயிர் நண்பராகக் கொண்டார் . இம்மன்னன் உலக வாழ்க்கையைத் துறந்து உண்ணா நோன்பிருந்த போது தமது நண்பர் வருவார் வருவார் என வழிமேல் விழி வைத்துக் காத்திருந்ததுடன் தன் அருகிருந்த அன்பாடம்

செல்வக்காலை நிற்பினும்
அல்லற்காலை நில்லன்'

என்று அகங் குலைந்து கூறினான் . இவ்வாறு ஏங்கி நல்லுயிர் நீங்கினான் நிகழ்ந்ததை அறிந்த பிசிராந்தையார் நிகழ்ந்ததை அறிந்த பிசிராந்தையார் தானும் நோன்பிருந்து உயிர் துறந்தார் .

## புலவர் வாழ்க்கை

பண்டைப் புலவர்கள் தம்மை மதியாத மன்னர் கொடுத்த கொடையை அறவே வெறுத்தார்கள் . பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் நெடுவேட்டுவனைக் காணச் சென்றார் . அவன் உரிய காலத்தில் பரிசில் வழங்காது காலம் தாழ்த்தினான் . அது கண்ட சாத்தனார் ,

முற்றிய திருவின் மூவராயினும்
பெட்பினற்தல் யாம் வேண்டலாமே, என்றார்

கல்வியின் பெருமை அறிந்து பேணிக் கொடுக்கின்ற கொடையையே யாம் பெறுவோம் . அன்பற்றவர் முடியுடை வேந்தராயினும் அவர் அளிக்கின்ற கொடையை ஏற்றுக் கொள்ளோம் . என்று கூறி அவனை விட்டு அகன்றார் .

பெருஞ்சித்திரனார் என்ற புலவர் அதிகமானைக் காணச் சென்றார் .அவன் புலவரை மதிக்கின்ற பண்புடையவனாயிருந்த போதிலும் அரசபணியில் ஈடுபட்டிருந்தமையால் புலவருக்குரிய பரிசை வேறு ஒருவர் மூலம் கொடுத்து அனுப்பினான் . இதனைக் கண்ட புலவர் சீற்றம் கொண்டு , என்னை யார் என்று நினைத்தான் அதிகமான் .? அவனைக் கண்டு பரிசில் பெறவே வந்தேன் அன்றிப் பாராமுகமாக அவன் கொடுக்கும் பொருள் கொண்டு போகவல்லேனல்லேன் யான் .கல்வியின் சுவையறிந்து அன்புடன் அரசன் தினையளவு பொருள் தரினும் அதனைப் பெரிதென ஏற்று மகிழ்வேன் . என்று உணர்ச்சி ததும்பப் பாடினார்

## முற்காலப் போர்முறை

பகைமையும் போரும் எக்காலத்தும் உண்டு . முற்கால பொர் முறைகளிற் சிலவற்றை புறநானூறில் காணலாம் . அக்காலத்தில் ஓர் அரசன் மற்றோர் நாட்டின் மீது படை எடுத்தால் நாட்டில் வாழும் நல்லுயிர்களை நாசமாக்க கருதுவதில்லை எனவே

பசுவும் பார்ப்பனரும் பெண்டிரும் என்னும் புறப் பாடலினூடாக பசுக்களையும் அறவோரையும் பெண்களையும் பிணியாளரையும் போர் நிகழும் இடத்தை விட்டு அகலுமாறு பறை

அறிவித்து விட்டே படையெடுப்பு நிகழும். வீரர் அல்லாதோர், புறங்காட்டியோடுவோர், புண்பட்டோர் போன்றோர் மீது படைக்கலம் செலுத்துதல் தகாது என்பது பழந்தமிழர் கொள்கை.

<u>சங்க காலப் பெண்கள்</u>

இக்காலத்தில் கலையுணர்வு பெற்ற பெண்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்தார்கள். பேதமை என்பது பெண்களுக்கு அணிகலம் என்பது பழம் தமிழர் கொள்கையன்று என்பதற்கு புறநானூறு சான்றாகும். செவ்விய கவிபாடும் திறமை பெற்ற பெண்பாலார் பாடிய அருமை சான்ற பலபாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன வெண்ணிற்றயத்தியர், மாசாத்தியர், பொன்முடியார் போன்றோரோடு அரசர்களாலும் அறிஞர்களாலும் பாராட்டப்பட்ட ஔவையார் ஆகியோர் கல்வியிற் சிறந்த பெண் புலவர்களாவர். ஆகவே ஆண் பெண் இருபாலாருமே அக்காலத்தில் கல்வி அறிவில் மேம்பட்டிருந்தனர்

<u>வீரத்தாய்மார்கள்</u>

வெம்மை சான்ற போர்க்களத்திலே அஞ்சாது நின்று போர் புரியுமாறு தாம் பெற்ற அருமை மைந்தரை அனுப்பிய வீரத்தாய்மாரும் அக்காலத்தில் விளங்கினர். மாற்றார்க்கு புறம் கொடாது மார்பிலே புண்பட்டு இறந்த மைந்தனது மேனியைக்கண்ட நிலையில் பெற்ற போதினும் பெரிதுவக்கும் இன்பம் அடைந்தாள் ஒருதாய். மற்றொரு வீரமாது முதநாட் போரில் தமையனை இழந்து மறுநாட் போரில் தலைவனை இழந்தும் மனம் தளராதவளாய் தன் குலங்காக்க இருக்கும் அருமந்த பிள்ளையை அன்போடு அழைத்து வாளைக் கையிலே கொடுத்து போர்க்களம் நோக்கி அவனை விடுத்தாள். இதற்குப் பின்வரும் புறநானூற்றுப் பாடலை ஆதாரமாகக் கொள்ளலாம்.

மயங்கு வெண் மலராம்பல்
பணிப் பகன்ற கனிப்பா கல்
கடும்பல்லது காடறியாத
பெரும் தன்பனைப் பாழாக
ஏகநன் நாட்டினில்
ஒள்ளொளியூட்டினாள்

<u>மக்கள் வாழ்க்கை</u>

மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி என்றவாறு அக்கால மக்கள் மன்னனையே பின்பற்றி நடக்க முற்பட்டார்கள் என்ற செய்திகளை புறநானூறு கூறுகின்றது. அரசன் கடமையை அறிவிக்கும் புறநானூற்றுப் பாட்டொன்று இக்கருத்தை தெளிவாக்குகின்றது பிள்ளையை பெற்று வளர்ப்பது தாயின் கடமை அவனை அறிவுடையவனாக்குவது தந்தையின் கடமை ஒழுக்க நெறியில் நிறுத்துவது அரசர் கடமை என்றும் பொன்முடியார் என்ற புலவர் திறம்படப் பாடியுள்ளார்.

அரசன் அறநெறி தவறாது ஆண்டு வந்தால் குடிமக்களுக்கு எவ்வகை கவலையும் இல்லை என்பதும் அவன் அறநெறி தவறினால் பருவத்தில் மழை பெய்யாது, பசியும், பிணியும் குடிமக்களை வருத்தும் என்பதும் பழந்தமிழர் கொள்கை இதனாலேயே அறநெறி முதற்றே அரசின் கொற்றம் என்ற வாசகம் எழுந்தது. இன்னும் வாழ்க்கைக்குரிய சிறந்த நெறிகளை எல்லாம் எடுத்துத் கூறுகின்று புறநானூறு எல்லோரும் கடைப்பிடிப்பதற்குரிய ஓர் அறத்தினை திட்டவட்டமாகக் கூறுகின்றது.

பல்சான்றீரே பல்சான்றீரே
நல்லது செய்தல் ஆற்றாதாயினும்
அல்லது செய்தல் ஒப்புமின்

என்று கூறப்படும் அறிவுரையை கடைப்பிடித்து ஒழுகுதல் தமிழ் மக்களுடைய கடமையாகும்

<u>குறுநில மன்னர்</u>

புறநானூற்றிலே புகழப்படுகின்ற குறுநில மன்னர்கள் முறையே பேகன், பாரி, கடியநெடுவேட்டுவன் ஆய்ஆண்டிரன், வல்வில் ஓரி, அதிகமான், குமணன், கொற்றவன் ஆகியோரே ஆவர். இச்சிற்றரசில் சிலர் பேரரசனிலும் சாலப்புகழ் பெற்று விளங்கினார்கள் அறிஞரை ஆதரித்துப் போற்றினர். பாண்டி நாட்டிலுள்ள பறம்பு மலையையும் அதனையடுத்து 300 ஊர்களையும் ஆண்டு வந்தான் பாரி. இவன் நல்ல வள்ளல் தன்மை உடையவன். அவன் மனதில் அமைந்த அருளுக்கு அளவில்லை. அவன் நாவில் இல்லை என்ற சொல்லே இல்லை பாரியின் பெருந்தன்மையைப் பொய்யறியாக் கபிலர்

மடவர் மெல்லியர்
கடவன் பாரி கைவண்மையே

அதாவது அறிவில்லாதவர் ஆயினும் சரி புல்லிய குண இயல்புகளைக் கொண்டவராயினும் சரி பாரியிடம் சென்றால் அவர்களுக்கு மனமுவந்து பரிசில் வழங்கியே அனுப்புவான் என்று கூறினார்.

பொதிய மலைத் தலைவனாக விளங்கிய ஆய் என்னும் மன்னன் வறுமையால் வாடி வந்தவர்கள் தாயினும் சாலப்

பரிந்து ஆதரித்த தாயினும் அவன் பெருமையை முடமோகியார்,

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
சிறிவிலை வணிகன் ஆய் அலன்

என்று அவன் மனப்பான்மையைக் கூறுகின்றார். இவ்வாறு பண்டைய கால மன்னர்களின் கவித் திறமையையும் வாரி வாரி வழங்கும் கொடைத் திறமையையும் வர்ணித்துக் கொண்டே போகலாம். இப்படியான ஓர் இலக்கிய கேணியாக விளங்கும் பழமையை துருவுவோருக்கு பல பொருள் நிறைந்த பண்டமாகவும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு குறிக்கோள் காட்டும் மணி விளக்கமாகவும் மிளிர்கின்றது. இத்தகைய பெருநூலை தமிழ் மக்களாகிய நாம் பேணிப் படித்து இன்பமும் பயனும் எய்துவோம்.


செல்வன் கி. கணேசன்
(2000 கலை)

---


ஏணி சிறப்புற உளம் மகிழ வாழ்த்துகிறோம்

நிதுஷா ஸ்ரூடியோ & வீடியோ

உங்கள் மங்களகரமான நிகழ்வுகளை புகைப்படம் எடுத்துக்கொள்ளவும்
வீடியோ படமாக்குவதற்கும்
நாடுங்கள்



நிதுஷா ஸ்ரூடியோ
பிரதான வீதி நெல்லியடி, கரவெட்டி

# விழிப்பு

காட்சி 1

கோபு – தேவி ,தேவி இஞ்சேருமப்பா, இண்டைக்கு நடேசண்ணையைக் கண்டனான்

தேவி – என்னங்கோ, நடேசண்ணையை கண்டனியளோ? எப்பவாம் ஊருக்குப் போறார்

கோபு – அவருக்கு ஊருக்குப் போற நோக்கம் இல்லை. மிதிவெடி ,மிதிவெடி என்று பயப்படுகிறார்.

வாணி – அப்பா அப்பா – –

கோபு – பிள்ளை வாணியே என்னம்மா அவசரமாய் வாறாய் போல.

வாணி – அப்பா எங்கட ஊரில மிதிவெடியில மிதிச்சு ஆரோ கந்தசாமியாம் செத்துப் போனாராம் பேப்பரில் வந்திருக்கு

கோபு – கடவுளே எவ்வளவு பாவம் பிள்ளை – – –
கந்தசாமி எண்டவர் நிலத்தைப் பார்க்காமல் மேகத்தைப் பார்த்தக் கொண்டு போயிருப்பார்

வாணி – அப்பா நிலத்தை மட்டும் பார்த்து மிதிவெடியைக் கண்டு பிடிக்க இயலாது

கோபு – வாணி எனக்கு எதுவும் சொல்ல வேண்டாம் ஏதோ படிச்ச மாதிரி கதையாதை ஊருக்குப் போகிறதுக்கு ஆயத்தம் செய்

தேவி – என்னப்பா பிள்ளை சொல்லிறதும் சரி தானே

கோபு – நீ எல்லாம் தெரிஞ்ச மாதிரி கதையாதை உன்ர வேலையைப் பார்

காட்சி 2

ரமணி மாஸ்டர் – என்ன? என்ன ? அப்பா பிள்ளையள் எல்லாம் சண்டமாருதமான வாக்கவாதம் நடக்குது.

கோபு – அப்படி ஒன்றும் இல்லை வாங்கோ மாஸ்டர் மாஸ்டர் வாங்கோ . பிள்ளை மாஸ்டருக்கு ரீ கொண்டு வா

ரமணி மாஸ்டர் – இல்லைக் கோபு உங்கட பிரச்சனையைச் சொல்லுங்கோ எனக்கு காதில சில விடயங்கள் விழுந்தது. உது சின்னப் பிரச்சனை இல்லை இன்று நாட்டில் முக்கிய பிரச்சனை அதிலை நல்ல தெளிவு வேண்டும் இல்லாவிடில் மனிதவாழ்க்கையே பாதித்து விடும்

வாணி – அப்பா மாஸ்டர் சொல்றதை நல்லாக் கேளுங்கோ. நான் சொன்னால் உங்களுக்குப் பொத்திக் கொண்டு கோபம் வரும்

மாஸ்டர் – ஏன் பிள்ளை அப்பாவுக்கு கோபம் வர நடக்கிறாய்

வாணி – நான் அப்படி ஒன்றும் நடக்கவில்லை மாஸ்டர் . மிதிவெடி பற்றி நான் எச்சரிக்க அப்பா சொல்லுகிறார் நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த காளான் எனக்குப் புத்தி சொல்ல வந்திட்டா என்று சத்தம் போடுகிறார்

கோபு – மாஸ்டர் மிதிவெடியை எங்கட இடத்தில ஏன் வைக்கிறான்கள் நாங்கள் பேசாம இருக்கிறம் பொது மக்களாகிய எங்களுக்கும் அவர்களுக்கும் என்ன கோபம் மற்றது அதை இயக்காமல் தன்னிலேயே வெடிக்க முடியுமே? இந்தப் பெட்டை என்னை வெருட்டுறாள் அதுதான் சத்தம் போட்டன்

மாஸ்டர் – ஹி ஹி ஹி நல்ல பகிடி அண்ணை கிணற்றுத் தவளை மாதிரி இருக்கிறியள் பிள்ளை சொன்னது எவ்வளவு சரி

கோபு – அப்பிடியே மாஸ்டர் அது உயிரைக் கொண்டு போடுமே ?
மாஸ்டர் – உயிர் போனால் சின்ன விடயம் உயிரைப் போக்குவது மிதிவெடியின் நோக்கமல்ல அதை விதைப்பவர்களின் நோக்கமுமல்ல
கோபு – என்ன மாஸ்டர் புதிராய் இருக்கு
மாஸ்டர் – ஓம் கோபு உடலை ஊனமாக்கி உளவியல் ரீதியில் ஒரு பின்னடைவைக் கொண்டு வருவதுதான் இதன் நோக்கம்
வாணி – அப்பா வடிவாய்க் கேளுங்கோ , சொல்லுங்கோ மாஸ்டர் .
கோபு – எப்பிடி மாஸ்டர் உளத்தாக்கம் ஏற்படும் ?
மாஸ்டர் – கோபு , காலை இழந்தவன் தன்னால் மற்றவை போல் செயற்படமுடியாது என சமூகத்தில் இருந்து ஒதுங்குவான் இதைப் பார்ப்பவர்கள் யுத்தம் செய்ய முன்வரமாட்டார்கள். எனவே மனித வலுவை முடக்கும் ஒரு முயற்சி இது
கோபு – மாஸ்டர் , உதை எங்கை வைத்திருப்பினம் எப்பிடிக் கண்டுபிடிக்கிறது .
மாஸ்டர் – வைத்திருப்பினமோ ? அண்ணை விதைச்சிருப்பினம்
கோபு – மாஸ்டர் நெல்லே விதைக்க
மாஸ்டர் – கோபு மிதிவெடி விலையில் மலிவு . பாகிஸ்தான் சீனத்தயாரிப்பு 150 ரூபா வரும்
கோபு – அப்ப வேண்டி கிணற்றடி , பழமரத்தடி , வீட்டு வாசல் . எல்லாம் விதைப்பர் கேட்கவே திகைப்பாயிருக்கு அப்ப மாஸ்டர் இயக்காமல் எப்படி வெடிக்கும்.
மாஸ்டர் – நல்ல கேள்வி அது செய்யேக்கையே பற்றறி எல்லாம் பொருத்தி மின்னோட்ட வசதி செய்து வெடித்து ஆடத்தை ஏற்படுத்த இரும்பாணி பிசுங்கான் எல்லாம் போட்டு செய்து வைத்திருப்பர். எமது கால் பட அந்த அமுக்கத்தில் அமத்துப்பட்டு பின் நாங்கள் காலெடுக்க வெடிக்கும்.
கோபு – தச்சந் தோட்டத்தானே , மாஸ்டர் என்ரை பிள்ளை கருத்தரங்கிலை சொன்னது என்று சொல்ல நான் பெரிய மனுசி என்று பேசிப்போட்டன்.

காட்சி 3

மாஸ்டர் – சரி உதைவிடுங்கோ ஆனால் நாம் எந்தவொரு அடியையும் நிதானமாக வைக்கவேண்டும்.
வாணி – மாஸ்டர் வெடியில் அகப்பட்டால் என்ன செய்யவேண்டும்.
கோபு – மாஸ்டர் வெடியின் சாயலைக்கண்டால் என்ன செய்யவேண்டும்.
மாஸ்டர் – இரண்டும் நல்ல கேள்வி கோபி மிதிவெடியைக்கண்டால் அதில் ஒரு அடையாளம் குத்திவிட்டு பக்கத்தில் உள்ள இராணுவத்தினரிடம் அறிவிக்கவேண்டும். மற்றது மிதி வெடியில் மிதித்து வெடித்து விட்டது எனக்கண்டால் நாம் குழம்பி ஓடாமல் தள்ளி நின்று விழுந்து கிடப்பவரை எழுந்திருக்கச் சொல்ல வேண்டும் அதே நேரம் கால் சுவட்டின் வழி சென்று ஆளை அந்த இடத்தை விட்டு அகற்ற வேண்டும் .
வாணி – ஏன் மாஸ்டர் உடனே ஓடிச்சென்று தூக்கக் கூடாது பாவ மெல்லே ?
மாஸ்டர் – இல்லை வாணி , பக்கத்திலும் வெடி இருக்கலாம் . அதில் வெடிபட்டவர் விழுந்து கிடக்கும் போது தலைப்பகுதிக்கும் காயம் வந்து உயிரையே போக்காட்டி விடும்
கோபு – ஏன் மாஸ்டர் காற் சுவட்டின்படி போக வேண்டும் ?
மாஸ்டர் – காற்சுவட்டில் வெடி இல்லை என நம்பலாம் . நம்மை நாமே பாதுகாக்கலாம் .
கோபு – மாஸ்டர் மிச்சத்தைச் சொல்லுங்கோ கேட்கப் பயமாயிருக்கு .
மாஸ்டர் – காயம் சிறிதாக இருக்கும் சிலவேளை கால் போனாலும் உயிராபத்தில்லை . ஆனால் குருதிப் பெருக்கை கவனியாது விட்டால் உயிராபத்தைக் கொண்டு வரும்

வாணி – அதற்கு முதலுதவி செய்ய வேணும் மாஸ்டர்
மாஸ்டர் – பிள்ளை கருத்தரங்கிலை கலந்துகொண்டபடியால் விசயம் தெரியுது.
கோபு – அப்ப என்னை மொக்கு எண்டிறியள்
மாஸ்டர் – இல்லைக் கோபு, பிள்ளை உலகம் தெரிஞ்சவள் நிலைமை விளங்குது அவளிற்கு
வாணி – மேலே சொல்லுங்கோ?
மாஸ்டர் – வெளியில கொண்டு வந்தவரை ஒரு இடத்தில் கிடத்தி முதலுதவி செய்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்
கோபு – இப்பதான் மிதிவெடியின் நோக்கமும், தாக்கமும், தப்பும் வழியும் தெரிகிறது.
வாணி – மாஸ்டர், நான் சொல்ல அப்பாவுக்குப் புரியேல்லை இப்ப நல்லா விளங்குது
கோபு – மாஸ்டர் உந்த மிதிவெடி விதைப்பை நிறுத்த ஏலாதே?
மாஸ்டர் – மனமிருந்தால் இடமுண்டு. ஒவ்வொருவரும் மனிதநேயத்தை மதித்தால் தான் நிறுத்தலாம்
வாணி, கோபு – நன்றி மாஸ்டர் நன்றி

செல்வி இ. பத்மலோஜினி
(2000 வர்த்தகம்)

---


ஏனி சிறப்புற வாழ்த்துகிறோம்

**வீ.எஸ்.பி குறூப்**

உங்களுக்குத் தேவையான பலசரக்கு வகைகள்

பாடசாலை மாணவருக்கான

புத்தகங்கள் கொப்பிகள் மற்றும் உபகரணங்களை மலிவாகவும் தரமாகவும்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**V.S.B GROUP**

MAIN STREET, NELLIADY

# அன்பின் சங்கமம்

நேரம் 8.15 ஆச்சு இன்னும் என்ன காணம். வரவர எல்லாம் மோசமாய் போச்சு என்று ஆனந் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு பஸ் வரும் திசையிலே பார்த்து நின்றான். சிறிது நேரம் கழிந்ததும் அவன் போக வேண்டிய 415 இலக்கமுடைய பஸ் வந்தது. அதில் முண்டியடித்து ஏறி அலுவலகம் சென்றான். அங்கு வாசலில் நின்றிருந்த அதிகாரி என்னப்பா ஆனந் இன்று இவ்வளவு லேற் என்றார் ஆம் – – ஆம் பஸ் வர வர கொஞ்சம் லேற்றாச்சு என்று குழைந்த குரலில் கூறினான் சரி சரி உன் வேலையை கவனி என்று கூறினார் அதிகாரி.

ஆனந் ஒரு கம்பனியில் வேலை பார்ப்பவன் இவனுக்கு அம்மா, தங்கைமார் இருவர் இவனை நம்பி இருக்கின்றார்கள். ஆனந்தின் குடும்பம் வறுமையானது இவனது தந்தை அருளானந்தம் அரசாங்க உத்தியோகம் தான் ஆனால் எடுக்கும் சம்பளத்தில் பாதிக்கு மேல் குடிக்கு செலவு செய்து விட்டு மீதிப்பணத்தை தான் மனைவியிடம் கொடுப்பார். பாவம் அவள் என்ன செய்வாள் மூன்று பிள்ளைகளுக்கும் சாப்பாடு, படிப்பு, உடை என்றே அவர்களின் பட்டியல் இருக்கும் அதனால் தாய் பலகாரமும் சுட்டு அதனை கடைக்கு கொடுத்து வரும் பணத்தையும் கொண்டு படிப்பு செலவை செய்வார். ஆனந் தனது இரு தங்கைகளுக்கும் மணம் முடித்து வைத்தான். இப்படியாக காலம் ஓடுகையில் தந்தை சுகவீனமடைந்து இறந்து விட்டார். இதற்கு அவரது அளவுக்கதிகமான குடியே காரணமாகும். மகன் என்ற ஸ்தானத்தில் தனது கடமைகளை நிறைவேற்றினான்.

தம்பி ஆனந் இன்றைக்கு வேலைக்கு போகவில்லையோ ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய் என்ன நடந்தது வேலைத்தளத்தில் ஏதும் பிரச்சனையோ என்று தாய் கேட்க இன்றைக்கு எனக்கு உடம்பு சரியில்லை அதுதான் லீவு போட்டிட்டன். என்று கூறிவிட்டு தன் அறைக்கு சென்று மேசை மீது இருந்த கடிதத்தை கையில் எடுத்தான். அப்போது அவனது மனம் பின்னோக்கி பாய்ந்தது.

ஆனந் ஆனந் நில்லுங்க என்று ஒரு பெண்குரல் கேட்டது ஆனந் திரும்பிப் பார்த்தான் அந்தக் குரலுக்குரிய பிரியா நின்றாள்.

ஆனந் சில மாதங்களுக்கு முன்பு தான் இந்தக் கல்லூரிக்கு வந்தவன். பிரியாவொட வகுப்பில்தான் ஆனந்தும் படிக்கிறான். ஆனந் மிகவும் அமைதியானவன் இதற்கு அவனது வீட்டு சூழலும் ஒரு காரணம். ஏனெனில் அவனிற்கு நிறைய பொறுப்புகள் உண்டு. ஆனந்திற்கு முன் பிரியா தான் வகுப்பில் முதலிடத்தில் இருந்தவள் ஆனால் இம்முறை பெறுபேற்றில் ஆனந் முதலிடம் பெற்றான்.

ஆனந் இந்த கல்லூரிக்கு வந்த நாளில் இருந்தே ஆனந்தின் போக்கை கவனித்து வந்தாள். மற்ற ஆண்களைப் போல பெண்களுக்கு பகிடி விட்டு சைட் அடித்து எதுவும் செய்வதில்லை. ஆனந்தின் உடல் தோற்றமும் கம்பீரமும் அவனது தன்னை விட படிப்பில் உள்ள கெட்டித்தனமும் பிரியா தனது மனதில் அசை போட்டுக் கொள்வது வழக்கம் ஒரு நாள் ஆனந்தையும் அழைத்து சென்று ரீ அருந்திவிட்டு அவனது குடும்ப விபரத்தை விரிவாக அறிந்தாள்.

இப்படியாக பிரியா ஆனந்துடன் அடிக்கடி கதைப்பாள் பாடம் சம்மந்தமாக விளக்கம் கேட்பாள். இப்படியாக தொடரும் காதலை ஆனந் முதலில் மறுத்துவிட்டான். பிரியா தனது காதலை கூறியபோது அவன் சாக்குகள் சொல்லி மறுக்கவும் பிரியா அவனது இதயத்தை திருடிவிட்டாள். இப்படியாக காதலும் கல்லூரி வாழ்க்கையும் இன்பமாக வளர்ந்தது. கல்லூரிப் படிப்பு முடிந்து ஆனந் ஒரு கம்பனியில் வேலை பார்த்தான். பிரியாவும் வேலை பார்த்தாள்.

ஆனால் பிரியாவின் பெற்றோருக்கு பிரியா வேலை செய்வதில் விருப்பம் இல்லை எனினும் பெற்றோர் வேலை செய்ய அனுமதி கொடுத்தனர். வேலைக்குச் செல்வதால் தினமும் ஆனந்தைச் சந்திக்க முடிந்தது.

ஆண்டுகள் பல ஊருண்டோடின. பிரியாவுக்கு வீட்டில் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தனர். திருமண ஏற்பாடுகள் முடிந்தபின்பு தான் பிரியாவுக்கு தந்தை ஒருநாள் இது பற்றிக் கூறினார். லண்டனில் டாக்டராக இருக்கும் உன் அத்தை பையனைத்தான் நிச்சயித்திருக்கிறோம். உனக்குச் சம்மதம் தானே எனத் தந்தை கேட்டபோது தடுமாறிப் போனாள் பிரியா. பின் சுதாகரித்துக் கொண்டு தன் காதலை மெதுவாகச் சொல்ல ஆரம்பித்தாள். ஆனால் தந்தை பிரியாவின் காதலை ஏற்க மறுத்து விட்டார்.

மறுநாட்காலை அத்தை பையன் சுரேஸ் லண்டனில் இருந்து வந்து சேர்ந்தான் வந்தவன் பிரியாவைச் சந்திக்க அவளது வீட்டுக்குச் சென்றான். அங்கு அவளது அறையில் அவளைக் காணாது வெளியேறியபோது மேசை மீது இருந்த கவர் ஒன்றைக் கண்டு அதனை விரித்தான். அதில் பிரியா தனது திருமணம் பற்றிய சகல விபரங்களையும் ஆனந்திற்கு எழுதி தன்னால் சுரேசை திருமணம் செய்ய முடியாது எனவும் அதனால் தான் தற்கொலை செய்யப் போவதாகவும் எழுதி இருந்தாள். அவன் கடிதத்தை அப்படியே வைத்துவிட்டு தனது அறைக்குச் சென்று விட்டான். சில மணி நேரத்தின் பின் பிரியாவின் தாய் அழும் ஒலி கேட்டு அங்கு விரைந்தான் சுரேஸ். அங்கு பிரியா மயங்கிய நிலையில் கட்டில் கிடந்தாள். அருகில் இருந்த போத்தலைப் பார்த்த சுரேஸ் அவளை உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு தான் ஆனந்திடம் சென்று அவனையும் அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு விரைந்தான். அங்கு பிரியா மயக்கம் தெளிந்த நிலையில் இருந்தாள்.

பிரியாவின் பெற்றோர், ஆனந் எல்லோரும் உடனிருக்க ஆனந் கூறினான் நான் பிரியாவைத் தேடி அவளின் அறைக்கு ஒருநாள் சென்ற போது ஆனந்திற்கு எழுதிய கடிதத்தைப் பார்த்தேன். அதன்பின் அவளின் அறையைச் சோதனையிட்டபோது நித்திரைக்குளிசை அடங்கிய போத்தலைப் பார்த்தேன் அதிலிருந்த குளிசையை அகற்றி வேறு குளிசைகள் இட்டு வைத்தேன் அதனால் தான் இப்போது பிரியாவை உங்களால் பார்க்க முடிகிறது. ஆனந் இல்லாமல் பிரியாவால் வாழ முடியாது என்பது இப்போது உங்கள் யாவருக்கும் தெரிந்திருக்கும் எனவே இருவரையும் சேர்த்து வைப்பது தான் நன்று என நான் நினைக்கிறேன் என அவன் கூறி முடித்ததும் அனைவரும் அதை ஆமோதித்தனர்

அடுத்த முகூர்த்தத்தில் இருவரினதும் திருமணத்தை சுரேசே முன்னின்று நடத்தி வைத்தான் மறுநாளே இருவரையும் வாழ்த்தி இலண்டனுக்குப் புறப்பட்டான்

இ. கமலகுமாரி
(2000 கலை)

---

# உலகை........

# நோக்கி .......

1) " Y 2 K " என்றால் என்ன ?

   Y-Year ( ஆண்டு )

   2- Number ( எண் ௨ )

   K-Kilo ( கிலோ )

   Year என்பது ஆண்டையும் ௨ என்பது ௨000 என்பதிலுள்ள எண் ௨ ஐயும் Kilo என்பது (சர்வதேச அலகு முறையில்) ஆயிரத்தையும் குறிக்கும்

2) தட்டச்சு இயந்திரம் எப்போது யாரால் கண்டு பிடிக்கப்பட்டது ?

   1464 ல் ஜெனான் கட்டன் பார்க் என்பவரால்

3) இன்ரநெற்றின் முன்னோடி எனப்படுவது யாது ?

   ஆர்ப்பாநெட் என்கின்ற இணைப்பு

4) இலங்கையில் இன்ரநெற் சேவை வழங்கும் அமைப்புக்கள் எவை ?

   Lanka Internet , Srilanka Telecom Limited , Sintes , Data com

5) Srilanka Telecom Limited ன் இன்ரநெற் சேவையின் பெயர் யாது ?

   Lanka net work

6) தமிழ் இணையம் ௨000 மகாநாடு எங்கு நடைபெற உள்ளது ?

   இலங்கையில்

7) டைட்டானிக் (Titanic) திரைப்படத்தை இயக்கி ஆஸ்கார் விருது பெற்றவர் யார் ?

   ஜேம்ஸ் கமரன்

8) முதலாவது உலகக்கிரிக்கெட் போட்டி எப்போது இடம்பெற்றது ?

   1975 ல்

9) குழு 15 (G 15) அமைப்பில் இறுதியாகச் சேர்க்கப்பட்ட நாடு எது ?

   இலங்கை

10) 01 – 01 – ௨001 ஆந் திகதி என்ன கிழமையாக இருக்கும் ?

   சனிக்கிழமை

செல்வி த. இராஜதாரணி
( ௨000 வர்த்தகம் )

# யூரோ EURO

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள பதின் ஐந்து உறுப்பு நாடுகளில் பதினொரு நாடுகள் ஒன்றிணைந்ததன் மூலம் உருவாக்கப்பட்ட "யூரோ நிலம்" என்ற தனியான பொருளாதார வலயத்தின் நாணயமே யூரோ ஆகும். 1957ம் ஆண்டு ரோம் உடன்படிக்கையின் படி ஐரோப்பாவிற்கு தனியொரு நாணயம் என்ற கோட்பாடு 1969ல் இடம் பெற்ற ஐரோப்பிய தலைவர்களின் கேய்ச் உச்சி மாகாநாட்டின் போதே இந்த யோசனை முழு அளவில் உறுதியாக்கப் பட்டது. இது தொடர்பான தடைகள் இறுதியில் அகற்றப்பட்டு 1992இல் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மாஸ்ரிடிச் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு உறுப்பு நாடுகளில் உறுதி செய்யப்பட்டது.

ஐரோப்பிய நாணய ஒன்றியத்தினதும் யூரோவினதம் முறையான அறிமுகம் மூன்றுகட்டங்களில் இடம்பெற்றிருக் கின்றது. 1999 ஜனவரி 1ம் நாள் தொடங்கிய இறுதிக் கூட்டத்தில் யூரோவின் குறையான அறிமுகமும் பங்கேற்கும் நாடுகளிடையே கைமீட்புச் செய்ய இயலாத நிலையான செலாவணி வீதங்களும் நிர்ணயிக்கப்பட்டன. யூரோ தாள்களும், குத்திகளும் தேசிய நாணயங்களோடு 2002ம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாளிலிருந்து கிடைக்கத் தக்கதாக இருக்கும். பங்கேற்கும் நாடுகளின் தேசிய நாணயங்கள் மாற்றத்திற்குட்படுகின்ற ஆறுமாத காலத்திற்குப் பின்னர் 2002ம் ஆண்டு யூலை மாதம் 1ம் நாளிலிருந்து முற்றாக அகற்றப்படும். அதன்பின்னர் இந்த 11 நாடுகளின் தேசிய நாணயங்களும் சட்டபூர்வமாக வழங்கல் கொண்ட நாணயங்களாக ஏற்றக் கொள்ளப்பட மாட்டாது.

ஐரோப்பிய பொருளாதார நாடுகளாக 15 உள்ளன. இதில் பின்வரும் 11 நாடுகளும் ஒன்று சேர்ந்து இந்த யூரோ நாணயத்தை வெளியிடுவதற்கு இவ் நாடுகள் ஐரோப்பிய நாணய ஒன்றியத்தில் இணைந்துள்ளன. அவையாவன, ஒசுத்திரியா, பெல்ஜியம், பின்லாந்து, பிரான்சு, ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, லக்சம்பேர்க், நெதர்லாந்து, போர்த்துக்கல், இஸ்ப்பெயின் என்பனவாம் இதில் பின்வரும் 4 நாடுகள் ஈடுபடவில்லை. யூரோவிற்கும் ஐரோப்பிய நாணய ஒன்றியத்தின் இங்கிலாந்து போன்ற நாடுகளும் யூரோவிற்கும் ஐரோப்பிய நாணய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளின் தேசிய நாணயங்களுக்குமிடையேயான செலாவணி வீதங்கள் 1999 ஜனவரி 1ஆம் நாள் தொடக்கம் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டன.

## யூரோ

பெல்ஜியம் 40.3399 இத்தாலி
1936.27
ஜேர்மனி 1.95583 லக்சம்பேர்க்
40.3399
இஸ்ப்பெயின் 166.386 நெதர்லாந்து
2.20371
பிரான்சு 6. 55957 ஒசுத்திரியா
13.7603
அயர்லாந்து 0.787564 போர்த்துக்கல்
200.482
பின்லாந்து
5.94573

யூரோவின் அறிமுகமானது பிறெட்டன் வூட் நிறுவனங்களுக்கும் பிறகு உலகளாவிய நிதியியற் பரப்பின் நிறுவன ரீதியான அபிவிருத்தியில் முக்கியமானதொரு நிகழ்வாகக் கருதப்படுவதுடன் உலகளாவிய பொருளாதாரத்தின் மீது பரந்தளவு உட்படுத்தல்களை விளைவிக்கக் கூடும். யூரோ உறுதியானதாக மாறி, பன்னாட்டு ரீதியாக தங்கியிருக்கக் கூடிய நாணயமாக தொடருமாயின் உலகம் மிகப் பெரிய உள்நாட்டு நிதியில் சந்தையை உருவாக்கக் கூடிய உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்குமேயானால் நாணய ஒன்றியம் உலகளாவிய பொருளாதார உறவுகளையும், உள்ளார்ந்த வலுச் சமநிலையையும் பாதிப்பது மட்டுமன்றி நீண்டகாலத்தில் அவற்றின் தோற்றத்தையும் மாற்றக் கூடும்.

யூரோவின் உள்ளார்ந்த நன்மைகள் பல்வேறுபட்ட பரிமாணங்களிலிருந்து கிடைக்கிறது. யூரோ நாடுகளிலுள்ள சந்தையின் மிகச்சிறந்த உள்ளார்ந்த வளத்தின் பருமன் அதனது பெருமளவு முனைப்பான தன்மையையும் ஐக்கிய அமெரிக்கா டொலருக்கு அடுத்ததாக திரவத் தன்மையையும் கொண்டுள்ளதையும் உட்கிடையாக கொண்டுள்ளது. யூரோ சந்தைகளின் இவ்வுள்ளார்ந்த பருமன் குறைந்த நிதியிடல் செலவுகளுடன் புதிய யூரோவில் குறித்துரைக்கப்பட்ட நிதியில் கருவிகளின் அபிவிருத்திக்கு வழிவகுக்கக் கூடும். மேலும் யூரோ நாணயமானது புலப்பாட்டுத் தன்மையினையும் செயல் திறனையும் அதிகரிப்பதன் மூலம் குறுகிய வட்டி வீச்சுக்கான ஊக்குவிப்புக்களை வழங்கவதன் மூலம்

யூரோப் பிராந்தியத்தின் நிறுவனங்களுக்கிடையிலான நீண்டகால உண்மை மற்றும் நிதியியல் ஒப்பந்தங்களின் வெளிநாட்டுச் செலவாணி இடர்தேர்வுகளை இல்லாதொழிக்கும். யூரோ பிராந்தியத்தக்குள்ளே பேரண்டப் பொருளாதார மாதிரிகளை ஒருமுகப் படுத்துவதில், குறிப்பாக மத்திய வங்கிகளின் ஐரோப்பிய அமைப்பிற்கு முன்னுரிமை யொன்றாக விலை உறுதிப்பாட்டை பேணுவதற்கான ஆணை ஒப்படைக்கப்பட்டிருந்தமையானது. உலகின் எஞ்சிய பகுதிகளின் மீதும் சாதகமான தாக்கங்களைக் கொண்டிருக்கும் உலகளாவிய வட்டி வீதங்களைக் குறைப்பதில் யூரோவின் தாக்கம் இலங்கை போன்ற தேறிய மூலதனங்களை இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு நன்மை பயக்கக் கூடியதாகவுள்ள வேளையில் யூரோப் பிராந்திய பொருளாதாரத்திற்கான உள்ளார்ந்த வளர்ச்சி வாய்ப்புகள் உயர்ந்தளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் எம்முடையதைப் போன்ற அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கு எதிரெதிராக பன்னாட்டு வர்த்தகத்தையும் தூண்டும்.

யூரோப் பிராந்தியத்தின் பெரும்பாலான உறுப்பு நாடுகள் குறிப்பிடத்தக்க ஒழுங்கு விதிகளுடன் கூடிய அமைப்பில் பிரச்சினைகளினால் சூழப்பட்டுள்ளன. தொழிலாளர் அசைவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் தொழிலாளர் சந்தைகள் மிகவும் நெகிழ்ச்சியற்று காணப்பட்டதுடன் சில உறுப்பு நாடுகளில் உயர்ந்த தொழிலின்மை வீதம் நிலவியது. ஐரோப்பிய நாணய ஒன்றியத்தில் எதிகால வலுவும் உறுதிப்பாடும் உறுப்புரிமை நாடுகளின் ஒருமுகப்படுத்தப்பட்ட பலமான பேரண்டபொருளாதாரத்திற்கான தொடர்ச்சியான கட்டுப்பாடு அமைப்பியல் சீர்திருத்தங்களுடன் இணைந்து செல்லுதல் மற்றும் முக்கியமாக கொள்ளக்கூடிய விடயங்களில் யூரோ உறுப்பினர் நாடுகளிடையிலான அரசியல் பற்றுறுதி என்பவற்றில் தங்கியிருக்கின்றது. எனினும் நாட்டின் அல்லது அரசின் தலைவர்களையும் ஐரோப்பிய சபை கொள்கை ஒழுங்கினை அதிகரிப்பதற்காக தேவையை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த யூரோ நாணயம் பற்றிய கருத்து முன்னொரு பொழுது முன்மொழியப்படுகையில் இது சர்வதேச ரீதியில் தனது நாணயம் கொண்டுள்ள சந்தைப் பங்கை எந்த வகையிலும் பாதிக்காது என மார்தட்டிய அமெரிக்கா தற்போது இந்த யூரோ நாணய வெளியீட்டால் சித்தம் கலங்கிப் போயுள்ளது.

இந்த யூரோவை ஆசிய நாடுகளாகிய இலங்கையும் இந்தியாவும் வரவேற்றுக் காத்திருப்பது அமெரிக்க டொலரை விட ஆசியாவில் யூரோவிற்கு கிராக்கி ஏற்படப் போவதை மேற்கோள் காட்டுகிறது.

*V. S. MATHON*
(2001 வர்த்தகப் பிரிவு)

# நடைமுறை இலங்கையில் கொடுகடன் அட்டையின் பயன்பாடு

உலகம் முழுவதும் தொழில்நுட்ப மேம்பாட்டை அடைந்து விட்டது. 1997இன் பிற்பகுதியில் இருந்து தொடங்கப்பட்ட நிதியியல் நடவடிக்கை படிப்படியான தளர்த்தங்கள் என்பவற்றைத் தொடர்ந்து இலங்கை மிகுந்த பெருந்தன்மை வாய்ந்ததும் புதுமை வாய்ந்ததும் புதுமை நிறைந்ததுமான வங்கித் தொழிலை உருவாக்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாக கொடுகடன் அட்டைகளின் நடைமுறைப்படுத்தல் விளங்கியதுடன் இது காசற்ற சமுதாயத்தை நோக்கி எடுத்தவைத்த முதனாடியையும் எடுத்துக்காட்டுகின்றது.

கொடுகடன் அட்டை என்பது வங்கியின் அல்லது குறித்த நிதிநிறுவனத்தின் வாடிக்கையாளர்களிற்கு அல்லது வாடிக்கையாளர் அல்லாதோருக்கு அங்கீகரிக்கப்பட்ட வியாபார நிறுவனங்களில் கொடுகடன் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கும் ஓர் உத்தரவாத அட்டை கடனட்டை எனப்படும்.

கொடுகடன் அட்டைத் தொழிற்பாடுகளின் பின்வரும் 4 சாரார் தொடர்புபடுகின்றனர்.

i) அட்டையின் வர்த்தக அடையாளத்திற்கு சொந்தமான கொடுகடன் அட்டைக் கம்பனி.
ii) அட்டைகளை வழங்கும் கம்பனி
iii) வணிகர்கள்
iv) அட்டை உடமையாளர்கள்.

கொடுகடன் அட்டையை வழங்கும் பொழுது வழங்கும் வங்கியின் அட்டை விண்ணப்பதாரியும் கொடுகடன் தொழிற்பாடுகளுடன் தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்கின்றனர். இவ்வட்டையை வைத்திருக்கும் ஒருவர் வங்கிக் கணக்கு ஒன்றை வைத்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

இலங்கையின் முதற் தடவையாக கொடுகடன் அட்டையை 1980இன் தொடக்கத்தில் தனியார் கம்பனியான கோல்டன் கீ கிறடிற்காட் "THE GOLDEN KEY CREDIT CARD" என்ற அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது.

அளவிலான அங்கீகாரம் பிளாஸ்ரிக் பணத்தை பயன்படுத்துவதிலுள்ள நன்மைகளை விட்டு வாடிக்கையாளர்களையும் வணிகர்களையும் நம்பவைப்பதிலுள்ள இடர்பாடுகள் மற்றும் கொடுகடன் அட்டைகள் பற்றி மக்களுக்கு போதியளவு அறிவின்மை என்பவற்றின் காரணமாக ஆரம்பத்தில் கொடுகடன் அட்டையின் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டது. என்றும் கடந்த ஆண்டுகளாக அட்டையை ஏற்றுக் கொள்ளும் தன்மை அதிகரித்து விட்டதுடன் தற்பொழுது 10000இற்கும் மேற்பட்டோர் அட்டையை வைத்திருக்கிறார்கள்.

வர்த்தக வங்கிகள் 1980களின் தொடக்கத்தில் பரந்த அளவிலான வீச்சுக்களைக் கொண்ட புதிய நிதியியல் கருவிகளின் அறிமுகத்துடன் கொடுகடன் அட்டை வழங்கத் தொடங்கின இவை உள்ளூர் கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுமேயாகும். சர்வதேச நாணயநிதியத்தின் அங்கீகாரத்துடன் 1994இல் இருந்து நடைமுறைக் கணக்குகள் தாராள மயமாக்கப்பட்டதன் காரணமாக வங்கிகள் உலகமெங்கும் பெறக்கூடிய கொடுகடன் அட்டைகளையும் வழங்கத் தொடங்கின.

இலங்கையில் தற்பொழுது 6 உள்ளூர் வங்கிகளும் 3 வெளிநாட்டு வங்கிகளும் கொடுகடன் அட்டைகளை வழங்குவதுடன் அவை விசாக்காட் (VISACARD) மற்றும் மாஸ்ரர் காட் (MASTER CARD) போன்ற புகழ்பெற்ற பன்னாட்டு வர்த்தகப் பெயர்களின் கீழேயே வழங்கப்பட்டுள்ளன.

தற்பொழுது தொழிற்படுகின்ற கடனட்டைகளுக்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

| | |
|---|---|
| i) கிளாசிக் அட்டை | CLASSIC CARD |
| ii) கோல்ட் அட்டை | GOLD CARD |
| iii) பிஸ்னஸ் அட்டை | BUSINESS CARD |
| iv) சர்வதேச கடன் அட்டை | INTERNATIONAL CREDIT CARD |
| v) சிமாட் அட்டை | SHIMART CARD |

மேலும் இக்கொடுகடன் அட்டையுடன் தொடர்புடையவர்கள் எல்லோரும் நன்மை அடைவதற்கு சந்தர்ப்பம் உண்டு. இக்கடன் அட்டையானது குறித்த தொகையை நிதிநிறுவனங்களிற்கு செலுத்தியவருக்கு அல்லது குறிப்பிட்ட வருமானத்திற்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கு அல்லது கூடிய அந்தஸ்து உடையவர்களுக்கு வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் சம்மதத்துடன் உரிய பத்திரங்களை இரண்டு பிணைதாரருடன் நிதிநிறுவனத்தில் அல்லது வங்கியில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இக் கொடுகடன் அட்டைகளில் பெருமளவு பயன்பாடு வங்கித் தொழில் துறைகளில் இருந்து கொடுகடனுக்காக எழும் மரபு ரீதியான கேள்வியைக் குறைக்கக் கூடும் கொடுகடன் அட்டைகளின் பயன்பாடு தனியார்துறைக் கொடுகடனின் விரைவான வளர்ச்சிக்கு வழிவகுக்கும். ஒருமாத காலத்தில் பயன்படுத்தப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படும். இக்கொடுகடன்கள் வர்த்தக வங்கிகளின் ஐந்தொகையில் பிரதிபலிக்க மாட்டா. மேலும் இக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பொதுமக்களுக்கு குறைந்தளவு காசு தேவைப்படாமையால் பொதுமக்களின் காசு உடமைகள் குறைவடைகின்றன. பொதுமக்களின் காசு உடமைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி பணபெருக்கத்தையும் அதிகரிக்கக் கூடும். மேலும் உலகின் பல நாடுகளிலும் கொடுகடன் அட்டையை ஏற்றுக் கொள்ளும் தன்மையானது பயணிகளுக்கு பெருமளவு வசதிகளை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இலங்கையின் கொடுகடன் அட்டைகளின் பயன்பாடுகள் பிரபல்யம் அடைந்து வருகின்றது. இவ் அட்டைகளின் பயன்பாட்டுடன் அனுகூலங்கள் பல காணப்படுவதுடன் அட்டைகளைப் பயன்படுத்துவோர் மிதமிஞ்சிய கடன்களைப் பெறவும், அதன்மூலம் நிதியின் இடர்பாடுகளைஎதிர்நோக்க வேண்டி ஏற்படல், இதில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் காரணத்தால் கைமாற்றத் தகாத ஆவணமாகவும் காணப்படுவதும் வாடிக்கையாளர் கடனை மீளச்செலுத்தாத பட்சத்தில் நிதிநிறுவனத்திற்கு அல்லது வங்கிகளை அது அறவிடமுடியாக் கடன் ஆவதும் இதன் பிரதிகூலங்களாக அமைந்துள்ளன.

இக் கொடுகடன் அட்டைகளைப் பயன்படுத்துவதில் இவ் அட்டையை வைத்திருப்பவர் போதுமான கவனத்துடன் நடந்து கொள்ள விடின் கொடுகடன் அட்டைகளின் மோசடி பயன்பாட்டிற்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

DATA:

❀ இலங்கையின் வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கொடுகடன் அட்டைகள் பின்வருமாறு

| | 1997 | 1998 |
|---|---|---|
| கொடுகடன் அட்டைகளின் மொத்த எண்ணிக்கை | 52882 | 85964 |
| உள்ளூர் அட்டைகள் | 29985 | 59043 |
| சர்வதேச அட்டைகள் | 22897 | 25584 |
| | | |
| ஆண்டு முடிவின் வெளிநின்ற கடனட்டைகள் (மில்ரூபா) | 874mk | 1482mk |
| உள்ளூர் அட்டைகள் | 358mk | 318mk |
| சர்வதேச அட்டைகள் | 516 mk | 1065mk |
| | | |
| வட்டி வீதம் | 20-33 | 20-33 |
| வணிகர்களிடம் இருந்தான தரகு | 2-5 | 2-5 |

❀மேலும் மிக அண்மையில் தொழில் நுட்பமுன்னேற்றங்களுடன் மற்றைய அபிவிருத்திகளுடனும் இணைந்து செல்லும் விதத்தில் " மின்னியற் பணப்பை" என அழைக்கப்படக் கூடிய "சிமாட் அட்டையை" இலங்கையில் முதற் தடவையாக 1998இன் நடுப்பகுதியில் மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியது. இவ்அட்டை பல்வேறு திட்டங்களைக் கொண்டதொரு அட்டையாகும். இதனை வைத்திருப்பவர் அதனை பல மின்னியல் பணப்பையாக கொடுகடன் அட்டையாக தனியக்கக் கூற்றும் பொறி அட்டையாக பயன்படுத்தவதற்கு அனுமதிக்கின்றது.

அத்துடன் சிமாட் அட்டை இது வைக்கப்பட்டிருக்கும் மின்னியல் பணப்பையிலிருந்து எந்த ஒரு சிமாட் அட்டை வணிகரின் விற்பனைப் பீடத்திலோ அல்லது வங்கிக் கிளைகளில் வைப்பிலிடவோ அல்லது மீளப் பெறவோ முடியும். மேலும் சிமாட் அட்டையைப் பயன்படுத்துபவர்கள் தமது கணக்கிலிருந்து மீள விரும்பும் நிலையங்களில் மின்னியல் பணத்தினை மீள நிரப்பிக் கொள்ளும் வசதியையும் கொண்டுள்ளன அதேநேரம் வரையறுக்கப்பட்ட "சம்பத் வங்கி " Set அல்லது மாஸ்ரோ அட்டை வசதிகளுடன் பற்று அட்டைகளையும் தொடர்ந்து வழங்கியது.

⁕ 1998 11 வர்த்தக வங்கிகள் 68 தன்னியக்க கூற்றுப் பெறுதிகளை நிறுவியதுடன் தன்னியக்க கூற்றும் பொறிகளின் எண்ணிக்கை 1998 இன் இறுதியில் 270ற்கு உயர்ந்துள்ளது.

⁕ 9 வர்த்தக வங்கிகளும் தொடர்ந்தும் கடனட்டை வசதிகளை வழங்கி வருகின்றன.

⁕ 1998 December இறுதியில் ஏறத்தாழ 85964 கொடுகடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

*T. Thivagar*
2000 Com


ஏனி சிறப்புற வாழ்த்துகிறோம்

நெல்லைக் குமரன் ரேடர்ஸ்

பலசரக்குச் சாமான்களை மலிவாகவும் தரமாகவும்
பெற்றுக்கொள்ள

நாடவேண்டிய ஸ்தாபனம்

நெல்லைக் குமரன் ரேடர்ஸ்

பிரதான வீதி நெல்லியடி

# நன்றிகள்

* ஏணி வெளியீடு தொடர்பாக எமக்கு ஆசிகள் கூறி எம்மை ஊக்குவித்த மன்றக் காப்பாளர், கல்லூரி அதிபர் திரு. க. அம்பலவாணர் அவர்களுக்கும்
* அச்சுருவில் எமது ஏணி வெளிவர பல வழிகளில் உதவியும் ஆசியும் வழங்கிய உபஅதிபர் திரு. க. செல்வராசா அவர்களுக்கும்
* ஏணி இதழ் மலர்ந்து மணம் பரப்ப வேண்டும் என மனமார வாழ்த்தி ஆசியுரை வழங்கிய கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவராசா அவர்களுக்கும்
* ஏணி இதழுக்கு ஆசியும் வாழ்த்தும் வழங்கிய கோட்டக் கல்வி அலுவலர் திரு. புஸ்பலிங்கம், பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. க. தணிகாசலம் ஆகியோருக்கும்
* எமது உயர்தர மாணவ மன்றம் சிறப்புற இயங்கவும் அதன் ஓர் வெளிப்பாடான ஏணி இதழை வெளியிடவும் முன்னின்ற உப காப்பாளர், பகுதித் தலைவர் திரு. சோ. கருணேஸ்வரன் அவர்களுக்கும்
* ஆக்கங்களைப் பொறுப்பேற்று பாட ரீதியான ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் செவ்வை பார்த்து ஒருங்கமைத்துத் தந்த ஆசிரியை செல்வி. ந. கல்யாணி அவர்களுக்கும்
* கணனி மூலம், அழகுற அச்சு வடிவம் கொடுத்து நூலுருவில் ஏணி வெளிவர அரும்பாடுபட்ட ஆசிரியர் திரு. க. கமலநாதன், மன்றத்தின் பெரும் பொருளாளர் திரு. கு. உதயமூர்த்தி ஆகியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த சகல ஆசிரியர்களுக்கும்
* எமது நூலை ஆய்வுரை செய்த அன்பர்களுக்கும்
* எமது ஏணி வெளியீட்டிற்கு விளம்பரங்கள் தந்துதவிய வியாபார ஸ்தாபனங்களுக்கும்
* இவ் விளம்பரங்களைச் சேகரிப்பதற்கு தோளோடு தோள் நின்றுழைத்த மாணவர்களுக்கும், ஏணிக்கு ஆக்கங்களைத் தந்த மாணவர்கள், மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் பலவும் செய்த ஏனைய சக மாணவ மாணவியருக்கும்
* அட்டைப்படத்தை அழகுற வரைந்து தந்த திரு. சி. இரகுவரன் அவர்கட்கும்
* ஏணி இதழின் கையெழுத்துப் பிரதி அழகுடன் திகழ எழுத்துருவம் வழங்கிய மாணவர்களுக்கும், ஓவியம் வரைந்தவர்களுக்கும், புத்தக வடிவில் அமைத்துத் தந்த அச்சகத்தாருக்கும்
* நிறைவாக எமக்குப் பல்வேறு வழிகளில் உதவிகள் ஒத்தாசைகள் ஆலோசனைகள் வழங்கிய அனைவருக்கும்

* எமது மனங்கனிந்த நன்றிகள் *

செல்வன் த. திவாகர்
செயலாளர்
உ. த. மா. மன்றம்

யா. விக்னேஸ்வராக் கல்லூரி
கரவெட்டி

# உயர்தரமாணவர் மன்ற உறுப்பினர்கள் 1999.

## 2001 கலை

1) வே. பாலமுருகன் கரவெட்டி மேற்கு கரவெட்டி
2) த. ராஜேஸ். கரவெட்டி தெற்கு கரவெட்டி
3) க. ஜெகஜீம்மன் கரவெட்டி தெற்கு கரவெட்டி
4) பா. நிஜாந்தன். கரவெட்டி கிழக்கு கரவெட்டி
5) ஆ. ஆனந்தீஸ்வரன். கரவெட்டி மேற்கு கரவெட்டி
6) சோ. ஜனார்த்தனன். அண்ணா சிலையடி கரணவாய் கரவெட்டி.
7) ஜ. ஜோகானந்தன். கரவெட்டி மத்தி கரவெட்டி
8) கு. கண்ணதாசன் கவுந்தில் கரவெட்டி – மத்தி கரவெட்டி
9) ச. சுகுணேஸ். அண்ணாசிலையடி கரணவாய் கரவெட்டி
10) தி. சௌவுந்தரன் செல்வம் பூங்கா அல்வாய் மேற்கு அல்வாய்.
11) இ. கிருஸ்ணமூர்த்தி. காளிகோவிலடி க வெட்டி – கிழக்கு கரவெட்டி
12) ச. தீபராசா. அண்ணாசிலையடி கரணவாய் கரவெட்டி.
13) க. துசாந்தன். கரணவாய் மேற்கு கரவெட்டி.
14) சி. மதுசீலன். அண்ணாசிலையடி ,கரணவாய், கரவெட்டி.
15) கா. பிரபாகரன். கரவெட்டி ,மேற்கு , கரவெட்டி
16) சு. சிவகணேஸ் கரவெட்டி ,வடக்கு ,கரவெட்டி
17) கு. [illegible] நிதீபன் உடுப்பிட்டி ,தெற்கு . உடுப்பிட்டி.

18) து. துஸ்யந்தினி கரவெட்டி , தெற்கு , கரவெட்டி
19) வ. சர்வோதினி கரவெட்டி , தெற்கு , கரவெட்டி
20) மா. கலையரசி கரவெட்டி , கிழக்க . கரவெட்டி
21) மா. பிரியதர்சினி கரவெட்டி, மத்தி ,கரவெட்டி
22) வி. பிரேமிளா கரவெட்டி , மத்தி, கரவெட்டி
23) சி. சுதர்சினி கரவெட்டி , மத்தி, கரவெட்டி.
24) அ. அகிலா கரவெட்டி, மேற்கு , கரவெட்டி
25) த. தர்சினி கரணவாய் ,கிழக்கு, கரவெட்டி
26) இ. புவனமதி கரணவாய் , தெற்கு , கரவெட்டி
27) சு. தர்சினி கரணவாய் , தெற்கு ,கரவெட்டி
28) பா. சுகந்தினி துன்னாலை , தெ க , கரவெட்டி
29) க. ரவிப்பிரியா கரவெட்டி , கிழக்கு , கரவெட்டி
30) அனுசிகா கரவெட்டி , கிழக்கு , கரவெட்டி
31) க. யாழினி கரவெட்டி, மத்தி , கரவெட்டி
32) வே. சுதர்ஜினி கரவெட்டி, தெற்கு , கரவெட்டி
33) ஜெ. தேனுகா கரணவாய் ,கிழக்கு . கரவெட்டி
34) சோ. பரமேஸ்வரி கரணவாய் ,கிழக்கு , கரவெட்டி
35) தி. விஜிதா கரணவாய் , தெற்கு , கரவெட்டி
36) கி. நிரோஜினி கரவெட்டி , கிழக்கு . கரவெட்டி
37) ந. அனுசா கரவெட்டி , மேற்கு , கரவெட்டி
38) க. சுமங்கலி கரவெட்டி , மத்தி ,கரவெட்டி

| | |
|---|---|
| 39) க. அனுசா | காரணவாய் கிழக்கு, கரவெட்டி |
| 40) பா. ஜயந்தி இந்துமதி | காரணவாய் தெற்கு, கரவெட்டி |
| 41) இ. காயத்திரி | கரவெட்டி கிழக்கு, கரவெட்டி |

## 2001 வர்த்தகம்

| | |
|---|---|
| 42) மா. பஞ்சாட்சரம் | காரணவாய் கிழக்கு, கரவெட்டி |
| 43) தி. திலீபன் | காரணவாய் தெற்கு, கரவெட்டி |
| 44) சி. பிரகலாதன் | கரவெட்டி வடக்கு, கரவெட்டி |
| 45) வே. ராஜதீபன் | கரவெட்டி மேற்கு, கரவெட்டி |
| 46) பா. ஆருரன் | கரவெட்டி மேற்கு, கரவெட்டி |
| 47) சி. சிவசேயோன் | கரவெட்டி கிழக்கு. கரவெட்டி |
| 48) க. ஹரிகரன் | கரவெட்டி மத்தி, கரவெட்டி |
| 49) ச. மதன் | வரணி வடக்கு, வரணி |
| 50) க. இராகுலன் | அரசடி வீதி கரவெட்டி |
| 51) க. சிவதரி | கரவெட்டி மேற்கு, கரவெட்டி |
| 52) யோ. ஆர்த்தி | காரணவாய் கிழக்கு, கரவெட்டி |
| 53) சி. சிவாஜினி | கரவெட்டி மேற்கு. கரவெட்டி |
| 54) சி. சிவமதுரா | துரையப்பா கோட்டம், நவிண்டில் |

## 2001 விஞ்ஞானம்

| | |
|---|---|
| 55) ஸ். கணேஸ்வரன் | அல்வாய் கிழக்கு. அல்வாய் |
| 56) பா. அகிலன் | கரவெட்டி வடக்கு, கரவெட்டி |
| 57) மு. றமேஸ் | கரவெட்டி கிழக்கு, கரவெட்டி |
| 58) ம. கஜேந்திரன் | காரணவாய் கிழக்கு, கரவெட்டி |
| 59) அ. வாகீசன் | கரவெட்டி மத்தி, கரவெட்டி |
| 60) செ. வசீகரன் | நெல்லியடி கரவெட்டி |
| 61) க. ரவிசங்கர் | வரணி வடக்கு, வரணி |
| 62) ம. அஜந்தன் | அல்வாய் மேற்கு, அல்வாய் |
| 63) மா. சிவசுப்பிரமணியம் | காரணவாய் கிழக்கு, கரவெட்டி |
| 54) இ. தயானி | நெல்லியடி, கரவெட்டி |
| 55) பி. ஜெயச்சந்திரா | காரணவாய் கிழக்கு, கரவெட்டி |
| 56) ம. சுமனா | கரவெட்டி கிழக்கு, கரவெட்டி |
| 57) இ. தாட்சாயினி | கரவெட்டி மத்தி, கரவெட்டி |

## 2000 கலை

| | |
|---|---|
| 1) ந. கௌதமன் | கரவெட்டி மேற்கு , கரவெட்டி |
| 2) ம. மதிவதனன் | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 3) சி. [illegible] மதீபன் | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 4) கி. சந்திரகுமார் | கரவெட்டி கிழக்கு . கரவெட்டி |
| 5) சி. ஸ்ரீரகுபதி | கரவெட்டி மத்தி , கரவெட்டி |
| 6) ச . சுதர்சன் | கரணவாய் தெற்கு . கரவெட்டி |
| 7) செ. தில்லைவாசன் | கரவெட்டி மத்தி ,கரவெட்டி |
| 8) சி. ராஜசுதன் | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 9) க. கங்காதீபன் | கரவெட்டி மத்தி , கரவெட்டி |
| 10) ஈ. சுதாகர் | கரவெட்டி மத்தி , கரவெட்டி |
| 11) சி. கேதீஸ்வரன் | கரவெட்டி கிழக்கு , கரவெட்டி |
| 12) சி. செல்லக்குமார் | கர[illegible]வாய் தெற்கு , கரவெட்டி |
| 13) த. தவலிங்கம் | கர[illegible]வெட்டி கிழக்கு , கரவெட்டி |
| 14) தி. தவக்குமார் | கரவெட்டி கிழக்கு , க[illegible]வெட்டி |
| 15) பா.சுகந்தன் | அல்வாய் தெற்கு , அல்வாய் |
| 16) ச. ரமணன் | வரணி வடக்கு , வரணி |
| 17) ஜெ.பிரதீபன் | கரவெட்டி கிழக்கு , கரவெட்டி |
| 18) சி. கணேசன் | கரவெட்டி மேற்கு , கரவெட்டி |
| 20) செ. கோகிலா | கரவெட்டி தெற்கு ,கரவெட்டி |
| 21) கு. விணோஜிதா | கரணவாய் கிழக்கு , கரவெட்டி |
| 22) இ. கமலகுமாரி | வியாலாவத்தை , நெல்லியடி |
| 23) நி. காயத்திரி | கரவெட்டி மத்தி , கரவெட்டி |
| 24) கு. நித்தியாஞ்சலி | கரணவாய் கிழக்கு , கரவெட்டி |
| 25) பொ. மோகனவதனி | கரவெட்டி மத்தி , கரவெட்டி |
| 26) அ. பிரபாளனி | கரவெட்டி மேற்கு கரவெட்டி |
| 27) ச. நிசாந்தினி | கரவெட்டி மத்தி . கரவெட்டி |
| 28) இ. ராதை | கரவெட்டி கிழக்கு , கரவெட்டி |
| 29) க. ஜெயந்தினி | கரவெட்டி மேற்கு , கரவெட்டி |
| 30) ந. குபேந்தினி | கரவெட்டி கிழக்கு , கரவெட்டி |
| 31) ந. சாந்தினி | கர[illegible]வெட்டி மேற்கு , கரவெட்டி |
| 32) க. கீதா | கரவெட்டி மத்தி கரவெட்டி |
| 33) மு. ராதிகா | கரவெட்டி மேற்கு கரவெட்டி |
| 34) தி. கோமதி | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 35) யோ. செல்வலக்ஷ்மி | வரணி மாசேரி , வரணி |
| 36) யோ. கெங்காகௌரி | வரணி மாசேரி ,வரணி |

## 2000 வர்த்தகம்

| | |
|---|---|
| 37) க. சுதாகர் | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 38) த. திவாகர் | கரவெட்டி மத்தி , கரவெட்டி |
| 39) ச. சதீஸ்வரன் | கரவெட்டி மத்தி , கரவெட்டி |
| 40) தி. யோகேந்திரா | கரவெட்டி மத்தி , கரவெட்டி |

| | | |
|---|---|---|
| 41) | பா . வாசவன் | கரணவாய் தெற்கு . கரவெட்டி |
| 42) | அ . பராகரன் | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 43) | ச . தயாளன் | வரணி வடக்கு .வரணி |
| 44) | சி . ஜெயநாதன் | கரவெட்டி கிழக்கு ,கரவெட்டி |
| 45) | இ. கங்கைமைந்தன் | கரவெட்டி மேற்கு , கரவெட்டி |
| 46) | வி . லோகேஸ்வரன் | கரணவாய் தெற்கு கரணவாய் |
| 47) | ச . ராஜ்குமார் | கரணவாய் கிழக்கு , கரவெட்டி |
| 48) | யோ.றொபேட்சன்யூட் | கரவெட்டி வடக்கு கரவெட்டி |
| 49) | சி . சிவகௌரி | கரணவாய் கிழக்கு , கரவெட்டி |
| 50) | க . சந்தியா | கரவெட்டி மேற்கு , கரவெட்டி |
| 51) | இ . பத்மலோஜினி | கரவெட்டி தெற்கு , கரவெட்டி |
| 52) | த . ராஜதாரணி | கரணவாய் தெற்க , கரவெட்டி |

2000 விஞ்ஞானம்


| | | |
|---|---|---|
| 53) | க . பிரதீப் | கரவெட்டி மத்தி காவெட்டி |
| 54) | செ.றோய் நிக்சன் | கரணவாய் கிழக்கு , கரவெட்டி |
| 55) | சி . சிவதீபன் | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 56) | க. கஜேந்திரன் | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 57) | க . விமல்ராஜ் | கரவெட்டி மேற்கு , கரவெட்டி |
| 58) | வி . சசிகரன் | கரவெட்டி மத்தி , கரவெட்டி |
| 59) | ந . பிரதீபன் | கரவெட்டி கிழக்கு , கரவெட்டி |
| 60) | சி . ஜெயானந்தன் | கரவெட்டி கிழக்கு , கரவெட்டி |
| 61) | க . நிருபன் | கரவெட்டி மேற்கு , கரவெட்டி |
| 62) | த .துஷ்யந்தி | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 63) | நா . நயனா | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 54) | பா . மனோஜா | கரணவாய் தெற்கு , கரவெட்டி |
| 55) | ஆ . கௌரி | கரணவாய் தெற்க , கரவெட்டி |
| 57) | அ. அனுராதா | கரவெட்டி மத்தி , கரவெட்டி |

ஏனி சிறப்புற எமது வாழ்த்துக்கள்.

## என் . எஸ் . ஆர் கடைச்சல் தொழிலகம்

முதன்வுரச்சாலை நெல்லியடி..கரவெட்டி

சகல விதமான கடைச்சல் வேலைகட்கும்
நாடுங்கள்



## N.S.R கடைச்சல் தொழிலகம்

MAIN STREET - NELLIADY

ஏனி ஏற்றம் பெற வாழ்த்துகிறோம்

## லிபேட்டி மோட்டோஸ்.

மோட்டார் உதிரிப்பாகங்களுக்கும் சகலவிதமான
பற்றரி வகைகளுக்கும்

நாடுங்கள்



## லிபேட்டி மோட்டோஸ் கவுஸ்

பஸ் நிலையம், நெல்லியடி, கரவெட்டி.

ஏணி சிறப்புற எமது வாழ்த்துக்கள்.

## ஸ்ரீ கிருஸ்ணா கிறீம் ஹவுஸ்.

கொடிகாம வீதி நெல்லியடி.

சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட

| ஸ்பெசல் | பாலுதா சர்பத் |
|---|---|
| புருட்சலட் | கிறீம் சர்பத் |
| நட்ஸ் கிறீம் | சர்பத் |
| ஜெலி கிறீம் | பெசன் யூஸ் |
| சொக்லேற் கிறீம் | நெல்லி ரசம் |
| வனிலா கிறீம் | ஒரேஞ் யூஸ் |

என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்

## SRI KRISHNA CREAM HOUSE.

**KODIKAMA ROAD - NELLIADY**

---

## ஏணி ஏற்றம் பெற வாழ்த்துகிறோம்

**மருதம் கொமினிக்கேசன்.**

T.P - 070-212229 ,070-212329
FAX - 070-212371

- வெளிநாட்டு இன்கமிங் கோல்களுக்கு நிமிடம் 3 /=
- போட்டோ கொப்பி ஒரு பிரதிக்கு 3 ரூபா மட்டுமே.

மேலும் தொகையான பிரதி எடுப்பவர்களுக்கு கழிவு வழங்கப்படும்.
100 க்கு மேற்பட்ட பிரதிக்கு 2 வீதம் மட்டுமே.

மேலும்

திருமண அழைப்பிதழ்கள் புத்தகங்கள் நினைவஞ்சலிகள்
என்பன கலர் போட்டோ வசதிகளுடன் அதி நவீன கம்பியூட்டர்
சாதனங்கள் மூலம் செய்து கொடுக்கப்படும் .

**மருதம் கொமினிக்கேசன்**

நெ.ம.ம.வி.தெரு நெல்லியடி , கரவெட்டி

ஏணி - 1999

புகழ் மணம் பரப்ப வாழ்த்துகிறோம்

கட்டைவேலி நெல்லியடி

ப.நோ.கூ. சங்கம்

கரவெட்டி.

ஏணி மணம் பரப்ப வாழ்த்துகிறோம்

**கீறோ றெக்கோடிங் சென்ரர்**

**உங்களுக்குத் தேவையான பழைய புதிய
பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்,
படங்களை ஒளிப்பதிவு செய்து கொள்ளவும்,
இலத்திரனியல் பொருட்களை
மலிவாகப் பெற்றுக் கொள்ளவும்
நாடுங்கள்.**

HERO RECORDING CENTRE

*MAIN STREET NELLIYADY.*